ஏப்ரல் 17 - 23, 2005
April 17 - 23, 2005
16.00
24 பக்கங்கள்
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

வார மலர்



# அரசியல் வம்பு



அம்பி

## அமைச்சர்கள் மோதல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த பிரமுகரும், நாட்டைக் காக்கும் அமைச்சில் 'பிரதி'யாகப் பதவி வகிப்பவருமான அவர், அரசாங்கத்தின் இன்னுமொரு அமைச்சருடன் முட்டி மோதுகின்றாராம்.

தனிப்பட்ட பிரச்சினையே இதற்குப் பிரதான காரணம். காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் உயர் பதவியில் இருந்த அவரது மகன் அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டமை குறித்தே இந்த மோதல். பதவிநீக்கம் குறித்து அரசாங்க மேல்மட்டத்திலும் - குறிப்பிட்ட 'பிரதி' முறையிட்டுள்ளார். எனினும் அவரது மகன் பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கான காரணத்தை மேற்படி ஆணைக் குழுவிற்குப் பொறுப்பான அமைச்சர், ஜனாதிபதியிடம் பவ்விய மாக ஏற்கனவே எடுத்துக் கூறிவிட்டாராம். ஆனாலும் சண்டை முடிந்தபாடில்லை.

## ஜே.வி.பி அதிருப்தி

இப்போதெல்லாம் அமைச்சரவைக் கூட்டங்களில் ஜனாதிபதி கலந்து கொள்ளாமல் தவிர்த்து வருகிறார். இதில் ஜே.வி.பி. அமைச்சர்களுக்குக் கடும் அதிருப்தி. அமைச்சரவைக் கூட்டமென்பது மிக முக்கியமான ஒன்று. இதற்கு தாமதமாக வருவது, அல்லது கூட்டம் நடைபெறும்போது இடைநடுவே எழுந்து செல்வது, சமுகமளிக்காமல் தட்டிக்கழிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பது ஜே.வி.பியின் கருத்து.

இந்த விடயத்திற்காக கூடிய விரைவில் தனது மறைமுகமான எதிர்ப்பொன்றை ஜனாதிபதிக்குத் தெரிவிக்க தயாராகிறது ஜே.வி.பி. ஜனாதிபதியின் இத்தகைய ஒழுங்கீனங்களால் அவசரமான அமைச்சரவைப் பத்திரங்களை ஆராய முடியாமலுள்ளது என்கிறது ஜே.வி.பி. அதுவும் சரிதான்.

## எஸ்.பி.யின் கடிதம்

கட்சித் தலைவரின் செயற்பாடுகளை விமர்சித்து சிறையிலிருக்கும் எஸ்.பி.திஸநாயக்க கட்சித் தலைமைத்துவத்திற்கு அனுப்பிய கடிதம் ஊடகங்களில் செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டமை அந்தக் கட்சிக்குள் புயலை உருவாக்கியிருக்கிறது.

இது குறித்து பலரும் எஸ்.பிக்கு நெருக்கமானவர்களுடாக அவரின் கருத்தறிய விரும்பினராம். அவர்களுக்கெல்லாம் எஸ்.பி. சொன்ன பதில் என்ன தெரியுமா? ''நான் ஒரு கடிதம் அல்ல, மூன்று கடிதங்களை அனுப்பினேன்'' என்பதுதான். சிறைவாசம் அனுபவித்துவரும் தம்மை விடுதலை செய்வதற்காக உருப்படியான எந்த நடவடிக்கைகளையும் கட்சித் தலைவர் எடுக்கவில்லையென்று தம்மைச் சந்தித்தவர்களிடம் கூறிக் குமுறுகிறார் எஸ்.பி.

இதேவேளை, அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் இருவர் எஸ்.பி.யைச் சந்தித்தனர் என்பதுதான் பிந்திய செய்தி.

## பேட்டி வேண்டாம்

ஊடகங்களுக்கு இப்போதைக்கு பேட்டிகளை வழங்க வேண்டாமென்று சிரேஷ்ட அமைச்சர்களுக்கும், தனது ஆலோசகர்களுக்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளாராம்.

அண்மையில் பேட்டியொன்றைத் தருமாறு கேட்டு, வெளிவிவகார அமைச்சரை அவருக்கு நெருங்கிய செய்தியாளர் ஒருவர் அணுகியபோது தயவு பண்ணி மறுத்துவிட்டார் அமைச்சர்.

ஊடகங்களுக்கு அரச பிரதிநிதிகள் அளிக்கும் பேட்டிகள் இல்லாத பிரச்சினைகளை உருவாக்கி, இருக்கும் பிரச்சினைத்களை தீவிரமாக்குகிறன என்கிறாராம் சந்திரிகா. சபாஷ்.

## விடுமுறைப் பயணம்

சித்திரைப் புத்தாண்டு விடுமுறைக்காக லண்டன் சென்ற சந்திரிகா இந்தப் பயணம் குறித்து தனக்கு நெருக்கமானவர்களிடம் இறுதி நேரத்தில் தான் கூறினாராம்.

இந்த விடுமுறையின்போது தாம் நுவரெலியா செல்லவிருக்கிறார் எனவும், தனது பணியாளர்களை இந்தியா சென்றுவருமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார் ஆனால், இறுதி நேரத்தில் தமது பிள்ளைகளின் வேண்டுகோளுக்கமைய அவர் லண்டன் செல்ல வேண்டியேற்பட்டது.

''அரசியல் வேலைகளில் மூழ்கிக்கிடக்காமல் எங்களையும் கவனியுங்கள்'' என்று தொலைபேசியில் வேண்டுகோள் விடுத்தனராம் ஜனாதிபதியின் பிள்ளைகள். உடனே ராஜவேலைகளை முட்டை கட்டி வைத்துவிட்டு லண்டன் புறப்பட்டார் ஜனாதிபதி லண்டனுக்கு செல்லும் போது விமானம் தாமதமாக புறப்பட்டதால் ஒரு மணிநேரம் விமான நிலையத்தில் இருந்தார் சந்திரிகா. மற்றவர்களை மணிக்கணக்கில் காக்க வைப்பது அம்மையாருக்குத் தான் வழக்கம். அவருகேவா....?

# சந்திரிகாவின் 'பாச்சா' ஜே.வி.பி யிடம் பலிக்குமா?

கொழும்பு அரசியலில் ஜனாதிபதி சந்திரிகாவின் அடுத்த அதிரடி நடவடிக்கை என்ன? இதுதான் இன்று பலதரப்பிலிருந்தும் எழும் கேள்வி.

ஜனாதிபதித் தேர்தலொன்றுக்கு அவர் செல்வாரா? அரசமைப்பு திருத்த மக்களிடம் அனுமதிபெறும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவாரா? நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத்தேர்தலொன்றிற்குச் செல்வாரா? இல்லை இவை எதனையும் செய்யாமல் தமது பதவிக்காலத்தை நீடித்துக் கொள்வதற்காக வேறு எதையாவது செய்வரா? என்று குழம்பி மண்டை காய்ந்து போய் இருக்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்களும் அவதானிகளும்.

ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரை, தமது பதவிக் காலத்தை எவ்வாறு நீடித்துக்கொள்ளலாம் என்பதிலேயே அவர் குறியாக இருக்கிறார். எதைச் செய்தாவது அரசியல் புரட்சியொன்றுக்கு சந்திரிகா வித்திடுவார் என்பது திண்ணம்.

நாட்டில் சமஷ்டி முறை மூலமான தீர்வொன்றை இனப்பிரச்சினை விடயத்தில் ஏற்படுத்துவதும், அதற்கான சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதும்தான் சந்திரிகாவின் முதற்கட்டத் திட்டமாகும்.

இரண்டாவதாக சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தித் தனது பதவிக்காலத்தை மேலும் நீடித்துக் கொள்வது அவரின் அடுத்த திட்டம். ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரை அரசியலில் அவர் எவ்வாறு வேண்டுமானாலும் காய்களை நகர்த்த நினைக்கலாம். நிறைவேற்று அதிகாரம் என்ற மந்திரக்கோல் அவர் கையில் இருக்கிறது. அது இருக்கும் வரை அவர் எதனையும் செய்யலாம். ஆணைப் பெண்ணாக்குவதைத் தவிர தமது திட்டங்களுக்கு நாடாளுமன்றத்திற்கு வெளியேயும், அரசாங்கத்திற்குள்ளேயும் முழுமையான ஆதரவைத் திரட்டிக் கொள்வது தான் அவர் முன் உள்ள பிரச்சினை.

ஜனாதிபதி சந்திரிகா என்னதான் சமார்த்தியமாகத் தீர்மானங்களை எடுத்தாலும் அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. அவற்றுக்கு வளைந்து கொடுக்காது. என்னதான் ஆட்சிப் பங்காளிகளாக அவர்கள் இருந்தாலும் ஜனாதிபதியின் திட்டங்களுக்குத் ஜே.வி.பி. துணைபோகாது.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை அவர்களுக்கு இந்த ஆட்சியில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆட்சியதிகாரம் தங்களிடம் இருக்க வேண்டுமென்று ஜே.வி.பி. எந்த திட்டத்தையும் இப்போது கொண்டிருக்கவில்லை. ஜே.வி.பி யின் திட்டமெல்லாம் அடுத்த பிரதான எதிர்க்கட்சியாக எப்படி வருவது என்பதைப் பற்றியதுதான்.

பதவியை நீடிக்க நினைக்கும் ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டங்களுக்குத் தாம் ஆதரவளிக்கப் போவதில்லையென்று ஜே.வி.பியினர் இப்போதே கூற ஆரம்பித்திருக்கின்றனர். ''சமஷ்டித் தீர்வினை சிங்களவர்களும், நாட்டின் கூடுதலான மக்களும் ஆதரிக்கிறார்கள். எனவே சமஷ்டி தீர்வொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தினால் 30 வீதமான மக்களாதரவு கிடைக்கும்.'' என்று சந்திரிகா கூறியிருந்தார். அந்தச் சூடு முன் ஜே.வி.பி. இந்தக் கருத்தை கடுமையாக விமர்சித்திருக்கிறது.

அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, ஜனாதிபதியின் கூற்றை மறைமுகமாக சாடினார். சமஷ்டிக்கெதிரான தங்களின் நிலைப்பாட்டை அவர் வெளிக்காட்டியிருக்கிறார். முன்னதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பியிருந்த சோமவன்ஸ அனுராதபுரக் கூட்டத்தில் தமது கட்சியின் இனவாத நிலைப்பாட்டைப் பட்டவர்தனமாக வெளிக்காட்டியிருக்கிறார்.

இங்கு இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிடவேண்டும். ஜே.வி.பியை இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் தனது தேசிய மாநாட்டிற்கு ஏன் அழைத்தார்கள் என்றுஅக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரை பி.பி.சி. தமிழோசை கேட்டது ''ஜே.வி.பியை நாம் இனவாதக் கட்சியாக கருதவில்லை'' என்று கூறினார் அவர். உண்மையில் இந்திய கம்யூனிஸ்டுகளின் நிலைமை, அவர்களின் உலக அனுபவம் முதிர்ச்சியற்றது என்பதை அந்தப் பேட்டியைக் கேட்ட அனைவரும் புரிந்திருப்பர். சரி இனி விடயத்திற்கு வருவோம்.

ஜே.வி.பி. சமஷ்டி முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதையடுத்து சந்திரிகா, அந்த யோசனையை மீளாய்வு செய்ய வேண்டிய நிலை எழுந்திருக்கிறது.

## சர்வஜன வாக்கெடுப்பு

அரசியலமைப்பில் திருத்தம் செய்வதற்காக சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் திட்டம் வைத்துள்ளதாகக் கடந்தவாரம் அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சரும், ஜனாதிபதியின் சகோதரருமாகிய அனுர பண்டாரநாயக்க தெரிவித்திருந்தார்.

உண்மையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தையும் ஜே.வி.பி. முழுமையாக எதிர்க்கப்போகிறது. அதே அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட ஜே.வி.பியின் மூத்த அமைச்சரொருவர், ''அனுரவின் பேச்சு தேவையற்றதும், அர்த்தமற்றதுமான ஒன்று'' என்று தனக்கு நெருக்கமான பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். உண்மையில் அரசின் சர்வஜன வாக்கெடுப்புத் திட்டத்தையோ, அரசியலமைப்புத் திருத்தத்தையே அல்லது வேறு எந்தத் திட்டங்களையுமோ ஜே. வி.பி அறியாமலேயே இருக்கிறது. இல்லையானால் அறிதிருந்தும் அறியாதது போல் காட்டிக்கொள்கிறது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நடக்க வேண்டும் என்ற விடயத்தில் ஜே.வி.பி. உறுதியாக இருக்கிறது. இதை இப்போதே பகிரங்கமாகக் கூறிவிட்டு ஜனாதிபதியின் எதிர்ப்பை தேடிக் கொள்ள அதன் தலைவர்கள் விரும்பவில்லை.

ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெறவேண்டும். அதில் ஜே.வி.பி தனித்துப் போட்டியிட வேண்டும். வெற்றி என்பது அதன் இலக்கல்ல. ஆனால் மக்கள் மத்தியில் தமக்குள்ள செல்வாக்கை கணிப்பிட்டு அதற்கேற்ப அடுத்தகட்ட நகர்வுகளை மேற்கொள்ளவேண்டும். இவைதான் இன்றைய நிலையில் ஜே.வி.பி. வகுத்திருக்கும் திட்டங்களாகும்.

## நாடாளுமன்றக் கலைப்பு

இத்தகைய ஒரு நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு சந்திரிகா முயன்றால் அதுதான் அவரின் அரசியல் வாழ்வில் அவர் இறுதியாக மேற்கொண்ட தீர்மானமாக இருக்கும். ஜே.வி.பி. எவ்வாறாவது இதனைப் பயன்படுத்தி மக்களின் அனுதாபத்தைப் பெற்றுக் கொள்ளும். எனவே இவற்றையெல்லாம் சமாளிக்கும் வகையில் எவ்வாறு செயற்பட வேண்டும்? இதுதான் சந்திரிகா முன் இன்றுள்ள கேள்வி.



## நிலைமை எப்படி?

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மக்களின் மனோநிலை எப்படி இருக்கிறது? எவ்வாறான நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்? ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பியினருக்கும் மக்கள் மத்தியில் செல்வாக்கு எப்படி இருக்கிறது? போன்ற விடயங்களை ஆராய்ந்து

-சிவன்-

அறிக்கையொன்றை வழங்குமாறு கடந்த வாரம் ஜனாதிபதி, நாட்டின் புலனாய்வுத் துறையின் உயர்மட்ட அதிகாரியொருவரைக் கேட்டுக்கொண்டார் எனச் செய்திகள் கசிந்திருக்கின்றன. அறிக்கை கிடைத்த பின் ஜனாதிபதி என்ன செய்வார் என்பதில்தான் இந்த நாட்டின் எதிர்கால அரசியல் தங்கியிருக்கிறது.

அவரையும் அவரது கட்சியையும் பயன்படுத்தியே ஓர் உறுதியான அரசியல் கட்சியாகப் பரிணமித்துவிட்ட ஜே.வி.பியிடம் ஜனாதிபதி விடும் இந்தப் பாச்சா எல்லாம் பலிக்குமா என்பதுதான் மக்கள் கேட்கும் கேள்வி.

# மிஸ்டர் வேதாளம்

"அநியாயங்களுக் கெல்லாம் பெரிய அநியாயம் இது.... சீ.. இப்படி எல்லாம் செய்யக் கூடாது. எவ்வளவு பெரிய இடம்.. பிரபல்யமான இடம். உலகப் பிரசித்தி பெற்ற இடம். இதனைப் போய் இப்படியா? சே... என்ன உலகப்பா... இது?"என்ற படி நமது அறைக்குள் நுழைந்தார் வேதாளம்.

"என்ன வரும்போதே உமக்குள் கதைத்துக் கொண்டு வருகிறீர்? கடுமையான வெய்யில்– பின்னர் திடீரென மழை என்ற கால நிலைக்குள் சிக்கி தலை பழுதாகி விட்டதோ?" என்றோம்.

"சீ.. அப்படி எல்லாம் இல்லை. இந்த உலகத்தை நினைத்தால் கவலையாக இருக்கிறது... சே... பணமென்றால் எல்லோருக்கும் ஆசை வரும் தான். ஆனால் இவர்களுக்கும் இப்படி ஆசை வருகிறதே!"

"என்னய்யா... என்ன நடந்தது? சொல்லித் தொலையுமேன்"என்றோம் எரிச்சலாக.

'இல்லை கொழும்பிலே அதி பணக்காரர்கள் வாழும் இடத்திலே இருக்கும் வீடு அது. அந்த வீட்டின் பெருமை சொல்லி மாளாது. நாட்டை ஆளும் குடும்பமே அங்கே தான் வாழ்ந்தது. வளர்ந்தது. அந்த வீட்டிலே வசித்தவர்களில் தந்தை இலங்கையின் பிரதமராக இருந்தவர். தாயார் உலகில் முதலாவது பெண் பிரதமராக பதவி வகித்தவர். மகள் இப்போ ஜனாதிபதி ஆக இருக்கிறார். மகன் தற்போது அமைச்சராக இருக்கிறார்.'

"ஆம் அவர்களின் வீட்டுக்கு என்ன நடந்தது?"

"இவ்வளவு அரசியல் பாரம்பரியத்தில் ஊறியவர்கள் இருந்த வீட்டிலே இப்போது எவரும் வசிப்பதில்லை. பூட்டிக் கிடக்கும் இந்த சிறப்பான வீட்டை தற்போது இருப்பவர்கள் என்ன செய்ய வேண்டும்?"

"மறைந்த தங்கள் பெற்றோரின் நினைவிடமாக மாற்றி அதனை ஒரு சுற்றுலா மையமாக மாற்ற வேண்டும்."

"ஆம்.. அது சரி. ஆனால் அவர்கள் அந்த வீட்டை ஒரு ஹோட்டல் நடத்துவதற்கு வாடகைக்கு விட்டு விட்டார்களாம். இது பலரையும் முகம் சுளிக்க வைத்திருக்கிறதாம்."

"வேறன்ன.. மற்றவர்கள் தான் இல்லா விட்டாலும் உலகின் முதல் பெண் பிரதமர் வாழ்ந்த வீடல்லவா அது? அதனை அரசிடம் ஒப்படைத்து ஒரு நினைவிடமாக மாற்ற வேண்டாமோ?"



"அதுதானே.! அதனைவிடுத்து அந்த வீட்டை வாடகைக்கு விட்டு பணம் பார்ப்பது அநியாயமோ.. இல்லையோ?" என்றார்.

"நிச்சயமாக அநியாயம் தான். இதனை யாராவது ஜனாதிபதியிடம் சொல்லக்கூடாதோ?"

"சொல்வதற்கு அவரை சந்திக்க முடிந்தால் தானே! அவர் இப்போது பயங்கர பிஸி... தனது பதவிக் காலத்தை நீடிப்பதற்கு சட்டத்திலே உள்ள இண்டு இடுக்குகளை ஆராய்ந்து பார்ப்பதில் தீவிரமாக மினக்கெடுகிறார்."

"அது தான் அபிப்பிராய வாக்கெடுப்பு என்று முடிவாகிவிட்டதே!"

"அதற்கு உள்ளேயும் – வெளியேயும் பலத்த எதிர்ப்புக்களாம். எனவே வேறேதாவது வழியில் சட்டத்தை கொண்டுவந்து பதவியை நீடிப்பது தொடர்பாக தீவிர ஆலோசனைகளில் இருக்கிறாராம்."

"யாருடன் ஆலோசனை நடக்கிறதாம்?"

"இலங்கையில் உள்ள சட்டத்தை கரைத்துக் குடித்த சட்டத்தரணிகளை எல்லாம் கடந்த வாரம் முழுவதும் தனது மாளிகைக்கு அழைத்து ஆலோசனை நடத்தி இருக்கிறார்.

"ஆலோசனையில் என்ன முடிவு எடுக்கப்பட்டதாம்..?"

"அது தெரியவில்லை.. ஆனால் சட்டத்தரணிகளுடனான ஆலோசனையின் பின் தனக்கு நெருக்கமானவர்களையும் கூப்பிட்டு இது பற்றி ஆலோசித்து இறுதி முடிவு எட்டப்பட்டிருக்கிறதாம்."

"இவ்வாறான பதவி நீடிப்பு நிகழ்ந்தால் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அறிவிப்புக்கள் கிளம்பியிருக்கிறதே!"

"ஆமாம், ஆனால் முடிவுகள் ஆச்சரியமாக இருக்கும் என்கிறார்கள்.."

"அப்படி என்ன ஆச்சரியம்; சும்மா மேலெழுந்த வாரியாக சொல்லுமேன்?"

"அதாவது பதவியை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நிகழ்த்துவதை விட கிட்டத் தட்ட அதேஅளவு பணத்தைச் செலவிட்டு தற்போதைய நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு – புதிய தேர்தலை எதிர்கொள்வது என்பதும் திட்டமாக இருக்கலாமாம்."

"ஐயய்யோ... மீண்டும் பொதுத்தேர்தலா, அதனால் என்ன பயன் கிட்டப்போகின்றது?"

"தற்போது அரசினுள் இருந்து கொண்டு குழப்பம் பண்ணுபவர்களை வெட்டி விடுவது. தனிக்கட்சியாக மூன்றில் இரண்டை பெற்று தனது அரசியல் வாழ்வை நிலைநிறுத்திக்கொள்வது."

"அடடா பயங்கர திட்டமாக இருக்கும் போல் தெரிகிறது. அது சரி இதற்கு ஏன் இவ்வளவு கால தாமதம்; ஏற்கனவே செய்திருக்கலாமே!"

"எப்படி இந்த மாதத்தில் தானே – இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் முடிவடைந்தது.. இனிமேல் தானே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைக்க முடியும்."

"அதுவும் அப்படியோ?"

"அது சரி அரசின் உட்கட்டப்போர் என்ன நிலையில் இருக்கிறது?"

"தற்போது அம்மையாருக்கும் மங்கள சமரவீர அமைச்சருக்கும் இடையிலான நிழல் யுத்தமே தீவிரமாகியிருக்கிறது. எவ்வளவோ சொல்லியும் அரச ஊடகங்களில் ஜே.வி.பியினர் தொடர்பான செய்திகள் ஊதிப்பெரிதாக காட்டப்பட்டுவருகின்றன. இதனை நிறுத்தும் படி ஊடக அமைச்சரான மங்களவுக்கு – ஜனாதிபதி பல தடவைகள் இடித்துரைத்தார். ஆனால் அவர் கேட்பதாக இல்லை, இதனால் கடுப்பான அம்மையார் அரச ஊடகங்களில் எல்லாம் தனது ஆட்களை நியமித்து விட்டார். இது மங்களமானவருக்கு பெரும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தி விட்டதாம்".

"அது சரி வேறு ஏதாவது?"

"அவ்வளவு தான்" என்று கூறியவர் டாடா காட்டி விட்டுப் பறந்தார்."



# NATIONAL CHILD PROTECTION AUTHORITY


NO. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka.
Telephone: 94-2778911-14, Fax: 94-2778915, E.mail: ncpa@childprotecrion.gov.lk
Website: http:/www.childprotection.gov.lk

unicef

## சிறுவர் தொழிலாளர்களை தவறாக பயன்படுத்தும் முறைகள்

- அடிமைகளாக சேவையாற்றுதல்.
- சிறுவர்களை விற்றல் / சிறுவர்கள் சம்பந்தப்பட்ட சட்டவிரோத செயல்கள்.
- பரம்பரையாக வரும் தாசி தொழில்.
- போர்களுக்கு சட்டவிரோதமாக சிறுவர்களை இணைத்துக் கொள்ளல்
- தவறான முறையில் பொருள்களை உற்பத்தி செய்யப்பயன்படுத்தல்.
- போதைப் பொருள், மதுபான உற்பத்திகளுக்கு சிறுவர்களை இணைத்துக் கொள்ளல்.





### சிறுவர் தொழிலாளர்களை பயன்படுத்தி செய்யும் வேலைகள்

- உடல், உள, பாலியல் ரீதியான துஷ்பிரயோகம்.
- நிலத்தின் கீழ், நீரின் கீழ், அபாயகரமான உயரங்களின் சிறிய இடங்களில் சிறைப்பட்ட இடங்களில் தொழில் செய்தல்.
- அபாயகரமான இயந்திரங்களில் வேலை செய்தல், அதிக பாரமான வேலைகள், அல்லது பாரம் தூக்கும் வேலைகள் என்பன செய்தல்.
- இரவு நேரங்களில் அதிகநேரம் விழித்திருந்து வற்புறுத்தி வேலை வாங்குதல்.
- அதிக வெப்பம், சத்தம், சோர்ந்து போகக் கூடிய, ஆரோக்கியத்திற்கு பங்கம் விளைவிக்கும் வேலைகள்.

நாகரீகம் மிகுந்த பிரதேசங்களில் வாழும், தவறாக பயன்படுத்தப்படும் சிறுவர்கள் மற்றும் கிராமப்புறங்களில் இருந்து தொழிலுக்காக, பல்வேறு பிரச்சினைகளுக்காக நகர் நோக்கி வரும் சிறுவர்கள் அனைவரையும் சிறுவர் தொழிலாளர்களாக சர்வதேச தொழிலாளர் அறிக்கை தெரிவிக்கிறது. சிறுவர்களை தவறான முறையில் பயன்படுத்துவதற்கு எதிராக செயற்பட சில நிறுவனங்கள் உள்ளன: இவை அரசினால் செயற்படுத்தப்படுபவை போன்றே அரசுசார்பற்ற நிறுவனங்களாகவும் செயற்படுகின்றன.

இவைகளின் மூலம் சிறந்த சேவைகள் பெறப்படுகின்றன.

### பரிசுக்கான இவ்வாரக் கேள்வி

1. சிறுவர்கள் எவ்வாறு துன்புறுத்தப்படுகின்றனர்?

- அனுப்பப்படும் சரியான விடைகளில் பத்து விடைகள் தெரிவுசெய்யப்பட்டு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் பரிசில்கள் வழங்கப்படும்.
- விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஊடகப்பிரிவு
தேசிய சிறுவர் பாதுகாப்பு
அதிகாரசபை
330, தலவாகொட வீதி,

### அரசசார்பற்ற நிறுவனம்

தொழிற்சங்கங்கள், ஐ.நா மற்றும் ஏனைய நிறுவனங்கள், மக்கள் அமைப்புக்கள்

### அரசுசார்புடையவை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, தொழிலாளர் அமைச்சு, இலங்கை பொலிஸ்திணைக்களம், சிறுவர் நன்னடத்தை பாதுகாப்புத் திணைக்களம், கல்வி அமைச்சு, நீதி அமைச்சு, வெளியுறவு அமைச்சு, சுகாதார அமைச்சு.

இலங்கை சிறுவர் குறித்த சட்டகோவையில் 32ஆவது சரத்தில் சிறுவர் தொழிலாளர்களை அவற்றில் இருந்து பாதுகாப்பதற்கான விடயங்கள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று சார்க் உச்சி மாநாட்டில் இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதை முற்றாக நிறுத்த உறுதி எடுக்கப்பட்டுள்ளது. எதுஎப்படியிருப்பினும் சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது உலகின் அனைத்த மக்களின் கடமை ஆகும். இலங்கை முழுவதும் உள்ள வயதுவந்தோர், சிறுவர்களுக்கு சிறுவர் தொழிலாளர் குறித்த எதிர்ப்பை தெரிவிக்க உணர்த்த விழிப்புணர்வைக் கொண்டுவர பலவகையான போஸ்டர்களை தேசிய சிறுவர் அதிகார சபை வெளியிட்டுள்ளது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இந்த போஸ்டர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது குறித்த மேலதிக விடயங்களுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின 2778911-12-14 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளுங்கள்.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,
தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா
குறிப்பு : குதுமாலி மத்துமகே

## பித்தன் பதில்கள்



*ச.சதாசிவம், வவுனியா*

**கேள்வி:** பித்தா! ''மாலை முழுதும் விளையாட்டு'' என்று பாடிய பாரதியார் இப்போது உயிரோடு இருந்திருந்தால் ரியூஷன், ரியூஷன் என்று ஓடும் இன்றைய பாப்பாக்களைப் பார்த்து என்ன பாடியிருப்பார்?

**பதில்:**
*ஓடி ரியூஷனுக்குப் போ – பாப்பா..*
*நீ ஓய்திருக்கலாகாது பாப்பா...*
*கூடி ரியூற்றரிக்குப்போ பாப்பா..*
*அங்கே வாத்தியாரை வையாதே பாப்பா...*
*காலை எழுந்தவுடன் ரியூஷன்..*
*பின்பு ஓய்வு கொடுக்கும் பள்ளிக்கூடம்..*
*மாலை முழுதும் ரியூஷன்..*
*இதை வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா..*

என்று பாடியிருப்பார்.

*எஸ்.தமிழரசி, மல்லாவி.*

**கேள்வி:** அன்பின் பித்தா! மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திர தமிழீழம் மலரட்டும் என்று தீலீபன் கூறினார். தற்போது மக்கள் புரட்சி வெடித்து விட்டது என்று நினைக்கிறேன். சுதந்திர தமிழீழம் மலரும் நாள் எப்போது?

**பதில்:** எங்கே வெடித்தது மக்கள் புரட்சி? நான் காணவே இல்லையே..! இராணுவ வாகனங்கள் மோதினால் மட்டுமே எமது மக்களுக்கு உணர்ச்சி வெடிக்கிறது. புரட்சிகுமுறுகிறது. மற்றப்படி எங்கே வெடிக்கிறது புரட்சி. சந்திரமுகியை முதல் ஷோ பார்க்க வேண்டும் என்று பண்ணும் புரட்சியை நாட்டுக்காகச் செய்தால் எப்போதோ தமிழீழம் மலர்ந்திருக்கும். நமது மக்கள் தாண்ட வேண்டிய படிகள் இன்னும் அனேகம் இருக்கிறன.

*வி.சுகந்தன், பளை.*

**கேள்வி:** பித்துக் குட்டி! சிறுவயதிலே நிச்சயிக்கப்படும் திருமணத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** சம்பந்தப்பட்டவர்களின் சம்மதம் இல்லாமல் பெற்றோர்களும் – பெரியோர்களும் தங்கள் நலன்களை முன் வைத்து ஏற்படுத்தும் சம்பிரதாயச் சடங்கு. இவ்வாறான பால்ய திருமணம் முடித்தவர்களில் மகாத்மா காந்தியைத் தவிர வேறெவரும் நீண்ட காலம் சந்தோஷமாக வாழ்ந்தார்கள் என நான் அறியவே இல்லை.

*க.வாமதேவன், யோகபுரம்.*

**கேள்வி:** ஒரு பெண்ணின் பெருமையையோ அல்லது அழகையோ இன்னொரு பெண் புகழ்ந்து பேசுவதில்லையே என்ன காரணம் பித்து?

**பதில்:** பெருமைக்கும் – அழகுக்கும் உரிய பெண்ணைப் புகழ்ந்து பேசாத போதே பிடிக்க முடியாது. இந்த லட்சணத்தில் புகழ்ந்து பேசிவிட்டால்.... யப்பா...! தாங்க முடியுமா என்ற ஆதங்கம் ஒன்று. அடுத்தது எங்கே அவளை புகழ்ந்து பேசினால் நாம் மட்டமாகப் போய் விடுவோமோ என்ற பொறாமை.



*ப.மரிய யூலியற், யூனியன் குளம்.*

**கேள்வி:** மையடியர் பித்துக் குட்டி! பெண்கள் வேலைக்குப் போவது சரியா தவறா?

**பதில்:** வீட்டிலே இருந்து வெட்டி வேலை பார்க்காமல் ஏதோ வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்றுவது என்பது சரியானதுதான். ஆனால் வேலைக்கு போகிறோம் என்று விட்டு, வீட்டு வேலை எதுவுமே செய்யாமல் வருமானத்தை விட அதிகமாகச் செலவு செய்து. சாறி, சட்டை, செருப்பு, கண் மை, உதட்டுச் சாயம் என்று வாங்கிக் குவித்து குடும்பத்தை கொள்ளையடிப்பது என்றால், அது மகா தவறு.

*த.தணிகாசலம், புத்தூர்.*

**கேள்வி:** பித்தா! ஜோரான ஜோக் ஒன்று சொல்லுமேன்?

**பதில்:** ஒருநாள் கடவுளை சந்திக்க ஒரு புத்திஜீவி சென்றிருந்தார். புத்திஜீவிக்கோ கடவுளிடம்தான் கெட்டிக்காரன்... மெத்தப்படித்தவன் என்று காட்ட ஆசை. எனவே கடவுளைப் பார்த்துக் கேட்டார். கடவுளே 10லட்சம் வருடங்கள் என்பது உமக்கு என்ன மாதிரி? கடவுள் சொன்னார், 10 லட்சம் வருடங்கள் என்பது எனக்கு ஒரு விநாடிபோல என்றது.

அப்படியென்றால் 10 லட்சம் ரூபா என்பது உமக்கு என்ன மாதிரி என்றுகேட்டார் புத்திஜீவி. கடவுள் சொன்னார்; அது எனக்கு ஒரு சதம் மாதிரி. இதனைக் கேட்ட புத்திஜீவி கடவுளைக் தனது புத்திசாலித்தனத்தால் மடக்க நினைத்தார். கடவுளே! அப்படியென்றால் எனக்கு ஒரு சதம் தந்து உதவுமேன் என்றார். இதனைக் கேட்டு மெதுவாகச் சிரித்த கடவுள் சொன்னார், 1 விநாடி பொறுத்திரு மகனே ஒரு சதம் தருகின்றேன் என்று.

*சு.தணிகை செல்வி, யழ்ப்பாணம்.*

**கேள்வி:** பித்தா! ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் கோள் சொல்பவர்களைப் பற்றி என்ன நினைகிறீர்?

**பதில்:** அவர்களைப் பற்றி என்ன நினைப்பது? அவர்கள் பூலோகத்தில் நடமாடும் செயற்கைக் கோள்கள்.

*எஸ்.மோகனதாஸ், முறிகண்டி.*

**கேள்வி:** மவனே பித்தா! வாசகர்களின் கேள்விகளுக்கு சரியான முறையில் நீர் பதில் எழுதுவதில்லையாமே? இதுதான் உனக்கு கடைசி எச்சரிக்கை. இனி மேலும் இப்படி நடந்தால் பிறகு நான் வீச்சரிவாளோடு தான் வரவேண்டி இருக்கும் என்று யாராவது உம்மை எச்சரித்தால் என்ன செய்வீர்?



**பதில்:** தாராளமாக வந்து வீசிவிட்டுப் போகச் சொல்லுவேன். இந்த லொள்ளுப் பிடித்த கேள்விகளுக்குப் பதில் சொல்லி தொல்லைப்படுவதை விட அது மேல் ஐயா...!

*அ.இளவரசன், கேகாலை.*

**கேள்வி:** பித்தா! நீர் சும்மா பயந்தவர் மாதிரி நடிகிறீர் எனவும் வீட்டிலே மனைவியிடம் அடிவாங்குவதாகக் கதை விடுகிறீர் எனவும் சொல்கிறார்கள். உண்மையில் வீட்டிலே நீர்தான் பொல்லாதவர்; மனைவிக்கு அடிப்பவர். அவரை அடிமையாக நடத்துபவர் அதுதான் உண்மை என்கிறேன் நான். நீர் என்ன சொல்கிறீர்?

**பதில்:** அடடா! இந்தப் பிள்ளை பூச்சியை இப்படிக் கற்பனை செய்து பார்க்கவும் ஒருவர் இந்த உலகத்தில் இருக்கிறாரே ஆண்டவா...!

**கேள்வி:** காதல் என்பது பருவக் கவர்ச்சியா அல்லது ஆயுட் காலப்பந்தமா?

**பதில்:** 21 க்கு முன்னே வந்தால் பருவக் கவர்ச்சி
21 க்கு பின்னே வந்தால் ஆயுட்காலப் பந்தம்

# பிறந்த நாள்...

கூரை வழியே வழிந்த மழைநீர் அவன் கால்களை நனைத்தபோதும் அவன் தன்னிலை மறந்து முகட்டைப் பார்த்தபடியே கிடந்தான். வழமையில் கதிரவன் தன் கதிர் கொண்டு பூமகளை அணைக்கும் முன்பே அவன் தன் பாதக்கமலங்களைப் பூமாதேவியில் பதித்திருப்பான்.

துன்பத்திலும் துவளாமல், அதிகாலைப் பொழுதின் பூ மலர்விலும் பறவைகளின் ரீங்காரத்திலும் தன்னை மறந்து லயித்துப் போகும் அந்தக் கட்டிளங்காளை இப்பொழுதெல்லாம் முகட்டையே வெறித்துக் கொண்டிருக்கின்றான்.

அழகிய நந்தவனச் சோலையிலே மலர்களின் மகரந்தச் சேர்க்கையில் மாணிக்கமாய் மரகதம்மாள் மடிதவழ்ந்த இரட்டைச் செல்வங்கள் சுரேஸ், ரமேஸ்.

வயலேறி எருது வணைக்கும் சுந்தரத்தின் அயராத உழைப்பிலும், மரகதம்மாளின் அன்பான பராமரிப்பிலும், சூரியன் தத்தி நடை பயின்று தாய் மண்ணை முத்தமிட்டு முத்தமிட்டு எழும் காட்சி காணக் கண்கோடி வேணுமப்பா என்றிருந்த கிராமவாசனை தெறிக்கும் வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழ்ந்த குடும்பமது.

இரட்டைச் செல்வங்களின் பின் அருமையாய் வந்துதித்த கலைக் குழந்தைக்கு அம்பிகை என்று அம்மனின் பெயரிட்டு ஆடி மகிழ்ந்தனர். தங்கள் கிராமத்துப் பாடசாலையிலேயே முக்கனிகளும் தம் ஆரம்பக் கல்விக்கு காலடியெடுத்து வைத்தார்கள். அண்ணன்மார் இருவரும் தங்கையை நடுவில் விட்டு கைபிடித்துப் போகும் அழகு கண்டு மரகதம்மாள் பெருமைப்பட்டுப் போவாள். படலை வரை வந்து வழியனுப்பும் அவள் ''மாணிக்கப் பிள்ளையாரே என்ர செல்வங்களுக்கு நீதான் துணையப்பா'' என்று வேண்டிக் கொள்வாள்.

கால மாற்றத்தில் அம்பிகையும் பருவமடைந்தாள். ஊர் கூட்டி அலங்கரித்துத் தம் தங்கையின் பூப்புனித நீராட்டு விழாவை அண்ணன்மார் இருவருமாய் பெரிய விழாவாகச் செய்து முடித்தார்கள். நான்கு வயது இளமையான தம் தங்கை பருவமடைந்த நாள் முதலாய் சுரேஸும், ரமேஸும் கண்ணும் கருத்துமாய் தங்கையை தோளேந்தி நடந்த காலமது. தம் மக்களின் ஒற்றுமை கண்டு பூரித்துப் போனார்கள் சுந்தரம் தம்பதியினர்.

தென்றல்வீசிய தேசத்தில் புயல் மையம் கொண்ட அன்றைய நாளில் வானிலிருந்தும் மண்ணிலிருந்தும் அதிர்ந்த குண்டோசையில் ஈழமே புலம் பெயர்ந்தது. அந்த நாளில் சைக்கிள் முன் பாரில் தங்கையையும், பின் கரியலில் வீட்டுப் பொருட்கள் சிலவற்றையும் சுமந்து கொண்டு சுரேஸும், தாயையும் வேறு சில பொருட்களையும் சுமந்து கொண்டு ரமேஸும், அவர்கள் பின்னால் கையில் அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு சுந்தரமுமாய் நெஞ்சு நிறைய வேதனை காவி ஊரோடு ஊராய் சனத்தோடு சனமாய் புலம்பெயரத் தொடங்கியிருந்தனர்.

நீண்ட தூர நடையின் பின் வன்னேரி எனும் கிராமத்தில் சனத்தோடு சனமாய் நின்ற சுரேஸ், திறந்த இந்த வெளியில் எப்படித் தன் தங்கையை வைத்திருக்க முடியும் என்று தன் மூளையைக் கசக்கத் தொடங்கினான்.

அன்றொரு வெள்ளிக் கிழமை கோயிலுக்குச் சென்று விட்டு வந்த வயோதிபரை வீதியில் ஹீரோ ஹொண்டாவில் முறுக்கி



வந்துஎட்டு அடித்துக் கொண்டு காற்றில் பறந்த வழங்கெட்ட இளைஞர்கள் தட்டி விழுத்திய போது கரம் கொடுத்தவன் சுரேஸ். அந்த வயோதிபர் நன்றி கூறி விட்டு ''தம்பி வன்னேரிப் பக்கம் வந்தா வீட்ட வா ராசா; வன்னேரிப் பள்ளிக்கூடத் துக்குப் பக்கத்தில தான் வீடு. இந்தக் காலத்தில உன்னைப் போலபிள்ளைகளும் இருக்கிறத நினைக்கப் பெருமையாய் இருக்கு'' என்றார். அந்தப் பாசமுகம் நெஞ்சில் வர மற்றவர்களை மரத்தின் கீழ் இருத்தி அவர்களுக்கு மிகுந்த சிரமப்பட்டு பாணும் பழமும் வாங்கிக் கொடுத்து விட்டு அந்த வயோதிபரின் இல்லத்தை நோக்கிச் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான்.

''கடவுளே... அந்த ஐயா வீட்டு வளவில ஒரு சின்ன இடமாவது கிடைச்சிட வேணும். என்ர தங்கச்சியை டொக்ரர் ஆக்கோணும் என்ற எங்கட கனவில மண்ணள்ளிப் போட்டிராதையா'' என்ற அவனது வேண்டுகோள் வீண் போகவில்லை. வயோதிபர் செல்லையாவும் இவர்களுக்கு இருக்க தன் வளவில் ஓர் இடம் கொடுத்தார். அவசர அவசரமாக பிஞ்சுகள் ரமேஸும் சுரேஸும் மண்ணால் வீடமைத்து தம் கல்வியைத் தொடர பொருளாதார நிலை இடம் கொடுக்காத போதிலும் விறகு சுமந்து விற்றுத் தம் தங்கையின் கனவுக்குப் பாதையமைத்துக் கொடுத்தார்கள். அவளைப் பாடசாலைக்கு கொண்டு போய் விடுவதையும், ஏற்றிவருவதையும் தன் தொழிலாகக் கொண்டு சுந்தரம் தன் இயலாமையினால் வீட்டினிலேயே முடங்கிக் கிடந்தார்.

**சுடர் ஒளி சிறுகதை**

காலநதியின் சிறு அலையாக ரமேஸ் போராட்ட நீரோட்டத்தில் கலந்து போன போது தனியொருவனாய் இருபது வயதினிலேயே தன் குடும்பப்பாரம் சுமந்தான் சுரேஸ்.

உயர்தரப் பரீட்சை. தங்கையை கோயிலுக்கு கூட்டிக் கொண்டு போய் அர்ச்சனையும் செய்து விட்டு கை கூப்பி நின்றவன் கண்களில் சாரைசாரையாகக் கண்ணீர் வழிந்தது. ''ஐயா... முருகா துடிக்க வேண்டிய இளமையில் எங்கள் கல்வியைப் பறித்தாய் எங்கள் கண்மணி இன்று தன் கனவை நிறைவேற்றும் பரீட்சைக்குப் போகின்றாள். ஏமாத்திப் போடாமல் அவள் கனவை நனவாக்கிடப்பா. நான் பட்ட துன்பம் எங்கள் செல்லத் தங்கச்சிபடக்கூடாது. களத்தினில் வீரவடுவேந்தி மருத்துவ வசதியின்றியே காவியமாகிப் போன என் உடன்பிறப்பு ரமேஸ் மாதிரி இன்னும் பலரை இழக்கேலாது. என்ர தங்கச்சி வைத்தியனாகும் கனவுகளையும் நிறைவேற்றி வையப்பா'' என்ற அவனது நீண்ட வேண்டுதலை முடித்துக் கொண்டு திருப்பிப் பார்த்தபோது மூத்தான அவன் தங்கையின் கயல் விழிகளும் நீரைச்சொரிய அவளும் அந்தக் கோவணக்காரனிடம் எதையோ வேண்டிக் கொண்டிருந்தாள்.

-ஆனந்தவள்ளி-
திருநகர்

''எங்கள் படிப்புக்காய் தங்களையே ஆகுதியாக்கிக் கொண்டிருக்கும் உறவுகளின் கனவையும் நிறைவேற்றி வையப்பா'' என்று தன் பிரார்த்தனையையும் முடித்துக் கொண்டு தன் அண்ணனுடன் பரீட்சை மண்டபம் நோக்கி நகர்ந்தாள்.

பரீட்சையும் முடிந்து பெறுபேறுகள் வெளியாகும் நாளும் வந்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் நிலையையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தையும் அம்பிகை பெற்றிருந்தாள். ஆனால்.... சந்தோசத்தைக் கொண்டாட அண்ணனின் நெஞ்சில் குத்திக் குத்திக் கதைபேசும் அந்தத் தங்கை இந்த மண்ணிலில்லை. அண்ணன் ரமேஸுடன் நீலவானின் நிர்வாண மேனியில் ஆயிரம் நட்சத்திரங்களில் ஒன்றாய் அவளும் கண்சிமிட்டிக் கொண்டிருக்கின்றாள். மலேரியா வடிவில் வந்த காலன் அரசு விதித்த மருந்துவத் தடையைச் சாதகமாக்கி சிறந்ததொரு வன்னியின் மருத்துவமாதைக் கவர்ந்து கொண்டுவிட்டான்.

அவள் இறந்த நாளின் முதலாவது ஆண்டுக்குள் தந்தையையும் இழந்து ஒற்றைத் திரியாய் மினுமினுக்கும் அம்மாவுடன் ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுத்து மருத்துவிச்சியாக்கும் கனவோடு உழைத்துக் கொண்டிருக்கிறான் சுரேஸ். சில நாட்களாகத் தன் தங்கை அம்பிகையின் நினைவால் தடுமாறிக் கொண்டிருக்கிறான். இன்று அவனது ஆருயிர்த் தங்கையின் பிறந்த நாள்.

# விடுதலை


-பாலா-

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை - பக்கத்தை - அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை - வெளிப்படுத்துகிறது. 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.

இக்கட்டுரைத் தொகுப்பு மூலம் தான் கற்ற கல்வியையும், அந்தக்க கல்வியின் மூலம் தான் பெற்ற அறிவையும், தமிழ்த் தேசிய இனத்தினது அரசியல் இறைமையின் மீட்சிக்காக மாத்திரம் பயன்படுத்தாமல் அதனது சமூகவாழ்வின் சுபீட்சத்துக்காகவும் தனி மனிதவாழ்வின் மேன்மைக்காகவும் உபயோகப்படுத்த முனைகின்றார் பாலசிங்கம்.

'சுடர் ஒளி' உங்களுக்குப் பெருமையுடன் வழங்கும் இக்கட்டுரைத் தொடர் அல்லது தொடர் கட்டுரைகள் பாலசிங்கத்தின் அற்புதமான ஞானத்தின் இன்னொரு பரிமாணத்தை மட்டும் உங்களுக்கு இனங்காட்டப் போவதில்லை. இந்தக் கட்டுரைகளினூடாக, அவர் உங்களையே உங்களுக்கும் இனங்காட்டவிருக்கிறார்.

இந்தக் கட்டுரைத் தொடரில், மனிதன் தன்னைத் தானே தேடத் தொடங்கியதிலிருந்து, அவன் தனது வாழக்கையைத் தேடிக் கொண்டிருப்பது வரை - மானிடவியல், அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல் எனப் பல்வேறு அறிவியற் பரப்புக்களில் - மனிதகுல வரலாற்றின் அசைவியக்கத்தை அளவெடுக்கின்றார் பாலசிங்கம். படித்துப் பாருங்கள்.

# மனிதனைத் தேடும் மனிதன்

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

ஆதி மனிதன், தனது உலகானுபவத்தை அர்த்தமுள்ள சப்தங்களாக வார்தைகளில் உருவகித்து, பேசும் ஆற்றல் பெற்று, சுயமாகச் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே அவனிடம் அந்தக் கேள்வி பிறந்தது.

கேள்விகளுக்கு எல்லாம் மூலக் கேள்வியாக, வாழ்வியக்கத்தின் அர்த்தத்தையே தொட்டு நிற்கும் கேள்வியாக, ஆதி மனிதன் தன்னை நோக்கி அந்த வினாவை எழுப்பினான்.

'நான் யார்?'

எல்லையற்ற பிரபஞ்சத்தின் எங்கோ ஒரு மூலையிலிருந்து திசைதெரியாது தவித்த மானிடத்தின் அவலக் குரலாக அந்தக் கேள்வி எழுந்தது.

அந்தக் கேள்வி பிறந்த கணத்திலிருந்து இன்றுவரை, ஒரு நீண்ட முடிவில்லாத சுயவிசாரணைத் தேடுதலாக மனிதன் தன்னைத் தானே தேடிக் கொண்டிருக்கிறான். அந்தத் தேடுதல் இன்னும் முடியவில்லை.

அன்றிலிருந்து இன்றுவரை, ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் காலநதி இந்தப் பூமியின் முகத்தையே மாற்றிவிட்டது. நாகரிகங்கள் தோன்றி, வளர்ந்து, சிதைந்து அவற்றின் புதைகுழியிலிருந்து ஒரு புதிய உலகம் பிறந்து விட்டது. படிப்படியாகப் பொருளுலகின் சூட்சும முடிச்சுகளை மனிதன் அவிழ்த்துவிட்டான். என்றுமில்லாதவாறு மனித அறிவு வளர்ந்தது. விண்ணுலக அண்டத்தின் விசாலம் தொட்டு, நுண்ணுலக அணுவின் மூலம் வரை இயற்கையின் எண்ணரில்லாப் புதிர்களை எல்லாம் மனிதன் அறிந்து கொண்டான். ஆனால் மனிதன் தன்னைப் பற்றி இன்னும் அறிந்து கொள்ளவில்லை. மனிதன் யார் என்ற கேள்வியைப் பின்தொடரும் தேடுதல் ஒரு முடிவில்லாத தொடர் கதையாக இன்னும் நீள்கிறது.

அன்றொரு காலம் கிரேக்க நாட்டில் ஒரு வயோதிப தத்துவஞானி இருந்தார். அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாக மக்கள் கருதினர். அந்த மனிதர், இரவு வேளையில், ஒரு கையில் ஊன்றுகோலுடனும் மறு கையில் ஒரு விளக்குடனும் அதென்ஸ் நகர வீதிகளில் யாரையோ தேடி அலைந்து கொண்டிருந்தார். தனக்கு எதிரே வரும் மனிதர்களை வழிமறித்து, கை விளக்கை உயர்த்திப் பிடித்து அவர்களது முகத்தை உன்னிப்பாக நோட்டமிடுவார். இப்படியாகத் தினமும் இரவில் விளக்கு வெளிச்சத்தில் மாறி மாறி மனித முகங்களைத் தரிசிப்பதில் அவரது காலம் கழிந்தது. இவரது தொல்லை தாங்காது ஒரு நாள் அந்த நகரவாசிகள் அவரிடம் சென்று, "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டனர்.

"நான் ஒரு மனிதனைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று அந்தத் தத்துவஞானி பதில் சொன்னார்.

பொய்யான, போலியான மனிதர்கள் மத்தியில் ஓர் உண்மையான மனிதனை அந்த ஞானி தேடிக் கொண்டிருந்தாராம்.

இப்படியாக மனிதனை மனிதன் தேடிய விசித்திரமான வரலாறு நீண்ட காலத்திற்கு முன்னரே தொடங்கிவிட்டது.

ஆதியிலிருந்தே மனிதன் ஒரு கனவு கண்டான். இந்தப் பூவுலக வாழ்வின் நிர்ப்பந்தங்களுக்கு அப்பால், நிச்சயமற்ற தன்மைகளுக்கு அப்பால், துன்பத்தின் அழுத்தத்திற்கு அப்பால், காலத்தின் எல்லைக்கு அப்பால் சாவின் நியதிக்கு அப்பால், இல்லாமை என்ற சூன்யத்திற்கு அப்பால், ஒரு நித்திய சீவியத்தை, பேரானந்த பரவசத்தில் சதா லயித்திருக்கும் சிரஞ்சீவியான வாழ்வைக் கனவு கண்டான். மனிதனின் இந்தக் கனவிலிருந்து ஒரு கருத்துலகம் பிறந்தது. அழியாத ஆன்மா என்றும் ஆவி உலகம் என்றும் அடுத்த பிறவி என்றும் சுவர்க்கம் என்றும் நரகம் என்றும் இந்தப் பூவுலகத்திற்கு அப்பால், நாம் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மடியும் இந்த நிஜவுலகத்திற்கு அப்பால், நாம் தொட்டுணர்ந்து பட்டறிந்து கொள்ளும் இந்தப் புறவுலகத்திற்கு அப்பால், மனிதன் ஒரு பூடகமான உலகைக் கற்பிதம் செய்து கொண்டான். இந்தக் கற்பனாவாதம் இயற்கைக்குப் பதிலாக ஓர் இந்திரலோகத்தைப் படைத்தது. மனிதன் ஓர் அந்திய உலகத்தின் அபூர்வப் பிறவியாக மாற்றப்பட்டான். இதனால் பூமியில் புதைந்து கிடந்த மனிதனின் பூர்வீக வேர் பிடுங்கி எறியப்பட்டது. மனிதனின் மனக்குகை இருளுக்குள், அடிமனப் பாதாளத்திற்குள், ஆதியும் அந்தமுமற்ற அழியாத ஆன்மா ஒன்று புகுந்து கொண்டது.

அந்த ஆன்மத்தின் இரகசியத்தை மனிதன் தேடத் தொடங்கினான். இதனால் புதிய கேள்விகள் பிறந்தன.



'நான் யார்?' என்ற மையக் கேள்வியுடன் 'நான் எங்கிருந்து வந்தேன்?', 'நான் எதற்காக இங்கு வந்தேன்?' என்ற புதிய புதிரான வினாக்களும் எழுப்பப்பட்டன.

இந்த வினாக்களும் அவற்றிற்கு அளிக்கப்பட்ட விளக்கங்களும் அதனால் எழுந்த கருத்துருவப் பொய்களும் உண்மையான மனிதனை இந்த உண்மையான உலகத்திலிருந்து அந்நியமாக்கின. மனித உலகத்திற்கும் மனித வாழ்விற்கும் விசித்திரமான வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டன.

இந்த விசித்திரமான பார்வையில் இப்பூவுலகம் ஒரு மாயலோகம். ஒரு மானசீகத் தோற்றப்பாடு. எமக்குள்ளே இருந்து கொண்டு, எல்லாம் தெரிந்ததாக எண்ணிக்கொள்ளும் எமது மனம் பொய்களைக் கொண்டு உருவகிக்கும் ஒரு போலியான உலகம். சத்தியத்தின் இருப்பிடமாக இன்னொரு உலகம் இருக்கிறதாம். அந்த ஆன்ம உலகிலிருந்து நாம் இங்கு வந்து, வந்து, வாழ்ந்து விட்டுப் போகிறோமாம். விதி என்ற முடிவில்லாப் பெருங்கதையில் நாமெல்லாம் சிறு, சிறு நாடகப் பாத்திரங்கள். வந்து, வந்து நடித்துவிட்டுப் போகிறோம். எம்மைச் சாவு தீண்டுவதில்லை. உடல்களை உடையாக அணிந்து, பின் உரிந்து விட்டுச் செல்கிறோம். இந்தப் பூமி ஒரு தற்காலிக தங்குமிடம். பாவங்களைச் சுமப்பதற்கும் ஆசைகளைத் தீர்ப்பதற்கும் கர்ம வினை கழிப்பதற்கும் நாம் இங்கு வந்து தங்கிச் செல்கிறோம். பிறப்பு, இறப்பு என்ற சூட்சுமச் சக்கரத்தில், முடிவில்லாத ஒரு சங்கிலித் தொடர்பில் பிணைபட்டு, இழுபட்டு, நசிபட்டு எமது வாழ்வு நகர்கிறது. இந்தப் பொய்யான பூவுலக மாயையிலிருந்து விடுபடும் வரை எமக்கு விடிவில்லை. இந்த உலகத்தைத் துறந்து, உறவுகளைத் துறந்து, உணர்வுகளைத் துறந்து, சாதாரண வாழ்வின் சகலவற்றையும் துறந்து, பரிபூரண துறவறத்தில் விமோசனத்திற்கு வழி இருக்கிறது. உள்ளே உள்ள உள்ளொளியின் தரிசனத்தில், அந்த மெஞ்ஞான விழிப்புணர்வில், 'நான்' என்ற பொய்ப்பொருள் செத்துவிட மெய்ப்பொருள் புலனாகும். அந்த ஞானோதயத்தில் விதியின் விலங்குகள் உடைந்து விழும். பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற சங்கிலிப் பிணைப்பிலிருந்து விடுதலை கிட்டும்.

இந்த விபரீதமான ஆன்மீக விசாரணையில் 'நான் யார்?' என்ற தேடுதல் 'நான் ஒரு பொய்' என்ற கண்டுபிடிப்புடன் முடிவடைகிறது.

வேதகாலம். மணிபுரி என்ற நாட்டின் மன்னன். துறவறம் பூண்டு, அந்தக் குருஷேத்திரம் வருகிறான். மெஞ்ஞானம் பெற்ற அந்த முனிவனிடம் மண்டியிடுகிறான்.

"நான் மணிப்புரி நாட்டின் மன்னன் எனது வயோதிபத்தில் வாழ்க்கையைத் துறந்து விட்ட நான், மெய்ப் பொருளைக் கண்டு கொள்ள விரும்புகிறேன். நீங்கள் தான் எனக்கு ஞானவொளி காட்டி, வழி காட்ட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

தியானத்திலிருந்து விழித்துக் கொண்ட முனிவர், மன்னனைப் பார்த்து, "நான் செத்து விட்டதும் என்னிடம் வா" என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடிக் கொண்டார்.

ஒன்றுமே புரியாது, குழப்பமடைந்தவனாக ஆச்சிரமத்திற்கு வெளியே வந்த மன்னன், முனிவனின் சீடனை அழைத்து, முனிவன் கூறிய வார்த்தைகளுக்கு அர்த்தம் கேட்டான்.

"நான் செத்துவிட்டதும் என்று முனிவர் தன்னைக் குறிப்பிடவில்லை. உனக்குள்ளே, உனது ஆசையின் வடிவமான, உனது அகங்காரத்தின் இருப்பிடமாக இயங்கிக் கொண்டிருக்கும், உனது 'நான்' முதலில் இறக்க வேண்டும். உனது சுயத்தின் சாவுக்குப் பின்னரே தன்னிடம் வருமாறு குருநாதர் கூறியிருக்கிறார்" என்று அந்தச் சீடன் அரசனுக்கு விளக்கம் கொடுத்தானாம்.

'நான்' என்ற பொய்யைச் சாகடிப்பதற்கு முன்னரே அந்த அரசன் செத்துப் போனான்.

'நான்' என்பது பொய் என்றால், எனது பிரக்ஞையின் பிரமை என்றால், எனது மனவுலகம் சிருஷ்டிக்கும் மாயை என்றால், 'நான்' என்று எனக்குள்ளிருந்து சிந்திப்பவனாக, உணர்பவனாக, உணர்ச்சி வசப்படுபவனாக, ஆசைப்படுபவனாக, நானாக என்னை இயக்கி வரும் அந்தப் பிரகிருத்தி யார்?

"நான் என்பது ஓர் எண்ணம். எண்ணவோட்டத்தின் நெற்றிக் கண்ணாக அமையப் பெறும் ஓர் எண்ணம்; மனவுலகம் உள்வாங்கிக் கொள்ளும் கோடானு கோடி எண்ணப் படிமங்களின் மையப் படிமமாக 'நான்' என்ற சுயம் எழுகிறது," என்கிறார் ஒரு ஞானி.

அப்படியானால், நான் என்பது ஒரு மானசீகப் பொருளா? நினைவுகளின் நிழலாக, படிமங்களின் நடுவப்படிமமாக, எண்ணச் சிதைவுகளிலிருந்து உயிர் பெறும் ஒரு மானசீகப் பேய்த் தோற்றமாக மனிதனின் சுயத்தை, அவனது ஆளுமையை சித்திரிக்க முடியுமா?

'நான்' என்பது எனது மனநிலைக்கு அப்பால், எனது உயிர்நிலை சார்ந்த சுயவுணர்வாகவும் இயங்குகிறது அல்லவா? எனது உயிரின் இருப்பிடமாக, பொருளுருவம் பெற்றிருக்கும் உடற்கூறும் எனது சுயத்தின் திண்ணியமான பொருள் வடிவம் அல்லவா? உடலும் உயிருமாக, இரத்தமும் சதையுமாக, உணர்ச்சியின் பிண்டமாகவும் 'நான்' இருப்புற்று இருக்கிறேன் அல்லவா?

'நான்' என்பது அகவுலகத்துப் பிசாசு அல்ல. அன்றித் தெய்வலோகத்துப் பதுமையும் அல்ல.

மனிதன் என்பவன் இயற்கையின் குழந்தை. இயற்கை என்ற மாபெரும் கலைஞனால் படைக்கப்பட்ட ஒரு கலை வடிவம்; உயிர் வடிவம். இயற்கையின் கருவகத்துடன் மனிதனின் தொப்புள் கொடி பின்னிப் பிணைந்து கிடக்கிறது. ஒரு புறம், இயற்கையின் மடியில் வேர் பதிந்து நிற்பவனாகவும், மறுபுறம் சமூகப் பிறவியாகவும், சமூக வாழ்வியக்கத்தில் உருவாக்கம் பெறுபவனாகவும், இருமுகப் பரிமாணத்தில் மனித வாழ்வு அமைகிறது.

மனிதன் உணர்ச்சிமயமானவன். உணர்ச்சிப் பிண்டமாக இயற்கை மனிதனைப் படைத்திருக்கிறது. இயல்பூக்கங்களாக, இயல்புணர்ச்சிகளாக (instincts) அவை மனிதனை ஆட்டிப்படைக்கின்றன.

இயற்கை மனிதனைப் படைத்தது மட்டுமன்றி, மனிதன் தன்னைத் தானே படைத்துக் கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும், தனது இனத்தை விருத்தி செய்து கொள்ளவும் நிர்ப்பந்திக்கிறது. இந்த நிர்ப்பந்த சக்தியாக, உந்துதலாக இயல்புணர்ச்சிகள் மனிதனை ஆட்கொள்கின்றன.

இந்த இயல்புணர்ச்சிகளின் மையமாகப் பாலுணர்ச்சி அமைகிறது. ஒரு ஜீவசக்தியாக சகல ஜீவராசிகளையும் அது இயங்கவைக்கிறது. சகல உயிர்களையும் மீளாக்கம் செய்கிறது. அது என்னையும் உன்னையும் பற்றிக் கொள்கிறது. அதன் ஈர்ப்புச் சக்தியிலிருந்து நீயும் நானும் தப்பிவிட முடியாது. படைத்தலின் தவிர்க்க முடியாத நியதியாக, அது எம்மைப் பணியவைக்கிறது. இன்பநுகர்ச்சியின் பரவசத்தைக் காட்டி அது எம்மை ஆட்கொண்டுக் கொள்கிறது.

(வளரும்...)

# சட்டவிரோதச் செயல்களின் வெப்பத்தில் தகிக்கும் அப்பாவி மக்களின் அவலம்

இயற்கை வளங்கள் அனைத்தும் ஒருங்கே அமைந்து எழில் கொஞ்சும் பூமி மலையகம். இப்படிப் பெருமை அடித்துக்கொண்ட ஒருகாலம் இருந்தது. ஆனால் இன்று சட்டவிரோதச் செயல்களின் சாம்ராஜ்ஜியமாக அது மாறிவிட்டதே என்று நினைக்கையில் வேதனையளிக்கின்றது.

அண்மைக்காலங்களில் உலக சுகாதார மையம், யுனிசெப் நிறுவனம் என்பனவற்றால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் பல மலையகம் பற்றி திடுக்கிடும் உண்மைகளை அப்பட்டமாகப் புட்டுக்காட்டின.


அழகு ஊட்டும் அருவி

''சிறுவயதிலேயே பேரதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை அதிரித்தல் கள்ளச்சாரய (கசிப்பு) உற்பத்தி அதிகரிப்பு, பாலியல் வன்முறைகள், சிசு மரணங்கள் என்பன என்றும் இல்லாதவாறு மலையகத்தில் அதிகரித்து விட்டன'' – என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இதில் எந்த அளவு உண்மை இருக்கின்றது என்பன. கேள்வ எழுப்ப வேண்டிய அவசியமே இல்லை. அண்மைக்காலங்களில் நடைபெற்ற பல சம்பவங்கள் இந்தக் கூற்றுகளுக்கு அச்சொட்டாகச் சான்று பகர்கின்றன.

மலையகத்தின் கேந்திர நிலையமாக விளங்குவது மத்திய மாகாணம். அதிலும் கினிகத்தேனை மலையடி வாரம் விசேடமானது. மஸ்கெலியா மலை உச்சி, ஹட்டன், தலவாக்கலை பிரதேசங்களில் அமைந்துள்ள சுரங்கப்பாதைகளும் நீர்வீழ்ச்சிகளும் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளைப் பெரிதும் கவர்ந்த இடங்கள்.

வெளிநாட்டு உல்லாசப்பயணிகளின் வருகையால் நமது பாரம்பரியக் கலாசாரமும் பண்பாடும் பாதிக்கப்பட்டுவிட்டன என எவரும் கூறிவிடமுடியாது.

இப்பிரதேசங்களுக்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அரைகுறை ஆடைகளுடன் வருவது இன்று நேற்றல்ல, காலம் காலமாகவே முடி மறைக்க முடியாத ஒரு உண்மை.

அப்போதெல்லாம் எமது கலை, கலாசாரம், பண்பாடு கெட்டுப்போனதில்லை. மாறாக மலையகத்திற்கு வரும் வெள்ளைக்காரப் பெண்கள் மலையகப் பெண்களைப் போன்று பாவாடை தாவணியுடனும், சேலைகளுடனும் பவனி வருவதைதான் கண்டிக்கிறோம்.

## மாறிவிட்டதா மலையகம்?

ஆனால், மலையகத்தின் தலைவிதி இன்று தலைகீழாக மாறிவிட்டது. மலையகத்தின் வசந்தகாலம் மலையேறிவிட்டது.

பாடசாலையில் பாடம் படிப்பிக்க வந்த ஆசிரியர்கள் மாணவிகளுக்குப் பள்ளியறைப் பாடம் புகட்டுகின்றனர். ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் சொல்லிக் கொடுக்க வேண்டிய ஆசிரியைகள் அடிவயிறு தெரிய சேலை உடுத்திக் கவர்ச்சிக்காட்டுகின்றனர்.

திரைப்படங்களிலும் தொலைக்காட்சிகளிலும் கூட பார்க்க முடியாத காட்சிகளைத் தாராளமாக பாடசாலைகளில் காண முடிகின்றது.

கினிகத்தேனையில் ஒரு ஆசிரியர் விசேட வகுப்புக்கு என அழைத்துச் சென்று போதைப் பொருளைக் கொடுத்து ஒரு மாணவியின் வாழ்க்கையையே சீரழித்துவிட்டார். அந்த மாணவி சித்தப்பிரமைபிடித்த நோயாளியாகிவிட்டார். இந்த காமுக ஆசிரியருக்கு உடன் படிப்பிக்கும் ஒரு ஆசிரியையே புரோக்கராகவும் ஒத்தாசையாகவும் இருந்து வந்துள்ளார் என்பது அதிர்ச்சி தரும் தகவல். இவர்களால் ஆசிரியர் சமூகமே வெட்கித் தலை குனிய வேண்டியதாகிவிட்டது.

பாடம் படிக்கவரும் மாணவிகளை ஆசிரியர்களும், உதவி கேட்டு வரும் பெண்களை அரசியல்வாதிகளும் கடித்துக்குதறுகின்றனர், நசுக்கின்றனர். கற்பை சூறையாடுகின்றனர். இதுதான் இன்றைய மலையகம். இவையெல்லாம் இன்று அங்கு சர்வ சாதாரணம்.



இவற்றை முடி மறைக்க – ஆசிரியர்களாலும், அரசியல்வாதிகளாலும் கசக்கி எறியப்படும் இளம் மொட்டுகளுக்கு அபாயம் அளிக்கும் பல சட்டவிரோதக் கருக்கலைப்பு நிலையங்கள் ஹட்டன், கொட்டகலை ஆகிய பிரதேசங்களில் சாதாரணமாக இயங்கிவருகின்றன.

இவற்றை எல்லாம்விட ஒரு திடுக்கிடும் சம்பவமும் இப்பொழுது வெளிப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இளம் பெண்கள்


மலையக குகை

காவல்துறையினரின் உதவியை நாடிச் செல்லும் போது அங்கேயும் அவர்கள் குதறப்படுகிறார்களாம். கடைசியாக காவல்துறையினரே கருக்கலைப்பு நிலையங்களுக்கும் வழிகாட்டி விடுகின்றனராம்.

பாவியர் போகும் இடமெல்லாம் பள்ளமும் திட்டியும் என்று சொல்வார்களே அது இதைத்தானா?

ஒன்று கொட்டகலை பிரதேசத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த சட்ட விரோத கருகலைப்பு நிலையம் ஒன்று அண்மையில் ஹட்டன் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது. கொட்டகலையில் இயங்கிவந்த இந்த நிலையம் கருக்கலைப்பு நிலையமாக மட்டுமல்ல உள்ளூர் அரசியல்வாதிகளின் களியாட்ட மையமாகவும் இயங்கி உள்ளது என்பது அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

ஏதாவது தகவல்கள் கிடைத்து விசாரணைக்காக வரும் பொலிஸாரை சந்தோஷப்படுத்தவென சிலசிட்டுகளும் அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனராம்.

— இராசிகா —

கொட்டகலை நகரம் அரசியல்வாதிகளின் கொலனி என்று பெயர் பெற்றது. அதிலும் கொமர்சல் கம்பெனிக்கு முன்பாக அமைந்துள்ள சமாதானபுரம் பெரும் புள்ளிகளும், அரசியல்வாதிகளும் ஆடம்பரப்பேர்வழிகளும் நிறைந்த ஒரு புதுக் குடியிருப்புப் பிரதேசம்.

அங்குதான் மிகவும் இரகசியமான முறையில் இயங்கிவந்துள்ளது இந்தக் கருகலைப்பு நிலையம். இந்த நிலையத்தை நடத்திய நபர் முன்பு கொட்டகலை நகரில் ஒரு சிறு டிஸ்பென்சரியை நடத்தி வந்தவர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# உணர்வுகளை உயிலாக வடித்த அருட்தந்தை பாப்பரசர்

உலகின் சகல மதத்தவர்களாலும் உயர்வாக மதிக்கப்பட்டவரும் உலகிலுள்ள 120 கோடி ரோமன் கத்தோலிக்கர்களின் தலைவராகவும் அவர்களின் கண்கண்ட தெய்வமாகத் திகழ்ந்த வருமான பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் (84 வயது) இறைவனுக்குள் நித்திரையாகிவிட்டார். மற்றுமொரு மாமனிதரை உத்தம புருஷரை இழந்ததில் உலகம் சோகத்தில் மூழ்கியது. பரிசுத்த தந்தையின் மறைவுக்கு அஞ்சலி செலுத்த ரோம் நகரில் கூடிய லட்சோப லட்சம் மக்களின் கண்ணீரே இதற்குச் சான்று.

வந்திருந்த பல லட்சம் பேருக்கு பாப்பரசரின் திருமுகத்தை இறுதியாக ஒரு தடவை தரிசிக்கக் கொடுத்து வைக்கவில்லை. இது அவர்களை மேலும் துயரத்தில் ஆழ்த்தியது. பலர் அதிகாரிகளுடன் சச்சரவுப்பட்டனர். இறுதியாக ஒருதடவை அவர் முகத்தைப் பார்த்துவிட அனுமதிக்குமாறு மன்றாடினர்.

உலகின் பல நாடுகளின் முக்கிய தலைவர்கள் அனைவரும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டனர். உலகின் மிகச் சிறிய நாடான வர்த்திக்கானின் தலைவர் ஒருவருக்காக முழுஉலகமே கண்ணீர் வடித்தது.

பாப்பரசர் மரணமடைவதற்கு முன்பே தீர்க்க தரிசனமாக எல்லாவற்றையும் உணர்ந்து வைத்தார் என்பதைக் காட்டுவது போல் உயில் எழுதிவைத்து விட்டுச் சென்றுள்ளார். அது இப்போது உலகின் கைகளுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

தான் முதலில் நோயுற்றிருந்த 2000 ஆம் ஆண்டிலேயே திருத்தந்தை பதிவியிலிருந்து விலகுவது குறித்து தான் ஆலோசித்ததாகவும் ஆனால் பின்னர் தான் பாப்பரசராக தொடர்வதற்கான வலிமையையும், மனஉறுதியையும் தருமாறு இறைவனிடம் வேண்டினார் எனவும் தான் எழுதிய 15 பக்கங்களடங்கிய ஆவணத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவருடைய தாய்மொழியான போலந்து மொழியில் எழுதப்படிருந்த அந்த ஆவணம் இத்தாலிய மொழிக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டு வர்த்திக்கான் அரச நிர்வாகத்தால் வாசிக்கப்பட்டபோது 1979ஆம் ஆண்டிலிருந்து இறக்கும் வரையில் தான் அனுபவித்த சுக துக்கங்களையும் இலட்சியப் பயணத்தில் தான் எதிர் நோக்கிய இடர்களைப்பற்றியும் தெளிவாக குறித்து வைத்திருந்தார்.

''1981ஆம் ஆண்டில் துருக்கிய இளைஞனின் துப்பாக்கிச் சூட்டிலிருந்து நான் தப்பியமை தெய்வீகச் செயலாகும். இறைவன் அதிலிருந்து தன்னைக் காப்பாற்றினார். எவ்வளவு காலம் நான் மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமோ அதுவரை இறைவன் எனக்கு உதவியாக இருப்பான் என நான் திடமாக நம்புகிறேன்'' – என்று பாப்பரசர் தனது உயிலில் குறிப்பிட்டுள்ளார்.

தான் ஏதாவது சொத்துக்களையும் விட்டுச் சென்றிருந்தால் அவற்றை பரா



மரிக்க வேண்டுமென்பதால் நான் எந்த சொத்துக்களையும் விட்டுச் செல்லவில்லை. தனிப்பட்ட முறையில் தான் எழுதிவைத்துள்ள குறிப்புகள் அடங்கிய கடிதங்களையும் நான் இறந்த பின்னர் எரித்து விடவேணடும். என்னுடைய இறுதிச் சடங்கை தனது தாய்நாடான போலந்தில் நடத்துவது பற்றி பரிசீலிக்க வேண்டும். பின்னர் அதுபற்றி கர்டினல்களே இறுதி முடிவு எடுக்க வேண்டும்'' – எனவும் அவர் கூறியுள்ளார்.

தான் வத்திக்கான் நிர்வாகத்தை நவீனப்படுத்தவும் உலகை அமைதிப் பூங்காவாக மாற்றி இறை நம்பிக்கையுடைய ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப முயன்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதி வைத்த ஆவணங்கள் வெறும் ஆவணங்கள் அல்ல அதற்கு ஏற்பவே தனது வாழ்க்கையையும் வாழ்ந்திருக்கிறார். உலகிற்கு ஒளிஊட்டி இருக்கிறார். அவருடைய இறுதி ஊர்வலத்தில் கண்ணீர் மல்க கதறி அழுத இலட்சக்கணக்கான மக்கள் இதற்கு சான்று பகர்ந்துள்ளனர்.

தமிழரசன்

உலகின் கிறிஸ்தவ நாடுகள் மட்டுமல்ல ஒட்டுமொத்த உலகமுமே அந்த ஒப்பற்ற ஆன்மீகத்தலைவருக்காக கண்ணீர் சிந்தியிருந்தது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தனது இறுதி மூச்சு வரை, தனது தள்ளாடும் வயதின் தளர்வையும் பொருட்படுத்தாது உலக விடிவிற்காக உழைத்த அந்த மகான் எழுதி வைத்துச் சென்ற உயில் உலக அளவில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

# மூன்று மாதங்களாகியும்....

ஆழிப்பேரலை ஆர்ப்பரித்து மூன்று மாதங்களாகின்றன. இக்காலகட்டத்துள் உருப்படியாக நடந்தவை என்ன? இன்னும் எதிர்பார்க்கப்படுபவை என்ன? இப்படியான கேள்விகள் எழுவது இயற்கையே.

இம் மூன்று மாதகாலப்பகுதியில் நிவாரணங்களுக்குப் பஞ்சமில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் என்றுமில்லாதவாறு அரசாங்கத்தை விட ஒரு படி மேல் நின்று பரந்து பட்ட அளவில் உதவின. அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது மக்களுக்கு ஏலவே இருந்த வெறுப்புணர்வு சுனாமியின் பின் பெரும்பாலும் நீக்கிவிட்டது எனலாம். அதற்குள்ளும் பல சுருட்டல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பதை மறுக்கமுடியாது.

இம் மூன்று மாதகாலத்துக்குள் நிவாரணம் என்ற வார்த்தைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியதைக் கோடிட்டுக் காட்டலாம். அரச நிவாரணங்களும் (ரு.15000/= ,ரு.5000/=, ரு.2500, ரு.375/=, உலக உணவுத்திட்ட உணவுகள்) பரவலாக வழங்கப்பட்டன. தற்போது ரு 25000/=, 1 லட்சம் நன்கொடைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிவாரணம் வழங்கலுக்கு அடிப்படை [illegible]யாக சுனாமி நிவா[illegible]ண அட்டை[illegible]ப் பயன்படுத்தினார்கள். இந்த அட்டை எந்தளவுக்கு பாதிக்கப்பட்ட மக்க[illegible]க்கு உதவியது என்பதை விட பாதி[illegible]படாத -ஆனால் செல்வாக்கு மிக்க - மக்களுக்கு உதவியது என்பது கவனிக்கப்பட வேண்டியது.

பிரதேசத்துக்குப் பிரதேசம் வெவ்வேறு நிறங்களில் நிவாரண அட்டைகள் விநியோகிக்கப்பட்டன. நிவாரண அட்டைகள் பாதிக்கப்படாத மக்களுக்கும் வழங்கப்பட்டதால் அதன் உண்மைத் தன்மை கேள்விக் குரியதொன்றாகிவிட்டது. இருப்பினும் அளவு கோல் ஒன்று வேண்டுமென்பதால் யார் வந்தாலும் முதலில் கேட்பது அந்த அட்டைகளையே! அதன்படி 3 மாதங்களும் அனுபவித்தனர்.

முற்றாகப் பாதிக்கப்படாத பகுதியிலுள்ளவர்களுக்கும் இச்சுனாமி நிவாரண அட்டை வழங்கப்பட்டிருப்பது ஏன் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு இதனை அறிவித்துள்ளனர். வெகுவிரைவில் அப்படிப்பட்டவர்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின விசேஷ பணிப்புரையின் கீழ் தற்போது தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்கள அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குழுக்குழுவாகச் சென்று சேதமதிப்பீட்டை அளவிட்டு வருகிறார்கள். குறைவாக சேதத்தை குறிப்பிடுவதாக புகார்.

இக்குழு உண்மையில் பேரழிவு இடம் பெற்று ஒரு மாதகாலத்துக்குள் வந்திருக்க வேண்டும் என்பதற்கு அப்பால் இ[illegible]குழு திரட்டிய சேதவிபரப்படி மீண்டும் சுனாமி நிவாரண அட்டை வழங்கப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுவரை வழங்கப்பட்ட சுனாமி நிவாரண அட்டைகள் வாபஸ் பெறப்பட்டு இலங்கை பூராக திட்டமிட்ட முறையில் ஒரே அட்டைகள் பரவலாக பாதிப்பின் தன்மையை மையமாக வைத்து வழங்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

சில பகுதிகளில் பிரதச செயலாளரது, கிராம சேவையாளரது சொந்த பந்தங்களுக்கு சுனாமி அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருப்பது பரவலாக விசனத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறையிலும் சரி, அம்பாந்தோட்டையிலும் சரி முற்றாக வீடு இழந்தவருக்கு சிவப்பு நிற அட்டை என்றால் எல்லா இடங்களிலும் அவ்வாறு அமைதல் வேண்டும். இப்படி பாதிப்பின் தன்மை நியாயமாகப் பேணப்படவேண்டும்.

சுனாமி நீர் வந்த இடமெல்லாம் மஞ்சள் அட்டை என்றால் அந்த நீரில் சிக்கி முற்றாக வீடிழந்தவரும் பகுதி வீடிழந்தவரும், உயிரிழந்தவரும், உடைமைகள் இழந்தவரும், எதுவுமே இழக்காமல் வாசலில் தண்ணீர் எட்டிப் பார்த்தவரும் ஒன்றா? இது நீதியா? அதற்கும் அப்பால் இப்படி சுனாமி நீர்வளவுக்குள் வராதவர்களுக்கும் மஞ்சள் அட்டை விநியோகிக்கப்பட்டிருப்பதை எந்த மனச்சாட்சியுள்ளவன் ஏற்பான்? எனவே இச்சுனாமி நிவாரண அட்டை விநியோகம் மறுசீரமைக்கப்பட்டு உண்மையில் பாதிக்கப்பட்டவர் பயனடைய வேண்டுமென்று கோரப்படுகிறது.

அரசாங்கம் தருவதைப் பெறவேண்டியது தானே! இதற்குள் என்ன வித்தியாசம் என்று சிலர் கேட்கலாம். அப்படியானால் சுனாமிதாக்கிய 10 மாவட்டங்களுக்கும் (அனைவருக்கும்) பொதுவான நியதியின் படி வழங்கவேண்டும்.

**பொதுக்கட்டமைப்புத் தாமதம்!**
**ஏதிலிகள் வீதியில்!**
**நிவாரணத்தில் அநீதி!**
**வழமைக்குத் திரும்பாத கல்வி!**
**நிரந்தர வதிவிடம்?**

அப்படி இல்லாமல் மூன்று மாதங்களுக்குப் பின்பும் இந்தநிலை தொடருமானால் அடுத்த சுனாமி என்ற பீதி தொடருமென்பதில் ஐயமில்லை. அப்படி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. உலகில் அநீதி தலைவிரித்தாடுகின்ற போது கிருஷ்ண பகவான் தோன்றுவார் எனக் கூறப்படுகிறது.

உலகில் அநீதி, அராஜகம் நிலவிய காரணத்தினால்தான் சுனாமி வந்தது என்ற ஒரு சாராரின் கருத்து ஏற்கப்பட வேண்டியதொன்றாயிற்று. எத்தனை சுனாமிகள் வந்தாலும் மனிதனது பிறவிக்குணங்களை மாற்ற முடியாது. அது நிறமூர்த்தத்தில் வந்தது எனினும் மனிதமனங்கள் கட்டி எழுப்பப் பட வேண்டியது அவசியம். பிறருக்கு உதவுகின்ற பண்புகள் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டுமென உளவியலாளர் கூறுகின்றனர்.

### பொதுக்கட்டமைப்பு

இலங்கையின் சரித்திரத்தில் சில ஏற்பாடுகள் திடீரென நடைமுறைக்கு வருவதையும் சில காலம்தாழ்த்தப்பட்டு இழுத்தடிக்கப்பட்டு வருவதையும் சில அட[illegible]ய மறைந்து போவதையும் கண்[illegible]ரகக் கண்டிருக்கிறோம்.

வடக்கு – கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வந்த வேகத்திலேயே இழுத்தடிக்கப்பட்டது. அதேபோல பொதுக்கட்டமைப்பு இன்று சர்ச்சைக்குரியதொன்றாக மாற்றப்பட்டுவருகிறது.

அரசும் புலிகளும் இணைந்து சுனாமி மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபட ஒரு கட்டமைப்பை உருவாக்க முனைந்தபோது பல கோணங்களிலும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

அதிலே புலிகள் இருக்கக்கூடாது என அரசின் பங்காளிக் கட்சி ஜே.வி.பி ஒற்றைக்காலில் நிற்கிறது. அதில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் இடம் பெறவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும், மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீமும் கோரியுள்ளனர்.

தேசப்பற்றுள்ள இயக்கமும் இதற்கெதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளது. எனினும் ஓரிருவாரத்தில் நல்ல முடிவு கிடைக்குமென நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. தற்போது புலிகள் சிலவிட்டுக்கொடுப்புக்களை செய்து அரசின் கட்டமைப்பை ஏற்றுள்ளனர். அதில் சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேலும் ஜே.வி.பி தனது நிலையிலிருந்து இம்மியளவும் பிசகாதது நாட்டில் பாரிய அரசியல் நெருக்கடியைத் தோற்றுவிக்கலாமெனக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி, பிரதமர் மங்கள, அனுரா, ஜே.வி.பியினர் போன்றோர் மத்தியில் சீரான புரிந்துணர்வு இல்லை என்பது பல சம்பவங்களினூடாகவும் அறிக்கைகளினூடாகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. புலிகள் இல்லாமல் பொதுக்கட்டமைப்பு இல்லையென ஹரீம் பீரீஸ் கூறுகிறார். மறுபுறம் பொதுக்கட்டமைப்பு தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் முகாம்களில் இருக்கும் அகதிகளது எதிர்காலம்- ஏன் நிகழ்காலம் கூட- கேள்விக்குறியாகியுள்ளது. அரசியல் லாபம் நிதி ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துவது ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப உதவப்போவதில்லை.

நாளுக்கு நாள் ஏதிலிகள் வீதியில் இறங்கிப் போராட்டங்களை நடத்தத் தலைப்பட்டுள்ளனர். இதனிடையே, கல்வி நடவடிக்கைகள் இன்னும் சீராகவில்லை என்பது வேதனைக்குரியது. அதற்கு இன்னோரன்ன நியாயப்படுத்தப்பட்ட காரணங்கள் உள்ளன.

இவை தனியே கல்விப் பணிப்பாளர்களினால் மட்டும் தீர்த்து வைக்கப்படமுடியாதவை. உணர்வுள்ள கல்விச் சமூகத்தின் பங்களிப்பு இது விடயத்தில் அவசிய கட்டாய தேவையாகவுள்ளது.

அழிந்த 182 பாடசாலைகளை மீள அமைப்பதில் காணிப்பிரச்சினை எதிர்நோக்கப்படுவது பழைய கதைதான். ஆனால் 3 மாதங்கள் கடந்தும் இன்னும் அதற்குத் தீர்வு காணப்படாதது ஏன் என்று வினவப்படுகிறது. ஒரு பாடசாலையில் இருவேறு பாடசாலைகள் காலை மாலை வேளைகளில் நடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். எனின் இதற்கு மாற்றுத் தீர்வு என்ன என்ற வினாவுக்கு விடை காண வேண்டும்.

'பாதிக்கப்பட்ட மக்களுக்கு 40,000 வீடுகள் அமைக்கப்படும், புத்தாண்டில் 10ஆயிரம் வீடகளையாவது மக்களிடம் கையளிப்போம்' என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவீரா காட்டமாக கூறியுள்ளார் .

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை நிரந்தரமாக ஒரு வீடுதானும் இன்னும் நிர்மாணிக்கப்படவில்லை. ஆகவே இன்னும் 10ஆயிரம் வீடுகள் அமைக்கப்படுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**விரி.சகாதேவராஜா**

நிரந்தர இல்லிடம் கோருகின்ற இவ்வேளையில் இன்னும் இடைத்தங்கல் முகாம் கூட இல்லாமல் வெறும் அகதி முகாம்களில் முடங்க வேண்டிய நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளனர். அவர்களுக்கு புத்தாண்டில் புது இடம் கிடைக்குமா?

**Organ / Violin Notes**

• புதிய பாடல்கள் எவ்வாறு இசைக் கருவிகளில் வாசிப்பது என்பது பற்றிய "கேள்வி ஞானம்" என்ற புத்தகமும்- புதிய சினிமாப் பாடல்களுக்கான இசைக் குறிப்புகள் பாகம் 36 ஆகிய வையும் வெளிவந்துள்ளன.

S.S.Rajeendran
Karaweena Isal Manram
75, Tample Road, Nallur, Jaffna.
T.P.No :- 0713055991.
(தபால் மூலம் பெறுவதற்கு ரூபா 300/=)

**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞ[illegible]க மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல், ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

ஏப்ரல் 20 – 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 2/A, Bankshall Street, Colombo - 11.
TEL No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**

மே 07 – 08 ஆம் திகதிகளில்
Varni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**

ஏப்ரல் 10 -15
A.S.N. கற்றுலாவிடுதி
392,/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

ஏப்ரல் 17 – 23, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## புதிய ஆண்டு விடிவைத் தருமா?

காலநதி ஓட்டத்தில் பழையன கழிதலும் புதியன புகுதலும் புதிய விடயம் அல்ல. அவை வழிவழியாய் வந்த நிகழ்வுகள். வழிவழியாய் வந்த வாழ்வியல் அனுபவங்கள். அந்தவகையில் சுழன்று கொண்டிருக்கும் காலச் சக்கரத்தின் மற்றொரு புத்தாண்டு புலர்ந்திருக்கிறது.

தாரண வருடம் விடைபெற தரணியிலே அடிஎடுத்து வைக்கிறது பார்த்தீப வருடம்.

சித்திரையில் புத்தாண்டைக் கொண்டாடுவது அர்த்த புஷ்டியான விடயம் ஆகும்.

சூரியன் நேர் கிழக்கே உதித்து நடுப்பகலில் நேர் உச்சிக்கு வந்து மாலை நேர் மேற்கிலே அஸ்தமிக்கும் நாட்கள் இரண்டு.

அவை விஷு என்று பெயர் பெறும். அவற்றுள் சூரியன் மேட இராசிக்குள் பிரவேசிக்கும் மேடவிஷுநாள் தான் சித்திரைப் புத்தாண்டு என்று தமிழர்களால் கொண்டாடப்படுகிறது.

கால தேவனின் இயக்கத்தை வருடத்துக்கு ஆறு பருவங்களாக வகுத்தவன் தமிழன். அதில் சித்திரைப் புத்தாண்டுப் பிறப்புடன் ஆரம்பமாகும் வசந்தருது முக்கியமானது.

முன்பனி, பின்பனி கழிந்து இளவேனில் காலத்தில் மலர்கள் வாரிச் சொரிந்து மணம் பரப்ப இயற்கையே பூரித்துப் பிரவேசித்து நிற்கும் காலம் இது.

இயற்கை அன்னையின் பெருஞ்சொத்தான தாவர வர்க்கங்கள் — விருட்சங்கள் புத்தாடை போர்த்து புதுமணம் கமழ்ந்து புதுப்பொலிவுடன் புதுத் தோற்றமும் கொண்டு காட்சி அளிக்க எங்கும் புத்தெழுச்சி வெளிப்பட்டு நிற்கும்.

அந்த புத்தூக்கம் தரும் காலத்தையே ஆண்டின் தோற்றமாகக் கொண்டு புத்தாண்டாக்கி வருட வசந்தத்தை எதிர்பார்த்து வாழ்வியலை ஆரம்பிக்கின்றான் தமிழன்.

அந்த வகையில் பிறக்கின்ற புத்தாண்டில் அமைதியையும் சமாதானத்தையும், கௌரவத்துடன் கூடிய சௌபாக்கிய வாழ்வையும் வாழ்வியல் திருப்தியையும் ஈழத்தமிழன் எதிர்பார்ப்பது நியாயம் தானே.

எதிர்கால நல்வாழ்வை ஏக்கத்தோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஈழத்தமிழருக்கு — ஏன் இலங்கைத் தீவு மக்களுக்கு — இந்த பார்த்தீப வருடம் தரப்போகும் வாழ்வு தான் என்ன?

இதுதான் இந் நாட்களில் எம் அனைவர் மத்தியிலும் எழும் கேள்வி.

புலர்வது புத்தாண்டு என்ற புதுமை உணர்வே பொதுவாக மக்களுக்கு புத்துணர்ச்சியையும் புத்தூக்கத்தையும் புதுத்தென்பையும் புதிய உற்சாகத்தையும் புதிய உத்வேகத்தையும் தரும்.

ஆனால், ஈழத்தமிழர் ஏக்கத்துடனேயே புதிய ஆண்டையும் எதிர்நோக்குகிறார்கள்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் வாய்ப்புக்கள் இன்னும் அருகியே காணப்படுகின்றன. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை மன்னெடுப்பதற்கான பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதிலும் இதுவரை இணக்கம் இல்லை. ஜே.வி.பி முரண்டு பிடிப்பதால் ஆளும் கூட்டமைப்பு ஆட்டம் கண்டு வருகிறது. ஆழிப்பேரலை அச்சம் இன்னும் மக்களை ஆட்டிப் படைக்கிறது. மக்கள் தாங்க முடியாத அளவுக்கு விலைவாசிகள் கிடுகிடு என உயர்ந்து வருகின்றன. ஜனாதிபதி தனது அதிகாரத்தை தக்க வைப்பதிலேயே கண்ணாக இருந்து வருகிறார்.

யுத்த நிறுத்தம் முறிவடைந்து மீண்டும் போர் வெடிக்குமானால் எவரும் நினைத்துப் பார்க்க முடியாத பேரழிவுகள் ஏற்படும்.

இப்படியான நிலையிலே — அடுத்து என்ன நடைபெறப் போகிறதோ என்ற ஏக்க நிலையிலே — புத்தாண்டு பிறந்திருக்கிறது. பிறந்த ஆண்டு தமிழ் மக்களுக்கு விடிவைத்தரும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருப்போம்.

# தொடரும் நிழல் யுத்தம் நிஜ யுத்தத்திற்கு வழிவகுக்குமா?



கிழக்கில் புலிகளுக்கெதிராக நடந்து வந்த தாக்குதல்கள் மேலும் பரவி விரிந்துள்ளன. மட்டக்களப்பு, பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த புலிகள் மீதான கரந்தடிப்படை (கெரில்லா) தாக்குதல்கள் இப்போது திருகோணமலைக்கும் பரவியுள்ளன.

புலிகள் அமைப்பில் கருணா வெளியேற்றத்துடன் மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் இத்தகைய கெரில்லாத் தாக்குதல்கள் ஆரம்பமாகின. புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள் எல்லாவற்றுக்கும் கருணா குழு மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆனால், புலிகள் இதனைத் திட்டவட்டமாக மறுத்து வருகிறார்கள். கருணா குழு என்ற பெயரில் துரோகிகளான தமிழர்கள் சிலரை வைத்துக் கொண்டு இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர்தான் தமது உறுப்பினர்களைத் தாக்குகிறார்கள் என்று புலிகள் திடமாக நம்புகிறார்கள். கண்காணிப்புக் குழுவிடமும் இது பற்றி வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

கருணாவின் பிறழ்விற்குப் பின்னர் மட்டு. - அம்பாறை மாவட்ட எல்லைப் பகுதிகள் புலிகள் உறுப்பினர்கள் மீது பதுங்கித் தாக்குவதற்கான களங்களாகின. எல்லை முன்னணிக் காவலரண்களும் அவ்வப்போது தாக்கப்பட்டன.

மட்டு. - அம்பாறை மாவட்டம் இவ்வாறு கொதிக்கும் அரசியல் களமாக விளங்கிய அதே தருணத்தில் திருகோணமலை சற்று நிதானமாக, அமைதியாகக் காணப்பட்டது. இப்போது அங்கும் புலிகள் இலக்கு வைக்கப்படுகிறார்கள்.

புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை மட்டு. - அம்பாறை மாவட்டங்களுக்குள் மட்டும் மட்டுப்படுத்தி வைத்துக்கொள்ளாமல் அவற்றைப் பரவலாக்க வேண்டிய தேவை - புலிகளுக்கு எதிரான குறிப்பிட்ட சக்திகளுக்கு - ஏற்பட்டுள்ளது.

இதனாலேயே வடக்கில் வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கும் கிழக்கில் திருகோணமலை மாவட்டத்திற்கும் புலிகளுக்கு எதிரான கெரில்லாத் தாக்குதல்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. மட்டு.- அம்பாறை மாவட்டங்களில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கி வந்த கருணா குழுவினர் என்று கூறப்படும் சிலர் வவுனியாவுக்கும் திருகோணமலைக்கும் நகர்த்தப்பட்டுள்ளனர் என்கின்றன உள்ளக புலனாய்வுத் தகவல்கள்.

இது குறித்து புலிகளும் முன்கூட்டிய எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளார்கள். கருணா அணியினர் எனக்கூறப்படும் தமிழ்க் கூலிப்படையைச் சேர்ந்தவர்கள் சிலர் திருகோணமலைக்கு நகர்த்தப்பட்டுள்ளார்கள் என்று கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முன்னரே முறையிட்டுள்ளனர்.

"கருணா அணியைச்சேர்ந்தசிலர் கடந்த 6ஆம் திகதி மஹிந்தபுர (திருகோணமலை) இராணுவ முகாமில் தங்கியிருந்தனர். இது பற்றி நாம் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை" - என்று புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

8 ஆம் திகதி அதிகாலை 4.00 மணியளவில், திருகோணமலையில் உள்ள புலிகளின் பூநகர் சோதனைச் சாவடி தாக்கப்பட்டது. இதில் புலிகளின் உதவியாளர் ஒருவர் கொல்லப்பட, துணைப்படை வீரர் ஒருவர் காயமடைந்தார். கருணா குழுபற்றி புலிகள் முறையிட்டு இரு நாள்களில் இந்தத் தாக்குதல் நடந்தது.

தாங்கள் முறையிட்ட போதே கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தத் தாக்குதலைத் தடுத்திருக்கலாம் என்று எழிலன் கூறினார்.

தமது சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்தியவர்கள் இராணுவச் சீருடையே அணிந்திருந்தனர் என்று புலிகள் குற்றஞ்சாட்டினர்.

கிழக்கில் அமைதியாக இருக்கும் திருகோணமலை மாவட்டத்தையும் குழப்பும் செயல் இது என்று கூறினார் எழிலன்.

இதேபோன்று வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கும் கருணா அணியினர் நகர்த்தப்பட்டுள்ளனர் என்று புலிகளின் புலனாய்வுத் தகவல்கள் கூறியுள்ளன. இது குறித்து மக்களை விழிப்புடன் இருக்குமாறும் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

அதற்கேற்றாற்போன்று புலிகளின் வவுனியா, மன்னார் மாவட்ட அரசியல்துறை அலுவலகங்கள் கடந்த மாதத்தில் கிரனேட் தாக்குதல்களுக்கு உள்ளாகின. இவற்றில் சிலர் காயமடைந்தனர்.

### தாக்குதல்களை பரவலாக்கும் தேவை ஏன்?

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று யுத்தமற்ற வருடங்கள் ஓடி விட்டன. இந்தக் காலப் பகுதிக்குள் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றி வந்த பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 24 புலனாய்வாளர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வைத்துக் கொல்லப்பட்டனர்.

இதனால் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு பெருமளவில் நலிவடைந்துள்ளது. அதன் போரிடும் திறன் மழுங்கடிக்கப்பட்டுள்ளது. போர் நடந்த காலங்களில் புலனாய்வுப் பிரிவின் ஊடுருவித் தாக்குதல்களுக்குப் பொறுப்பாக இருந்தவரான கப்டன் நிலாம் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டார் என்று கூறப்படுகின்றது.

சமாதான முயற்சிகளும் இப்போதைக்கு உருப்படியான கட்டத்தைஎட்டும் நிலையில் இல்லை. இந்த நிலையில் தனது புலனாய்வுத் துறையை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் இராணுவத்துக்கு எழுந்துள்ளது. மீண்டும் ஒரு போர் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு தமது புலனாய்வுக் கட்டமைப்பை பலமாக வைத்திருப்பது இராணுவத்துக்கு அவசியமானது.

இதற்காக, கருணாவின் பிறழ்வால் ஏற்பட்ட சாதக நிலையை இராணுவம் பயன்படுத்துகின்றது. போர் அற்ற சூழ்நிலையில் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் தனது புலனாய்வுப் பிரிவிற்கு ஆட்களைத் திரட்டிக் கொள்ள இராணுவம் முயல்கிறது. கிழக்கு மற்றும் வடக்கில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இந்த ஆட்திரட்டல் முயற்சியில் அது இறங்கியுள்ளது.

தம்முடன் சேர்ந்து இயங்கும் சிலரை வைத்து புலிகளின் அதிருப்தியாளர்களையும் மாற்று இயக்க உறுப்பினர்களையும் தம்முள் ஈர்த்துக் கொள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவு தயாராகிவிட்டது.

பதிலடியாக இராணுவத்திற்காக உளவுபார்ப்பவர்களும், இராணுவத்துடன் சேர்ந்தியங்குபவர்களும், முன்னாள் ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களும் கொல்லப்படுகிறார்கள்.

இந்த நிலையிலேயே கிழக்கு மாகாணம் கொலைகளின் களமாக மாறியுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தப்படி இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களை அரசு களைந்து, அவர்களை வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேற்றி விட்டால் இத்தகைய கொலைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் பானு தெரிவித்திருக்கிறார். அண்மையில் தன்னைச் சந்தித்துப் பேசிய கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹெலண்டிடம் அவர் இந்தக் கருத்தை வலியுறுத்தினார்.

### திருமலையில் புலிகள் நிலை மீது தாக்குதல்

இத்தகையதொரு சூழ்நிலையிலேயே திருகோணமலையில் உள்ள புலிகளின் முன்னரங்க சோதனைச் சாவடி தாக்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் உள்ள இந்தச் சோதனைச் சாவடியூடாகவே மக்கள் பயணம் செய்து வருகின்றனர். தாக்கப்பட்ட புலிகளின் நிலையில் இருந்து 500 மீற்றர் தூரத்திலேயே இராணுவத்தினரின் மஹிந்தபுர முகாம் அமைந்துள்ளது.

மூதூர் - மட்டக்களப்பு வீதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியின் எல்லையிலேயே இந்த இராணுவ முகாம் கருணா குழுவின் ஆதாரவுத் தளம் என்ற குற்றச்சாட்டு உள்ளது.

இந்த முகாம் பகுதியிலிருந்து வந்த 9 பேரே தமது நிலையைத் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றனர் என்று புலிகள் கூறுகின்றனர். இதில் 3 பேர் சிங்களவர்கள் என்றும் அவர்கள் இராணுவச் சீருடையில் இருந்தனர் என்றும் ஏனைய 6 பேரும் சிவில் உடையில் இருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

மஹிந்தபுர முகாமின் பின்புறமுள்ள காட்டுப் பகுதியில் இவர்கள் பதுங்கி நின்றுள்ளனர். அப்பகுதிக்கு வேட்டையாட வந்தவர்களைப் பிடித்து தமக்கு அரணாக்கி, அவர்களை முன்னே செல்ல விட்டு இந்த 9 பேரும் பின்னே சென்றுள்ளனர். புலிகளின் முன்னரங்க எல்லையைக் கடந்து சோதனைச் சாவடியை அண்மித்ததும் முன்னே சென்ற வேட்டைக்காரர்களை விரட்டியடித்து விட்டு தமது தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

ஆர்.பி.ஜி. ரொக்கட் மற்றும் சிறிய ரக துப்பாக்கிகளால் தாக்குதல் நடத்திய அக்கும்பல் பின்னர் தப்பிச்சென்றுவிட்டது. மஹிந்தபுர முகாம் நோக்கியே அவர்கள் சென்றனர் என்று புலிகள் தெரிவித்தனர்.

இதே சாவடி மீது சில வாரங்களுக்கு முன்னரும் தொலைவிலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. பூநகர் நிலைமீதான தாக்குதல் கருணா குழுவைச் சேர்ந்த பிள்ளையான் என்பவரின் திட்டமிடலின் கீழ் ரியசீலன் என்பவரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது என்று கருணா சார்பான இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டது.

ரியசீலன் என்பவர் கருணா குழுவில் இருக்கும் 18 வயதுக்குக் குறைந்த சிறுவனாவார் என்று கூறப்படுகின்றது. இவரது படமே வெலிகந்தையில் கருணா முகாம் இருப்பதாகச் செய்தி வெளியிட்ட 'சண்டே லீடர்' பத்திரிகையின் முன் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்று ஒரு நாள் கடப்பதற்கிடையில் மூதூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார். துப்பாக்கி மற்றும் திசையறி கருவி என்பவற்றுடன் அவர் தமது பகுதிக்குள் ஊடுருவியிருந்தார் என்று புலிகள் கூறினர்.

இவர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டார் என்று இராணுவத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது குறித்த சுயாதீன தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. எனினும் மறுநாள் (10-04-05) படைச் சிப்பாய் புலிகளால் விடுவிக்கப்பட்டார்.

### ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்கள் மீதான தாக்குதல்

புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் ஒருபுறம் இருக்க கடந்த வாரம் கிழக்கிலும் வடக்கிலும் முன்னாள் தமிழ் ஆயுதக்குழுக்களின் உறுப்பினர்களை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கருணா குழுவினர் என்று கருதப்படுபவர்கள் அல்லது அவர்களுக்கு உதவுபவர்கள் என்று கருதப்படுபவர்களை விட, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் இயக்கங்களின் உறுப்பினர்களில் அதிகமானோரே கடந்த வாரத்தில் தாக்குதலுக்கு இலக்குகளாகியுள்ளனர். இந்தகைய தாக்குதல்களில் கடந்த வாரம் மட்டும் 6 பேர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர்.

பெப்ரவரி நடுப்பகுதியில் இருந்து ஏப்ரல் 8ஆம் திகதி வரை ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி உறுப்பினர்கள் 50பேர் வன்முறைத் தாக்குதல்களுக்கு இலக்காகினர் என்றும் இதில் 23 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர் என்றும் அந்தக் அணியினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

### புலிகளின் கட்டமைப்பு மாற்றம்

கிழக்கில் முன்னர் இருந்த புலிகளின் கட்டமைப்பு முற்றாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பின் பெரிய பிரதேசமான வாகரைப் பகுதி மட்டு. - அம்பாறை மாவட்டப் பிரிவின் கீழ் இருந்து பிரிக்கப்பட்டு திருகோணமலை மாவட்ட புலிப்படைகளின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களும் புதிய நிர்வாகக் கட்டமைப்புக்களும், கருணா குழுவினரால் புலிகளின் பகுதிக்குள் நீண்ட தூரம் ஊடுருவி தாக்குதல்கள் நடத்துவதைச் சாத்தியமற்றதாக்கியுள்ளன என்கிறார்கள் இராணுவ ஆய்வாளர்கள். இதனால் இவர்கள் பரந்து விரிந்து இலகுவாகக் கிடைக்கக் கூடிய இலக்குகளை நோக்கி நகர்கிறார்கள். அத்துடன் கிழக்கில் மட்டுமல்லாது அனைத்துப் பிரதேசங்களிலும் புலிகளுக்கு எதிரான சக்திகள் வலுப்பெற்று வருவது போன்ற தோற்றப்பாட்டையும் ஏற்படுத்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு முயல்கிறது.

### - பின்கலன் -

நீண்டகால போரியல் நோக்கில் இது புலிகளுக்குத் தலையிடி தரும் ஒரு இராணுவ நடவடிக்கையாக இருக்கும் என்று இராணுவம் கருதுகிறது. முடிந்த வரை நிலைமையைக் குழப்புவது என்பதையே நோக்கமாகக் கொண்டு இத்தகைய தாக்குதல்கள் திட்டமிடப்படுகின்றன.

இத்தகையதொரு ஆபத்தான சூழல் புலிகளை மேலும் சீற்றமுற வைப்பதுடன் சமாதானத்தை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடுகளையும் குறைத்துக்கொண்டே செல்லும்.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமான பத்திரிகையான 'விதலைப்புலிகள்', ஏடு அரசு நிழல் யுத்தத்தை தொடர்ந்தால் நிஜ யுத்தம் வெடிக்கும் என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறது என்பதும் கவனிக்கத்தக்கது.

# சித்திரைப் பொங்கல் நினைவுகள்

சித்திரைப் பொங்கல் என்றதும், எனக்குப் பழைய ஞாபகங்கள் துளிர்விட்டு முத்து முத்தாய்க் கண்ணீர்த் துளிகள் பூமியில் கொட்டின. எனது பழைய ஞாபகங்களை அது அவிழ்த்துக் கொட்டிய போது அன்று வாழ்ந்த எமது மூதாதையோர்களின் முகம் அவ்விடம் தெரிந்தது. அவர்கள் கட்டிக் காத்த ஒரு கலாசாரப் பண்பாடும் கண்களின் உள்ளே, ஒரு ஒலி, ஒளிக் காட்சியாய் உள்ளத்தில் விரிந்து கிடந்தது. நான் ஐம்பது அகவைக்கு மேல் பதினைந்து ஆண்டுகள் அடி எடுத்து வைத்தபோதும் அந்த நினைவுகள் -அந்த அற்புதக் காட்சிகள்- என் முன் விரிந்து ஒரு திரைப் படமாக ஓட ஆரம்பத்தது. இந்தச் சித்திரைப் பொங்கலில் அதனை உங்கள் முன் அவிழ்த்து ஓட விட முயற்சிக்கிறேன், ஒரு குழந்தைபோல்!

இன்று தைப் பொங்கல், சித்திரை வருஷம், தீபாவளி என்றால் மெய்கண்டான், யூனிலங்கா, அஸ்டலஷ்மி கலண்டர்களை அவசரத்தில் பிரித்துப் பார்த்து இன்று தானா சித்திரைப் பொங்கல் என்று பார்க்கும் மனோபாவம் இருக்கிறது. நாட்கள் மின்சாரம் போல் ஓடிக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கைச் சுமை மலைபோல் படிக்கட்டுக்கள் வைத்து ஏறிக்கொண்டிருக்கிறது. அதனால் மக்கள் எமது கலாசாரங்களை மறந்து கொண்டிருக்கிறார்கள். எந்தப் பண்டிகை வந்தாலும்..... அட அது நாளைக்கா? நாம் 'ரெடி' யாக வர முன்பே பண்டிகை வீட்டு வாசலில் வந்து விட்டதே... எனக் கவலைப்படும் ஒரு மக்களே இன்று வாழ்கிறார்கள்... சுமார் 50 ஆண்டுகட்கு முன்பு அவ்வாறு இல்லை... தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு... தீபாவளி... அட ஆடிப்பிறப்பு... விளக்கீடு.... கூட... அதன் ஏற்பாடுகள் கூட ஒரு 15 நாட்களுக்கு முன்பே களைகட்டத் தொடங்கிவிடும்.

சீனா என்றொரு நாடு இருக்கிறதே... அது எந்தப் பக்கம் இருக்கிறது என்ற விபரம் எனக்குப் படிக்கும் போதுதான் விளங்கியது. ஆனால் எந்தப் பண்டிகை என்றாலும் சரிதான் ....... டிக்..... டிக்...... எனச் சத்தம் போட்டு தொடர்ந்து வெடிக்கும் சீன வெடிக் கட்டு இருக்கிறதே... அதை எந்நாளும் என்னால் மறக்க முடியாது. பல வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்ட கட்டுக்களில் சுமார் ஐம்பது சீன வெடிகளைக் கொண்ட கட்டுகளை எனது அப்பா சித்திரைப் புத்தாண்டுக்காக வாங்கி வைத்து ஒளித்து வைப்பார். எல்லாம் குழந்தையாக இருக்கும் எங்களுக்குச் சித்திரைப் புது வருடத்தில் வெடிக்க வைத்துச் சந்தோசப் படுத்துவதற்குத் தான்! ஒரு வேலியில் விரித்துக் கட்டிக் கொளுத்துவதற்கு தயார்படுத்திய சீனவெடிகள், அது வெடிக்கும் போது சீனாவும் - தமிழனும் சேர்ந்து நடத்தும் பொங்கலோ என்று நான் அதிசயப் படுவேன்.... சீன வெடி எங்கே வாங்கலாம் எனக் கேட்ட எனது கேள்விக்கு, நான் கடையிலே சீனவெடி வாங்கலாம் என்பதைத் தவிர்ப்பதற்காக, அது சீனா மாமி கொண்டு வந்து தந்தவ... அந்த நேரம் நீ ஸ்கூல் போய்விட்டாய் எனக் கயிறுவிட்ட எனது தந்தையாரின் கூற்றை நான் நூறு வீதம் நம்பி விட்டது தான்... இத்தனை வருசமானாலும் அதை நான் ஞாபகப்படுத்தி வைத்திருப்பது தான் ஆழ்மனக் கொடுமை.



சித்திரைப் புதுவருசம் அன்று முற்றத்தில் பொங்கும் வழக்கம் அன்று இருந்தது. (இன்றும் இருக்கிறது; கொஞ்சம் அருகிப் போய் விட்டது) எங்கள் ஊரில் இருந்த பல்வேறு ரகமான பூக்களையும் முற்றத்தில் கொட்டி, பொங்கல் பானையை வைக்கும் இடத்தை பசுவின் சாணத்தால் மெழுகி அதன்மேல் வெள்ளை வெளேர் என்ற கற்களை அடுக்கி அதன்மேல் பொங்கல் பானையை வைத்து, அதனைச் சுற்றி சோடனை அமைத்து நிறைகுடம் வைத்துச் சாமி வணங்கி, அடுப்பை மூட்டி, ... பொங்கல் பொருட்களை அம்மாவும், அப்பாவும் சேர்ந்து சரிப்பண்ணி பொங்கி வரும் போது.... எடுத்துக் கடைந்து வாழையிலையில் போட்டு.... வாழைப்பழங்களின் மேல் சாம்பிராணிக் குச்சிகளைக் கொளுத்தி வழிபடும் காட்சி இருக்கே... அதனை இனி மீட்டெடுக்க முடியாது. எங்கடை வீட்டில் பொங்கலைப் பார்க்க என்றே அக்கம் பக்கத்துச் சிறு பசங்க... குண்டு மணிபோல் வளர்ந்து வந்த சிறு பெண்கள் இப்படிப் பலர் புத்தாடை அணிந்து கலாசாரத் தொட்டில் போல் வந்து நின்று அவதானித்ததையும் எனது ஆழ்மனப் பதிவுகளில் இருந்து விலக்கி விட முடியாது... சே... அது மட்டும் அல்ல... பொங்கல் முடிந்து எல்லோரும் பொங்கலைச் சாப்பிட முன்பு எனது தந்தையார்.... ஒருசினிமாப்பாடல்ஒன்று பாடுவார்... அதனையும் கூட என்னால் மறக்க முடியவில்லை. ஊசிப் பட்டாசால் வேடிக்கையாக... வெடிவிட்டார்... ஐயா படார்படார், என்ற சினிமாப்பாடலே அது. அது சீன வெடிகள் வெடித்த காலத்தை நினைவூட்டுவதால் அதனையும் என்னால் என்றும் மறக்க முடியாமல் உள்ளது.

நான் வாழ்ந்த கிராமத்தின் கடற்கரை நீளமானது. வருஷப்பிறப்பு என்றாலே கிளித்தட்டு என்ற விளையாட்டு நடக்கும். அதைப் பார்க்கவே ஊர் திரண்டு புறப்பட்டு விடும்... மாட்டுச் சவாரிப் போட்டியும் பின்னேரம் நடத்தப்படும். அதைவிட ஊர்க் கோவிலில் பிற்பகல் 3.30 மணியளவில் நடத்தப்படும் போர்த்தேங்காய் அடி இருக்கே.... அதைச் சொல்வதற்கு இரண்டு வாய்கள் வேண்டும்; போர்த்தேங்காய் அடிகளில் நடந்த 'அக்சன்' களைச் செல்வதற்கு... நாலு கைகள் வேண்டும். போர்த்தேங்காய் அடி என்றால் என்ன என இன்று பல இளைஞர்கட்குத் தெரியாது. அதனால் அதனைவிளக்கப்படுத்தும் முகமாகச் சில விசயங்களை நீட்டி எழுதலாம் என்பது எனது எண்ணக் கிடக்கை.

ஒரு கோயில் அல்லது ஒரு பொதுவிடம்... அங்கே போர்த்தேங்காய்களும், கறித்தேங்காய்களும், அடித்தேங்காய்களும் குவிக்கப்படும். போர்த்தேங்காய் என்பது ஒரு தென்னை மரத்தில் காய்த்த ஒரு சிறிய முறுகல் தேங்காய். அடித்தேங்காய் என்பது போர்த்தேங்காயை அடித்து வெடிக்க வைப்பதற்காகப் பாவிக்கப்படும் பெரிய தேங்காய். கறித்தேங்காய் என்பது ஒரு போர்த்தேங்காயை அடித்து ஒருவர் நொருக்கி விட்டால் அவருக்குக் கொடுக்கும் பரிசு. அடித்து நொருக்கப்படாவிட்டால், அடித்தேங்காயைத் தோல்வியடைந்தவரிடம் பறிகொடுக்க வேண்டி ஏற்படும். அன்று ஒரு தேங்காயின் விலை5சதம். ஒரு தேங்காயை அடித்து நொருக்கு முன்பு தனது தேங்காய் அடி காயங்களில் இருந்து தப்பி உயிர் வாழ வேண்டும் என்பதற்காக அந்தத் தேங்காயை ஒரு 'ரிக்சாக' உருட்டி விடுபவர் மண்ணில் கொழுவி வைப்பார்! போர்த் தேங்காயை அடித்து நொருக்குபவர் வேட்டியை உயர்த்திக் கட்டி, தேங்காயை இரண்டு கைகளுக்குள் வைத்து 'எடுக்கும் காட்சியிருக்கல்லோ... அது உண்மையில் இன்று... நடக்கும் ஒரு ஆயுதச் சண்டையை ஞாபகப்படுத்தும்.... அடித்து நொருக்கப்படும் தேங்காய்கள் குவியலாக ஒரு மூலையில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் காட்சி... ஒரு கொப்பறாத் தோட்டத்தையே ஞாபகப் படுத்தும்...... இது மட்டும் அல்ல...... போர்த்தேங்காய் அடியில் வீரம் மாத்திரம் விலை போவது இல்லை.... அது ஒரு தனிப்பட்ட சண்டையாக மாறிச் சித்திரை வருடம் ஒரு களேபரம் ஆனதையும் பார்த்திருக்கிறேன்...... சந்தோசத்தின் மத்தியிலும் ஏனிந்தத் தேவையில்லாத விளையாட்டு என மனம் கலங்கி இருக்கின்றேன்.

-பாணபத்திரன்-

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் நகைச்சுவையாகச் சில கூட்டங்களில் சொல்வார்; 'தமிழனின் மேதினம்' தான் சித்திரைப் புதுவருடம் என்று! யோசித்துப் பார்த்தால்

(11 ஆம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

நியூ ராகம்ஸ் பட்டுச்சோலை

உங்களுடைய
முகூர்த்தப் பட்டுப்புடவைக்கும்
ரெடிமேட் ஆடைகளுக்கும்
நாடவேண்டிய ஸ்தாபனம்.

New Ragams Padducholai

இல: 7,8,24 நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 7179

நியூ சோபனா ஆடையகம்

இன்றைய நவநாகரிகத்துக்கேற்ப
அனைத்து ஆடைகளையும்
தெரிவு செய்திட நீங்கள்
நாடவேண்டிய
ஒரே இடம்

NEW

SHOBHANA TEXTILES

16, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777 574027

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்

## புத்தாண்டில் சமாதானம்

புத்தாண்டில் சமாதானம்
வருமெண்டால்
எனக்கெல்லாம்
உனக்கெல்லாம்
சந்தோசம் என்றால்
பேசுங்கால் எல்லோரும்
ஒருமித்தால், விட்டுக்
கொடுப்புகளைச் செய்தால்
இரு தரப்பும் ஏற்றால்,
புரிந்துணர்வும் புரிந்துணர்வு
போல் நடந்தால்
ஜே.வி.பியும் ஓம் என்றால்
வந்திடுமே சமாதானம்

– ஆணி முத்தன் –

# சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புடன் சாந்தி, சமாதானம் நிலைக்கட்டும்

தமிழர்கள் வாழ்வில் பல தினங்கள் கொண்டாடப்படும் நாட்களாக உள்ளன. அதில் முக்கியமானது தமிழனின் 'மே' தினம் எனச் சிறப்பித்து இன்று சொல்லப் படும் சித்திரைப் பொங்கல் தினமாகும். இவ்வருடம் பார்த்தீப சித்திரை வருடம் எனச் சோதிடர்கள் இத்தினத்தைக் குறிப்பிடு கின்றனர்.

தமிழ் வருசத்தின் முதல் மாதம் சித்திரை! சூரியன் இம்மாதத்தில் மேடராசியில் தோன் றுகிறான். அந்நாள் சங்கராந்தியின் விசேட புண்ணியகாலம்! இப்புண்ணிய காலமே சித்திரை வருடப் பிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

நிலங்களை ஐந்தாக வகுத்து ஒரு ஒழுங்கு முறையை வகுத்த தமிழ் மக்கள் நிலப்பாகு பாடு இன்றி நாம் தமிழர் என்ற தோரணை யில் எல்லாத் தமிழர்களும் கொண்டாடும் தேசியத் திருவிழாவாக புத்தாண்டுக் கொண்



டாட்டங்களைத் தமிழர்கள் வகுத்துக் கொண் டது போற்றுதற்கு உரியது.

தமிழகத்தின் பிரபல்யமான கோயி லான மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் மூலஸ் தானத்தை வடக்கு நோக்கிச் செல் லும் சூரியன் இந்நாளில் தான் கடக்கிறது. வானியற் கலைகளின் ஊடுதான் தமிழன் வருடப்பிறப்பையும் கொண்டாடுகின்றான் என்ற விஞ்ஞான உண்மையும் இன்று நடைநாட்டப்பட்டுள்ளது.

தமிழர்கட்கும், சிங்களவர்கட்கும் புதுவரு டம் ஒரே தினத்தில் தான் வருகின்றது. நாம் ஒரே நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டு கள் ஒற்றுமையாக வாழ்ந்தோம் என்பதை இது விளக்கி நிற்கும்.

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று மருத்துநீர் வைத்து, மங்கல நீராடி, மங்கல மான புது உடுப்புக்கள் புனைந்து சிறப்புற வில்லை; களிப்புறவில்லை. உறவுகள் சிறையில் வாட, இன்னும் பலர் அகதி முகாமில் வாட, பேராளிகள் போர்க்களத் தில் மடியச் சித்திரைப் புத்தாண்டு கொண் டவா முடியும்? ஆனாலும் ஈழத்தில் அமைதி, சமாதானம், உரிமை என்பன கிடைக்கும் என்பது போல் அரசும், புலிகளும் ஏற்படுத்தி இருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஆரம்பகாலங்களில் தோற்றம் காட்டியது. இப்போது முறுகல் நிலை இருக்கின்றது. இந்த நிலை நீடித்தாலும் சித்திரைப் புத் தாண்டைக் கொண்டாடுவதில் தமிழ் மக் கள் மத்தியில் இவ்வாண்டு ஆர்வம் உள் ளது என்பதை மறுக்க முடியாது.

தமிழனின் 'மே' தினம் என்று சிறப்பிக் கப்படும் இன்றைய தினத்தில் இருந்து போர் தவிர்த்து மீண்டும் உரிமையுடனான சமாதானத்துக்குப் புறப்பட்டுச் செல்ல அர சினை நாம் வற்புறுத்துவோம்! பெற்ற பிள் ளைகளை மங்கலமாய்ப் பாராட்டி, பொங் கல் பொங்கி, புது மலர்களால் இறைவனை அர்ச்சித்து, அமுதுண்டு, இறைவனவன் ஆசீர்வாதம் தனைப்பெற்று, கைவிசேடங் கள் பலவழங்கி உறவினர் வீடுகட்கும் சென்று மகிழ்வர். அது மட்டோ... நாள் வியாபாரம் தொடங்கல், ஏர் மங்கலம், புதுவிதைப்பு எனப் பல்வேறு நிகழ்ச்சியூடாகப் புதுவரு டம் நகர்ந்து செல்லும்.

சித்திரைப் புத்தாண்டு இத்துடன் முடி வதில்லை. அன்று... போர்த் தேங்காய் அடி... கிளித்தட்டு மறித்தல், ஊஞ்சலாடுதல் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன. கால மாறுபாட்டால் இவை இப்போது அருகிக் காணப்பட்டாலும் தமிழன் கலாசாரப் பண்பாட்டில் ஒரு முக்கிய நாள் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வாகும்.

நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சினை காரணமாக ஈழத்தில் பல வருடங்கள் சித் திரைப் புதுவருடங்கள் சோபை இழந்தி ருந்தன. இந்தப் புத்தாண்டு தினத்தில் நல் லதை நினைப்போம்; நடக்கும் என எதிர் பார்ப்போம்.



Music World
The Name Of Music & Movies
எம்மிடம் திரை இசை
நட்சத்திரங்களின் புதிய - பழைய
திரைப்படப் பிரதிகளின் வீடியோ சீடி,
ஓடியோ சீடி, டிவீடிகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்!
மியூசிக் வேல்ட்


கல்யாண பட்டுப் புடைவைகளின்
கைராசி நிறுவனம்...
புதிய
ராசி சில்க்ஸ்
NEW RASI SILKS
70,71A, நவீன சந்தை யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 2225571

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

வன்னி மாநகரில்
மனம் கவர் ஆடை அணிகளை
ஆண், பெண் இருபாலருக்கும்
தெரிவுசெய்திட நீங்கள்
அனைவரும் நாடவேண்டிய
ஒரே இடம்
KG கீர்த்திகாஸ்
34B, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024-222 0099

நல்லி சில்க்ஸ்

திருமண பட்டுச் சாறிகள்,
சோளி கிற், சேட்டிங்,
சேட்ஸ், ஸ்கேட் & பிளவுஸ்,
இந்தியன் சாறி வகைகள்,
சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற
றெடிமேட் ஆடைகள்...
Nalli Silks
121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 2225573

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்

## புதுவருடத்தில் பலரக எதிர்பார்ப்புகள்

காலம் கடிதெனச் சுழல்கிறது சென்ற வருடம் வரலாறு ஆகிவிட்டது. பார்த்திப வருடம் புதுவருடமாகி விட்டது! நம்பிக்கையுடன் மக்கள் பார்த்திப வருடத்தைப் பார்க்கிறார்கள். பழையன கழிதலும் புதியன புகுதலும் நன்னூல் சூத்திர விதி. இந்த விதியில் ஆண்டுகளும் சிக்கிவிடுகின்றன. நம்பிக்கை ஆண்டாகச் செயற்பட்டு வந்த ஆண்டான 2004, சுனாமி அனர்த்தத்தாலும், நிஜல் யுத்தங்களாலும் கடைசியில் தனக்குக் கரிபூசிக் கொண்டது. இப்பினும் அ 9 பாதை மூடப்படாது இருந்தமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை திருந்தியது. நோர்வேயின் மத்தியஸ்தம் தமிழ் மக்களைப் பொறுத்து நிரந்தரத் தீர்வைத் தராவிடினும் யுத்தம் ஒன்று திணிக்கப்படுவதைத் தவிர்த்து வந்தது.

இருப்பினும் இடைக்கால அதிகாரசபை ஏற்படுத்தப்படுவதில் சென்ற ஆண்டு இணக்கம் காணப்படவில்லை. சென்ற ஆண்டுக்கு ஏற்பட்ட தோல்விகளில் இதுவும் ஒன்று. சுனாமியினால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் அதிகம் பாதிக்கப்பட்டன. ஆனால் நிவாரண நடவடிக்கைகளில் அதிகம் வஞ்சிக்கப்பட்டது வடக்கு கிழக்கே!

தற்காலிக அமைதி வேறு நிரந்தர சமாதானம் வேறு. நிரந்தர சமாதானம் என்பது உரிமையுடன் கூடியது. அந்தச் சமாதானம் இலங்கை நாட்டில் மலர வேண்டும். அந்தச் சமாதானத்திற்குப் பார்த்திப ஆண்டு உதவ வேண்டும்.

நல்லதை நினைப்போம்!
நடக்குமென எதிர்பார்ப்போம்.

-ஆணிமுத்தன்-

## சித்திரைப் பொங்கல் நினைவுகள்.....

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*தமிழனின் உழைப்பு அறுவடையாகும் தினம் சித்திரை மாதம் - அதனால் சித்திரைப் புதுவருடத்துக்கு இந்தத்தகுதி இருப்பது புலனாகிறது. மறந்து விட்டேன் ஒரு விசயத்தைச் சொல்ல........ போர்த்தேங்காய் அடியில் அன்று ஈடுபட்ட பலர் இன்று இயற்கை எய்திவிட்டார்கள். ஆனால் போர்த்தேங்காய்ச் சிவலிங்கன், சிவானந்தராசன், ராஜரட்ணம்..... போன்ற பல வாலிபர்களின் முகங்கள் தேங்காயைக் கண்டால் இப்போதும் என் முன் நடமாடும் வாசிகசாலைகள் போல் தென்படுகின்றன. போர்த்தேங்காய்க் கலாசாரத்தை மீண்டும் மீட்டெடுப்பது கஷ்டமாகத் தான் இருக்கும். முப்பது ரூபாவுக்குத் தேங்காய் வாங்கி யாரும் அடிச்சு எறியச் சம்மதிப்பார்களோ சந்தேகம்தான்......*

*சுமார் 40 வருடங்களுக்கு முன்பு சவாரித்தம்பர் என்றொரு கார்ட்டூன் பகுதி கொழும்பில் உள்ள பிரபல பத்திரிகையில் வெளிவந்தது. அந்தக் கார்ட்டூன்கள் பிரபல கார்ட்டூனிஸ்ட் சிரித்திரன் சி.சிவஞானசுந்தரம் அவர்களால் கீறப்பட்டு வாசகர்களால் விரும்பி வாசிக்கப்பட்ட பகுதியாகும். அதில் விவசாயிகளும், அரசாங்க உத்தியோகத்தர்களும் போட்டிக்காகப் போர்த்தேங்காய் அடித்து, கடைசியில் அரச உத்தியோகத்தர்கள் தோற்றுப் போனது - அன்று ரசிகர்களால் மிகவும் பாராட்டப்பட்டது. இதுபோல் மாட்டுவண்டிச் சவாரி, கோழிச்சண்டை என்பனவும் பிரபல்யமாக இருந்தாலும் போர்த்தேங்காய் அடி போல் எனது மனதில் மனமகிழ்ச்சியைத் தந்த விசயம் வேறில்லை.*

*கலாசார ரீதியாக எமது தேசிய விளையாட்டுகள் புதுப்பிக்கப்பட வேண்டுமானால் போர்த்தேங்காய் அடியும் புதுப்பிக்கப்பட வேண்டும்.*


கம்பீரத் தோற்றத்திற்கு...




அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் உள்ளம் கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

TVS, UMAZAKI, DAIDO
மற்றும் நவீன மோட்டார் சைக்கிளின்
தரத்தினை அறிந்திட
எமது பரந்தன் சந்திக்கு அண்மையில்
உள்ள காட்சியறைக்கு
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

சிவகுரு
மோட்டர்ஸ்

யாழ் வீதி, பரந்தன், கிளிநொச்சி.



SISIL



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
சிசில் குளிர்சாதனப் பெட்டி ஒன்றினை
கொள்வனவு செய்யும்
ஒவ்வொருவருக்கும்
விசேட சலுகையாக
ஒரு இரட்டை வாயு அடுப்பு
அல்லது
ஒரு மின்சார கேத்தல்
இலவசம்.

கையிருப்பு உள்ள வரை மட்டுமே...

USHA AGENCY

No: 62/32, Stanly Road, Jaffna. Tel: 021 222 6982

# இன்று புத்தாண்டு நன்நாள்

இந்தப் புத்தாண்டு நன்னாளில் சைவ மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்வில் துன்பங்கள் யாவும் விலகி இன்பம் வந்து சேரவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். பழையன கழிந்து இனிமேலாவது அமைதி கிட்ட வேண்டும் என்ற பேரவா எல்லோர் மனத்திலும் அடிநாதமாக ஒலிக்கவேண்டும்.

இற்றைய நாள் வரை பட்டதுயரங்கள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனிபோல இல்லா தொழிய வேண்டும். வாழ்வில் வசந்தம் வீசி, இன்பம் பெருகி, மனம் மகிழ்ச்சியினால் குதூகலமடைய வேண்டும். கவலை என்பது துளியும் இல்லாமற் போக வேண்டும். இதுவே ஈழமக்களின் ஒரு மனதான கோரிக்கையாக இருத்தல் வேண்டும்.

**இன்பம் பொங்கும் இனிய புத்தாண்டு**

இன்று பிறந்திருக்கும் புத்தாண்டு பார்த்தீப ஆண்டாகும். மங்களகரமாக மனோரம்மிய மான சூழலில் பிறந்துள்ள இன்றைய புதுவருடம் இன்பம் பொங்க, மகிழ்ச்சி ததும்ப, சந்தோஷம் தாண்டவம் ஆட வாழ்விலும் நம்பிக்கைக் கீற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது. மக்கள் மனம் எப்போதும் மகிழ்ச்சியையே நாடவல்லது. ஆகவே, நாட்டினில் அமைதியும் சுபீட்சமும் நிறைந்து விளங்கினால்தான் சந்தோஷத்தை எதிர்பார்க்க முடியும்.

**சிந்தித்துச் செயற்படுவோம்**

ஈழத்தில் அமைதியான ஆனந்தம் நிலைக்க வேண்டுமாயின் யுத்தப் பீதி நீங்க வேண்டும்; பயப்பிராந்தி அகல வேண்டும்; சமாதானம் நிலைக்க வேண்டும். இது நடைபெற நாம் என்ன செய்யவேண்டும் என்பதே இப்போது எம்முன் கேள்விக் குறியாக எழுந்து நிற்கின்றது. நாம் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் முதலில் நன்கு சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். சிந்தனையின் மூலம் வரும் பெறுபேறுகளை அறிந்து கொள்ளலாம். ஆகவே எவ்வாறு எப்படி நடந்து கொண்டால் நன்மைகளை அடையமுடியும் என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். 'எண்ணித் துணிக கருமம்' என்பதில் எப்போதும் சிந்தித்துப் பின்னர் தெரிந்தே கருமமாற்றுதல் வேண்டும். சிந்தித்துத் தெளிந்த பின்னர் செய்கின்ற எந்தக் காரியமும் தோல்வி அடையாது. இறைவனுடைய அருட்கருணைத் திறத்தை



முன்னே வைத்து காரியங்களைச் செய்தல் வேண்டும். நல்லதையே சிந்தித்து, நல்லதையே செய்து, நல்லதையே சொல்லியும் வந்தால் நமக்கும் எப்போதும் நல்லதே நடக்கும்.

**தத்துவ முத்துக்கள்**

மகாத்மா காந்திஜியின் மேசை மேலே மூன்று குரங்குப் பொம்மைகள் இருக்குமாம். அதில் ஒரு குரங்கு கண்களை இறுக மூடியவாறு இருக்குமாம். தீயவற்றைக் கண்களால் பார்க்காதே என்பதை நமக்கு அது உணர்த்தி நிற்கின்றது. இன்னொரு குரங்கு காதுகளை மூடியபடி இருக்குமாம். தீய விடயங்களைக் காதுகளால் கேட்காதே என்பதே அதன் அர்த்தம். மற்றொரு குரங்கு வாயைக் கைகளால் மூடியபடி இருக்குமாம். தீமை பயக்கும் விடயங்களை வாயினால் பேசாதே என்பது தான் இதன் அர்த்தம். இவற்றை வேறு வகையில் வைக்காமல் குரங்குப் பொம்மைகளில் வைத்ததன் தாற்பரியம் என்னவென்று தெரியமா? எமது மனம் குரங்குமனம். அலை பாயும் தன்மை வாய்ந்தது. அதனால் தான் இந்தத் தத்துவ முத்துக்களை அள்ளித்தரும் பொம்மைகளைக் குரங்குப் பொம்மைகளாக உருவகித்தனர் நம் முன்னோர்.

**மனிதப்பிறவி ஒரு புனிதப்பிறவி**

ஆகவே, இன்று முதல் நாம் ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது எப்போதும் உண்மையே பேசி, நன்மையே செய்து நேர்மையாக வாழ்தல் என்பதே அது. 'உண்மையே பேசி உத்தமனாக வாழ் என்பதற்கிணங்க நாம் நம்மை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்க்கை முறையையும் நல்ல வழியில் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். மனிதப்பிறவி ஒரு புனிதப் பிறவியாகும். இந்த அரிய பிறவி எடுத்த நாம் அதன் அருமையை உணர்ந்து நடப்பது இன்றியமையாததாகும். ஐம்புலன்களையும் அடக்கி மனத்தை ஒருவழிப்படுத்துவது மிகமிகக் கஷ்டமான ஒரு காரியம்.

குரங்கு மனத்தை அடக்கியாள்வதற்கு ஒரே வழி இறை தியானமும் வழிபாடுமேயாகும். மனத்தை அடக்கிப் பழகிக் கொண்டோமேயானால் நல்ல பல பயன்களை அடையமுடியும். கடவுள் நம்பிக்கை நிச்சயம் இருக்க வேண்டும். ஆன்மீக உணர்வு இருந்தால்தான் தன்னம்பிக்கை உருவாகும். அந்தத் தன்னம்பிக்கையை உண்டுபண்ணுவது இறைவழிபாடாகும்.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

அது மாத்திரமன்றி மானிட வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும்; இலட்சியம் இருக்க வேண்டும்; நோக்கம் இருக்க வேண்டும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)



## சித்திரைப் பொங்கலே சிந்தித்து வா?

சித்திரை பிறந்தது; நித்திரை
பறந்தது.
இத்தரை மீதினில் இனிமை
பிறந்தது
இத்தினம் போல எத்தினம்
வந்திடும்?
முத்தமிழ் போல முழு
உலகமும் மகிழ்ந்திடும்.

எட்டு மாதத்தைப் பின்னே
விட்டு
மூன்று மாதத்தை முன்னே
வைத்து
தை, மாசி, பங்குனி
எப்படிப் போனது?
ஹைஹை, ஹைஹை என வந்ததே
சித்திரை.

சிங்களர், தமிழர் புது
வருடம் ஒன்றென
எங்களை இன்றும்
நினைவினை ஓட்டவோ
சித்திரை மாதம், பார்த்தீப
வருடம்
வந்து சேர்ந்ததோ
சித்திரைப் பொங்கல்?

புரிந்த உணர்வு புன்னகை
தராமல்
எரிந்து விழுந்து எங்கள்
மண்ணை
நின்று எரிப்பதை எடுத்துக்
காட்டவோ
இன்று வந்தாய் சித்திரைப்
பொங்கல்?

காலையும் மாலையும்
கடிதென வந்தது.
காலைகள் மாலையாய்ச்
சுற்றியே வந்தது.
காலவோட்டத்தில் சுற்றிய
சுதந்திரம் காலடி வருவது
கோலத்தில் கிறவா?
வந்ததிப் பொங்கல்?

முன்னாள் கடலில்
அகதியாய் வந்து... ஐயோ
இன்னல்படுகிறோம்;
கண்ணனை
அழைக்கிறோம்....
கண்ணன் வராமல்
கற்பினை இழக்கிறோம்;
பார்க்கவோ வந்தாய்
பார்த்திபப் பொங்கல்?

சுனாமி வந்தது; சுருட்டிப்
போனது.
சுந்தரப் பெண்களை
இழுத்துச் சென்றது!
எத்திசை எங்கும்
பிணங்களின் குவியல்
அவியல் பகமாய் அலர்ந்து
கிடந்தது.

இத்தரை மீது இக்காட்சிகள்
பார்க்கவோ
முத்திரை போட்டுச்
சித்திரை வந்தாய்?
அகதி முகாமில் அகதிச்
சண்டை.
பகுதி நேரம் எமக்குள்
சண்டை.


கிழக்கிலே நீடிக்குது
நிழலாய்ச் சண்டை.
வடக்கிலே மோதுமே
வாகனச் சண்டை
பார்த்த இடமெங்கும்
பகலெங்கும் ஹர்த்தால்.
பார்க்கவோ வந்தாய்
சித்திரைப் பொங்கல்?.

ஜேர்மன் நாட்டில் தமிழன்
அகதி
பிரான்சிய நாட்டில்
இன்னொரு பகுதி
ஆயுட்காலம் அகதியாய்
அவதி
கனடா என்றொரு
தொலைதேச நாட்டில்

மொத்தமாய்த் தமிழன்.
அகதியாய் அவதி
செத்தானோ இருக்கானோ
தெரியாது இன்றும்
பின்லாந்து, நோர்வே,
கங்காரு நாடு
எல்லா இடமும் இவனோர்
-அகதி.

அகதி நிலைவரம் எடுத்துப்
பார்க்க வா
இன்று வந்தாய் சித்திரைப்
பொங்கல்?
ஆஹா என்றொரு பார்புகம்
புரட்சி
வெடிக்கட்டும் என்று
ஊதிடு இன்று சித்திரைப்
பொங்கல்

-திக்கவயல் தர்மு-

# LG

## யாழ் நகரில்....

- நவீன ரக ரிவி டெக் வகைகள்
- எயார் கொண்டிஷனர்கள்
- வீடியோ ஓடியோ சீடி பிளேயர்கள்
- ஓவன் வகைகள்
- மின் அழுத்திகள்
- அனைத்து வகை மின் விசிறிகள்
- கிறைண்டர்கள்
- மின் கேத்தல்கள்
- வர்ண விளக்குகள்

மற்றும் சகல மின்சாதனங்களையும்
பி.வி.சி. பைப் வகைகளையும்,
நீர்த் தாங்கிகளையும்
வீட்டுத் தேவைகளுக்கான
அனைத்து இலத்திரனியல்
உபகரணங்களையும் ஒரே
இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய குளிரூட்டப்பட்ட
சாம்ராஜ்யம்

# சுந்தர்சன்

யாழ் வீதி, மானிப்பாய்.
Tel: 021 4 591 569,
Tel. Fax: 021 222 2751
E.mail: sundharson@yahoo.com



# அகலக்கால் வைப்பாயோ அவலக்குரல் அகற்றுவாயோ புத்தாண்டே...

சித்திரைப் புதுவருடம் இம்முறை பார்த்திப வருடமாகப் பிறக்கின்றது. 1983ஆம் ஆண்டும், அதன் பின்பும் வந்துதித்த புத்தாண்டுகள் தமிழ் மக்களுக்கு ஒரு விடிந்தும், விடியாத மாலைப்பொழுதாகவே இருந்திருக்கிறது. புத்தாண்டுடன் சமாதானம் மலருமோ என்ற ஏக்கப் பெரு மூச்சும் கலந்தே இருந்தது. உறவுகள் ஆளுக்கொரு தேசமாகப் பிரிந்திருக்கையில் சித்திரைப் புத்தாண்டு தமிழ் மக்களிடம் வேர் விட்டு இருந்தது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும் நாடு சிதறுண்டு கிடந்தது.

1983 ஆம் ஆண்டின் பின்பு படிப்படியாக ஆயுதப் போராட்டம் விரிவடைந்து பிரச்சினையைத் தீர்க்கும் காலகட்டமாக அரசும் - புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினைப் புனைந்து கொண்டனர். மக்களின் இயல்பு வாழ்க்கை படிப்படியாக முன்னேற்றம் அடையத் தொடங்கியது.

இருப்பினும் இந்த நிலையில் பல தொய்வுகள் குழப்பங்கள் ஏற்படலாயின. விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு நிழல்யுத்தம் ஒன்றினை அரசு தொடங்கி விட்டது போல் வடக்கும் கிழக்கும் அமைதியற்று இன்று காணப்படுகின்றது. அடிக்கடி ஏற்படுத்தப்படும் படுகொலைகள், திட்டமிடப்பட்டு யாரால் செய்யப்படுகின்றன எனச் சொல்லப்படாத படுகொலைகள் என்பன உண்மையான சமாதானத்தில் அரசுக்கு அக்கறை உண்டா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

இது இவ்விதம் இருக்க புத்தாண்டின் பின்பு போர் தொடங்கி விடுமோ எனப் பலரும், ஏங்குவது போலத் தெரியவருகிறது. இதற்கு ஏற்ற மாதிரிச் சோதிடக் குறிப்புகளும் காணப்படுவதால் எல்லோர் மனதிலும் ஒருவித பயம் இருக்கிறது. ஏற்கனவே நடந்து முடிந்த சுனாமி சம்பந்தமான சில சோதிட அவதானிப்புகளும் சரியாக முடிந்திருப்பதால் மக்கள் மத்தியில் ஒரு வித மனப்பயம் இருப்பது கண்கூடு.

23.06.2005ல் சனி மாறுவது இலங்கைக்குக் கூடாது என்றும் அன்நிய தலையீடுகள் அதிகரிக்கும் என்றும் 18.07.2005 முதல் உள்நாட்டுக் கலவரம் வரும் என்றும் எதிர்வு கூறப்படுவதும் மக்களைச் சற்றுக் களைப்பில் ஆழ்த்திவிடக்கூடும்!

கடந்த 21 ஆண்டுக்காலப் பகுதியில் நடைபெற்ற இனச்சங்காரத்தால் இலங்கை நாடு களைத்து விட்டது. அரசியல் குளிர் காய்பவர்கள் மாத்திரம் இதனை உணர்வதாகத் தெரியவில்லை. போர் நடந்தால் உலகஉதவி கிடைக்கும், சுனாமி வந்தால் உலக உதவி கிடைக்கும் என்ற எண்ணப்பாங்கு பேரினவாதத்தில் மலிவுச் சரக்காக உள்ளது. எனவே இன்று பூத்துள்ள சித்திரைப் புதுவருஷம் நாட்டில் நல்லாட்சி நடக்க வழி காட்டவும், கலவரங்கள் வராது தடுக்கவும், தமிழ் மக்கள் உரிமையுடன் கூடிய சமாதானம் ஒன்றினைப் பெற்றிடவும் ஆண்டவன் துணைநிற்பாராக! சோதிட பலனுக்கு அப்பால் நாம் வேண்டுவதும் அதுவே.

கே.எஸ்.ரி

# இன்று புத்தாண்டு நன்நாள்....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது தான் முன்னேற்றம் காணமுடியும்.

### பிரதிக்ஞை எடுப்போம்


இன்று பிறந்துள்ள பார்த்தீபப் புத்தாண்டு நன்னாளில் ஓர் இலட்சியத்தின் அடிப்படையிலேயே நாம் இனி வாழ்வோம் என்று பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டும். வாழ்வில் வசந்தம் வீசி அமைதி உருவாகி மகிழ்ச்சியும் சந்தோஷமும் ஆனந்தமும் பொங்கி மக்கள் குதூகலத்துடன் வாழ இந்தக் குறிக்கோள் மிகவும் அவசியம். ''குறிக்கோள் இல்லாது கெட்டேனே'' என்கிறார் நாவுக்கரசர். எனவே, மனித வாழ்வில் இலட்சியம் இருத்தல் வேண்டும். இலட்சிய வாழ்விலேயே இன்பம் கிடைக்கும்.

அமைதியும் சுபீட்சமும் நிறைந்த நல்வாழ்வுக்கு நாம் அடிகோல வேண்டுமாயின் கடவுள் நம்பிக்கையுடன் இறை தியானமும் தேவை. எனவே, இன்றைய புத்தாண்டு நன்னாளில் உலகத்துக்குக் கருத்தாவாக விளங்குகின்ற இறைவனை வணங்கி, புத்தாடை புனைந்து, சுற்றஞ் சூழ இருந்து இனிப்புப் பலகாரங்கள் உண்டு மகிழ்ச்சியுடன் நாம் இருக்க எல்லாம் வல்ல அந்த இறைவனையே பிரார்த்தனை செய்து வழிபாடியற்றி அவனருளாலே அவன் தாழ் வணங்கி ஆன்ம ஈடேற்றம் பெறமுனைவோமாக.











இலங்கை முழுவதும் விரிவடையும்

# அதிநவீன தொழில்நுட்ப தொலைபேசி வலையமைப்பு

சண்டெல் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய சேவைகளையும் அதிவேக தரவு அனுப்பீட்டு வசதிகளையும் நாடெங்கும் விஸ்தரிக்க ஆரம்பித்துள்ளது.





முதல்படியாக எமது நவீன சேவைகள் 15 புதிய பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளன. விரைவில் நாடு முழுவதற்கும் இதனை விஸ்தரித்து இலங்கை மக்கள் அனைவருக்கும் முன்னொருபோதும் இல்லாத தரமுயர்ந்த தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்கவிருக்கிறோம்.

- அதிசிறந்த குரல் தெளிவு
- அதிவேக இணைத்தள தொடர்பு (70kbps வரை)
- CLI வசதி

உடனடி இணைப்புக்கு அழையுங்கள் 4 767676

காத்திருக்கத் தேவையில்லை.
7 தினங்களுக்குள் இணைப்பு

## விசேட சலுகை

இணைப்புக் கட்டணம் ரூ. 15,900/-
*2005 மே 31* வரை ரூ. 1,000/- பெறுமதியான அழைப்புக்கள் இலவசம் அல்லது CLI தொலைபேசிக் கருவி இலவசம்.
(இச் சலுகை 2005 ஏப்ரல் 30 வரை மட்டுமே)

- வைப்புப்பணம் அறவிடாத IDD வசதி கொண்ட இணைப்பு
- இலவச இணையத்தள வசதி

இச் சலுகை பின்வரும் இடங்களில் வழங்கப்படும்

வெலிவேரிய, கலகெடிஹேன, ஹொரணை, அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, கதிர்காமம், திஸ்ஸமகாராம, எம்பிலிப்பிட்டி, திருகோணமலை, கொச்சிக்கடை, அவிசாவளை, மாத்தளை, வரக்காபொல, அம்பாறை, எல்பிட்டிய

Suntel

இலங்கையில் அதிவேகமாக விரிவடையும் நிலையான தொலைபேசி வலையமைப்பு

Q&E Advertising

# பனிக்கட்டி நாடகம்!

கிருஷ்ணதேவராயருக்கு ஒருநாள் மிகவும் வருத்தமாக இருந்தது.

'நாம் மக்களுக்கு எவ்வளவு செய்தாலும் அவர்களுக்கு அந்தப் பணம் ஏன் போய்ச் சேருவதில்லை?' என்பது தான் அந்த வருத்தம். இதன் காரணம் என்ன



என்பது புரியாமல் தவித்தார் மன்னர். தன்னுடைய சந்தேகத்தை தெனாலிராமனிடம் கேட்டார்.

"ராமா! இதற்கு என்ன காரணம்? உனக்கு தெரியுமா?"

"அரசே! இதனை நான் ஒரு நாடகம் போல் விளக்க விரும்புகிறேன். எனக்கு உடனே பனிக்கட்டி ஒன்றை கொண்டு வந்து தரச் சொல்லுங்கள். அப்பொழுது தான் உங்களுக்கு உண்மை புரியும்," என்றான்.

அரசர் உடனே பனிக்கட்டி ஒன்றை கொண்டு வர ஏற்பாடு செய்தார்.

பனிக்கட்டி வந்தது. அதனை வாங்கிய தெனாலிராமன் மன்னரிடம், "அரசே! நீங்கள் இந்த பனிக்கட்டியை நிதி அமைச்சரிடம் கொடுங்கள். பின்பு அவர் தனது உதவியாளரிடம் கொடுக்கட்டும். அதன் பிறகு பனிக்கட்டி அலுவலர்களிடம் போய்ச் சேரட்டும். அப்பொழுது உங்களுக்கு விஷயம் புரியும்," என்றான்.

பனிக்கட்டி கிட்டத்தட்ட 15 அலுவலர்களை தாண்டி கடைசியில் கிராம நிர்வாக அதிகாரியிடம் சென்று சேர்ந்தது. அப்பொழுது அவர் கையில் பனிக்கட்டி இல்லை. சிறிது நீர் தான் இருந்தது. பனிக்கட்டி உருகி அப்படி ஆகிவிட்டது. இப்பொழுது தெனாலிராமன் சொன்னான்.

"புரிந்ததா! மன்னா இதுதான் காரணம். பணம் இவ்வளவு பேரையும் தாண்டி கடைசி அலுவலரிடம் செல்லும் பொழுது கரைந்து விடுகிறது. இதுதான் ஏழை மக்கள் படும் கஷ்டங்களுக்கு காரணம்," என்றான்.

மன்னன் புரிந்து கொண்டு நிர்வாகத்தை சீர்படுத்த முனைந்தான்.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. முதல் முதல் புத்தகம் அச்சிடப்பட்ட நாடுகள்?
**சீனா, கொரியா.**

2.எத்தனையாம் ஆண்டு புத்தகம் அச்சிடப்பட்டது?
**கி.பி.700ஆம் ஆண்டு.**

3.பெரியளவிலான அச்சுக்கள் முதல்முதலில் எங்கு ஆரம்பிக்கப்பட்டன?
**சீனாவில், 1050 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.**

4.இலங்கையில் இலவசப் பாடநூல் விநியோகிக்கப்பட்ட ஆண்டு?
**1979ஆம் ஆண்டு.**

5.இலவச கல்வி ஆரம்பித்த ஆண்டு?
**1945ஆம் ஆண்டு.**

*ராஜதீபன்*
*தரம் 11 A*
*அக்கராயம் ம.வி.*
*அக்கராயன்.*

## சிறார்களின் கைவண்ணம்



பா.நிறஞ்சனா, தரம் 09.
யா/தாளையடி றோ/க/த/க
பாடசாலை.



த.டர்சிகன்
மாயவனூர்
வட்டக்கச்சி.

## கதைச் செய்தி

கதை: இந்திரசித்தன் சித்திரம்: சாமி




## எலும்புகள் பற்றிய செய்திகள்

எமது உடம்பில் உள்ள எலும்புகளும் ஒரு வகையான திசுக்கள்தான். மற்ற திசுக்களைவிட இதுவலிமை உடையதாகும். இது மேட்சிக்ஸ் ஜெலட்டின் போன்ற பொருட்களால் ஆனது.

எலும்புகள் தன்னகத்தே கல்சியம், கார்பனேட் கல்சியம், பொஸ்பேட் போன்ற இரசாயனப் பொருட்களைக் கொண்டிருப்பதால் இவை வலிமை உடையதாக இருக்கின்றன.

எலும்பின் உட்பகுதி ஒரு குழாய் போன்று இருக்கும். அதனுள் நிரம்பி இருப்பது எலும்பு மச்சை. இவைகளில் இருந்து தான் இரத்தச் சிகப்பணுக்கள் உருவாகின.

*வே.இராயேஸ்வரி*
*தரம் 7,*
*வவுனிக் குளம்*
*படிவம் – 4,*
*அ.த.க.பாடசாலை,*
*திருநகர்,*
*மல்லாவி.*

சுடர் ஒளியில் வாராந்தம்



கல்விச் சுடர்
5ஆம் தர
புலமை பரிசில் பரீட்சை
மாதிரி வினாத்தாள்கள்
தேர்ச்சி பெற்ற
பரீட்சகர்களால்
தயாரிக்கப்பட்டவை.

வாராந்தம்
புதன்கிழமைகளில்
தவறாமல் பிரசுரமாகும்.
உங்கள் பிரதிக்கு
முந்துங்கள்!

# இந்தி நடிகை இஷாவுடன் ஸஹீர்கானுக்கு காதல்?

சினிமா நடிகைகளின் காதல் வலையில் 'போல்ட்' ஆவதில் கிரிக்கெட் வீரர்களும் தப்பமுடிவதில்லை. அந்தப் பட்டியலில் தற்போது இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஸஹீர் கானும் சேர்ந்துள்ளார். அவரை வீழ்த்தியது யார் தெரியுமா? இஷா ஷெர்வானி என்ற இந்தி நடிகை.


ஸஹீர்
இஷா

சமீபத்தில் அவுஸ்திரேலிய அணி இந்தியா சென்றபோது அவர்களுக்கு வழியனுப்பும் விழா நடத்தப்பட்டது. அந்த விழாவில் ஸஹீர் கானும், இஷா ஷெர்வானியும் கலந்துகொண்டனர்.

இதுதான் அவர்கள் இருவரும் முதல் முதலாக சந்தித்துக் கொண்டது. முதல் சந்திப்பிலேயே காதல் கணைகளை வீசியுள்ளனர். அதனால் ஏற்பட்ட பழக்கத்தால் விழா, விருந்து நிகழ்ச்சி என பல இடங்களுக்குச் சென்று யாருக்கும் தெரியாமல் தங்கள் காதலை வளர்த்துள்ளனர்.

மும்பையில் இஷாவுக்கு நிரந்தரமாக ஒரு வீடு தேவைப்பட்டபோது, அவருக்காக ஸஹீர்கான் வீட்டுத் தரகரைப்போல் செயற்பட்டு வீடு பார்த்துக்கொடுத்தார் என்றெல்லாம் கிசுகிசு எழுந்துள்ளது.

இவையெல்லாம் உண்மைதானா? என்று இஷாவிடம் கேட்டபோது அதை அவர் மறுக்கிறார். ''ஸஹீர் அழகானவர்தான். ஆனால், அவர் மீது எனக்கு காதல் இல்லை. அதே நேரத்தில் நாங்கள் நல்ல நண்பர்கள் என்றும் கூற விரும்பவில்லை. அப்படிக் கூறினால் மீண்டும் கிசுகிசுக்கள் பரவிவிடும்.

''நான் மும்பையில் வீடு தேடிக் கொண்டிருந்தபோது எனக்காக ஸஹீர் வீடு பார்த்துக் கொடுத்தார் என்பதில் எள்ளளவும் உண்மையில்லை. எனக்காக அவர் வீட்டுத் தரகர் வேலையெல்லாம் பார்க்கவில்லை''. —என்று பொரிந்து தள்ளுகிறார்.

ஷெனாயா

ஆனால், இஷா இப்படி கூறிவிட்ட போதிலும், அவர்கள் இருவருக்கும் இடையே, காதல் இருக்கிறது என்று அவர்களுடைய நெருங்கிய நண்பர்கள் உறுதிபடக் கூறுகிறார்கள்.

# வில்லியம்ஸ் சகோதரிகள் எழுதும் — இளம் பெண்களுக்கான புத்தகம் —

உலகில் உள்ள விளையாட்டு பெண் ரசிகர்கள் பலருக்கும் முன்னுதாரணமாக, டெனிஸ் உலகின் உச்சத்தில் இருக்கும் வீனஸ் வில்லியஸ், செரீனா வில்லியம்ஸ் சகோதரிகள் திகழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பொறுப்பை உணர்ந்து அவர்கள் இருவரும் இணைந்து ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். முழுக்க முழுக்க இளம் பெண்களுக்காகவே இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார்களாம். இதில் வாழ்க்கையில் பெண்கள் சாதித்து வெற்றிகளைக் குவிப்பது போன்றவை குறித்து தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்களாம்.

குறிப்பாக இரண்டு விடயங்களை இவர்கள் அதிகளவாக அலசியிருக்கிறார்கள். ஒன்று பணம் மற்றொன்று காதல். இளம் வயதில் பணம் சம்பாதிப்பதில் எவ்வளவு குறியாக இருக்கவேண்டும், காதல் விடயத்தில் எப்படி கவனமாக இருக்கவேண்டும் என்பது பற்றி நிறைய அறிவுரைகளை இப்புத்தகத்தில் வில்லியம்ஸ் சகோதரிகள் கூறியிருக்கிறார்களாம்.


வில்லியம்ஸ் சகோதரிகள்

# அரசியல் களத்தில் குதிக்கிறார் பிரபல 'செஸ்' வீரர் காஸ்பரோவ்

சினிமாவில் பிரபலமாக இருப்பவர்கள் அதிலிருந்து விலகி அரசியலுக்கு நுழைவதுபோல விளையாட்டு உலகில் பிரபலமாக இருப்பவர்கள் அதிலிருந்து ஓய்வு பெற்றபிறகு அரசியலில் நுழைவதும் இப்போது பிரபலமாகி வருகிறது.



'செஸ்' உலகில் சிம்ம சொப்பனமாக பல ஆண்டுகள் கலக்கிய ரஷ்ய வீரர் கெரி காஸ்பரோவ் சமீபத்தில் திடீரென்று தமது ஓய்வை அறிவித்தார். அப்போது ரசிகர்கள் காரணம் புரியாமல் தவித்தனர். அந்தக் காரணம் இப்போது விளங்கியிருக்கிறது. ரஷ்ய அரசியலில் நுழைவதற்காகவே 'செஸ்' உலகிலிருந்து காஸ்பரோவ் வெளியேறியிருக்கிறார்.

''ஒரு செஸ் வீரரனாக என்னால் முடிந்த அளவிற்கு சாதனைகளைப் படைத்துவிட்டேன். நினைத்ததற்கும் அதிகமாகவே சாதித்துவிட்டேன். இப்போது என் திறமை, அறிவு எல்லாவற்றையும் ரஷ்ய அரசியலில் பயன்படுத்த விரும்புகிறேன். விளாடிமிர் புடினின் (ரஷ்ய அதிபர்) தவறான ஆட்சியை எதிர்ப்பதற்கு என் திறமை முழுவதையும் பயன்படுத்துவேன். நாட்டை தவறான பாதையில் அவர் வழிநடத்திக் கொண்டிருக்கிறார் என்பது என் கருத்து'' – என்கிறார் காஸ்பரோவ்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 156

சொற்சிலம்பம் 156போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஏப்ரல் 23ஆம் திகதி ஆகும். விடைகள் மே 01ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 8ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.154க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 156

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | ■ |
| 11 | 12 | | | ■ | | ■ | 13 |
| 14 | | | ■ | 15 | | | |
| ■ | | ■ | 16 | | | ■ | |
| 17 | | | | | ■ | 18 | |
| 19 | | ■ | 20 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.154

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | 2 வா | 3 தி | ■ | 4 அ | ஞ் | 5 சா | 6 மை |
| 7 நா | க | ரி | 8 க | ம் | ■ | 9 ச | ய |
| 10 ச | ரை | ■ | 11 ச | மா | 12 தா | ன | ம் |
| ம் | ■ | 13 ச | க | ■ | 14 ர | ம் | ■ |
| ■ | 15 உ | ற் | சா | 16 க | ம் | ■ | 17 வி |
| 18 ப | ய | று | ■ | வ | ■ | 19 த | ரு |
| ■ | ர் | ■ | 20 பா | லை | 21 வ | ன | ம் |
| 22 ச | வு | க் | கு | ■ | 23 தி | ம் | பு |

## சொற்சிலம்பம் போட்டி இல.155

**இடமிருந்து வலம்**

1. மேன்மையான தன்மை / உயர்வு.
6. போற்று / ஏற்று.
7. மீனவர் கடற்கரையோரத்தில் அமைப்பது / விடுதி.
8. அரைவாசி.
9. பரம்பல் அடைதல்.
11. வஞ்சகம் / தந்திரம்.
13. சாமர்தியசாலி.
14. ரகம்.
15. காலஞ்சென்றவன்.
17. சொந்தக்காரன்.
18. சேர்.
19. குத்து விழுவது இப்படி.
20. இல்லறம் துறந்து போவது இதற்கு.

**மேலிருந்து கீழ்**

1. தேன் போன்ற இனிய கவிதைகளைத் தருபவன்.
2. வேகம்.
3. ஓட்டை.
4. அழகு.
5. அறிவு / சந்திரன்.
8. தாய் சுரப்பது.
9. ஓவியம் / தோற்றத்தை வெளிப்படுத்துவது.
10. ஜலதோஷம்.
12. தளம்புதல் / நடுங்குதல் / அல்லாடுதல்.
13. சுயநலத்தன்மை.
15. விசாலமான / பரந்த.
16. இது ஒரு குரங்கு.
17. (கண்ணீர்) வடி / சொரி.
18. பிடுங்கி எடு / தண்டிப்பெறு / உருவி எடு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 153

1. இ.கார்த்திகேசு
   3 1/3, 42ஆவது ஒழுங்கை,
   கொழும்பு – 06.
2. எஸ்.வி.ஜெகநாதன்
   18 2/5, கொளிங்வூட் பிளேஸ்,
   கொழும்பு – 06.
3. எம்.ஐ.எ.லத்தீப்
   372/11, வேப்பங்குளம்,
   கிராமசேவகர் பிரிவு,
   மன்னார் வீதி, வவுனியா.

### பாராட்டுப் பெறுவோர்

1. எம்.தர்மினி
   41 1/2, ஆத்திசூடி வீதி,
   கந்தர்மடம்,
   யாழ்ப்பாணம்.
2. எ.சுரேஸ் குமார்
   மில் ஒழுங்கை,
   கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
3. திருமதி றோ.ம.தயானந்தன்
   15ஆம் மைல் கல்,
   உடுப்பிட்டி.
4. பு.நேரிந்தன்
   இல.697, யோகபுரம் மத்தி,
   மல்லாவி.
5. செல்வி.ஜெ.ஜெ.ஜெனிற்றா
   27, சுவாட்ஸ் லேன்,
   யாழ்ப்பாணம்.
6. வி.செல்வநாயகம்
   ''சாருஜா'' சிவன் கோவில் வீதி,
   புத்தூர்.
7. எஸ்.ஜோர்ஜ்
   155/11, ஜெம்பட்டா வீதி,
   கொழும்பு – 13.
8. சி.இராஜேந்திரா
   33 5/1, 42 ஆவது ஒழுங்கை,
   கொழும்பு – 06.
9. திருமதி எஸ்.பாக்கியநாதன்
   பொதுநூலகம்,
   சங்கானை.
10. அ.அரசகுலசேகரன்
    ராஜா மருந்துக்கடை,
    கே.கே.எஸ்.வீதி,
    சுன்னாகம்

இலக்கியப் பொழில்

# காலத்தால் முந்திய யாழ்ப்பாண இராச்சியம்!

வண.சா.ஞானப்பிரகாசர் O.M.I., முதலியார் செ. இராசநாயகம் ஆகியோரின் நூல்களிலிருந்து யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றக்காலம் கி.பி.எட்டாம் அல்லது பத்தாம் நூற்றாண்டென்பதை நாம் அறியமுடியும். அக்காலத்தில் இங்கிலாந்தில் ஓர் நிலையான அரசு இருக்கவில்லை! அமெரிக்காவும் கண்டுபிடிக்கப்படவில்லை!

கோட்டை இராச்சியம் கி.பி.15ஆம் நூற்றாண்டில் உருவாகியிருப்பதை சூளவம்சத்திலிருந்து அறிய முடிகிறது. அக்காலத்தையொட்டியே கண்டி இராச்சியமும் உருவானது. அதற்கு முன் சிங்கள அரசரின் இராசதானியாக கம்பளை விளங்கியது. ஆதலின் கோட்டை, கண்டி இராச்சியங்களுக்கு முன் யாழ்ப்பாண இராச்சியம் உருவாகியிருந்தமை பெரும் வரலாற்றுண்மையாகும். அதனாற் போலும் சிலர் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றை மறைப்பதில் முனைப்பாகவுள்ளனர்.

**'காலத்தால் முந்திய யாழ்ப்பாண இராச்சியம்' என்ற ஆக்கத்தின் முதலாவது பகுதி கடந்த வாரம் பிரசுரமாகியது. இரண்டாவது இறுதிப் பகுதி இவ்வாரம் இடம்பெறுகிறது.**

அதற்கமையவே இலங்கைத் தீவில் எக்காலத்திலும் வடக்கிலோ கிழக்கிலோ ஒரு சுதந்திரமான தமிழ் இராச்சியம் (TAMIL KINGDOM) இருந்ததில்லை என்று 'யாழ்ப்பாணமும் சிங்கள பாரம்பரியமும்' எனும் தனது நூலில் ஈ.ரி.கன்னங்கரா அடித்துக் கூறியுள்ளார். (பக் – 34)

யாழ்ப்பாண இராச்சியத்தை மறைப்பதற்காகவே அவர் அப்படிக் கூறியுள்ளார். இதற்கு எவ்வாறு பதில் சொல்வது? வெறுமனே ''யாழ்ப்பாண இராச்சியம் இருந்தது'' என்று சொன்னால் அவர் புரிந்து கொள்வாரா? ஆதலின் அவரைப் போலன்றி சில வரலாற்றுச் செய்திகளை இங்கு ஆதாரங்களுடன் முன் வைப்பது மிக்க அவசியமாகிறது.

யாழ்ப்பாண இராச்சிய அரசனான் ஆரியச்சக்கரவர்த்தியிடம் சிங்கள அரசன் தோல்வியுற்றதைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்றினை இங்கு சான்றாக முன்வைப்பது பொருந்தும்.

கேகாலை மாவட்டத்தில் றம்புக்கணைக்கு அண்மையாகவுள்ள கோட்டகம எனும் ஊரில் கிடைக்கப்பெற்ற அக்கல்வெட்டு கொழும்பு அரும்பொருட் காட்சிச் சாலையில் பேணப்பட்டுள்ளது. பழந்தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள அக்கல்வெட்டின் வாசகம் வருமாறு:–

சேது

கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்

பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் – பொங்கொலி நீர்ச்

சிங்கை நகர் ராரியனைச் சேரா வனுரேசர் தங்கள் மடமாதர் தாம்.

இக்கல்வெட்டினை முதன் முதல் வாசிப்புச் செய்த இலங்கையின் முன்னாள் ஆங்கிலேயே தொல்லியல் ஆணையாளரான எச்.சி.பி.பெல், இக்கல்வெட்டு 15ஆம் நூற்றாண்டிற்குரியதெனக் கூறுகிறார். (H.C.P.-BELL, ARCHAEOLOGICAL REPORT OF THE KEGALLE DIS TRICT, (1892) P.85)

இக்கல்வெட்டு தென்னிந்திய சாசனத் தொகுதியிலும் பதியப்பெற்றுள்ளது. (NO.1413, SOUTH INDIAN INSCRIPTIONS, VOL.IV)

இக்கல்வெட்டு 15ஆம் நூற்றாண்டின் எந்தக் காலப்பகுதியைச் சேர்ந்தது என்பதை ஆராய்ந்த பிரபல வரலாற்றாய் வாளரான கொட்றிங்டன் கல்வெட்டின் வாசகம் தொடர்பாக கூறியிருப்பதாவது:–

'THERE CAN BE NO DOUBT THAT THIS REFERS TO THE CONQUEST OF A SINHALESE KING BY THE ARYA CHAKRAVARTHI OF JAFFNA.'

சிங்கள அரசனொருவன் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தியால் வெற்றி கொள்ளப்பட்டதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறதென் பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது; (E.H.W. CODRINGTON, 'THE PROBLEM OF THE KOTAGAMA INSCRIOPTION', JRAS (CEYLON) VOL.XXXII NO.85, 1932 P.214)

யாழ்ப்பாண அரசர் காலத்தில் உலோகத்தாலான நாணயங்கள் இருந்தமை ஏலவே சொல்லப்பட்டதே. அவற்றினை வண.எஸ். ஞானப்பிரகாசர் ஆராய்ந்து வெளியிட்டிருந்தார். (REV.S.GNANAPRA GASAR, 'THE FORGOTTEN COINAGE OF THE JAFFNA KINGS', CEYLON, ANTIQUARY, VOL.V)

மேற் சொன்ன நாணயங்களின் பின்புறத்தில் விடையும் பிறையும் 'சேது' என்ற பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. (விடை = எருது) 'சேது' என்பது ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆணைப் பெயர். இந்த நாணயங்களின் படங்களை 'ANCIENT JAFFNA' நூலில் காணமுடியும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சுதந்திரமான தமிழ் இராச்சியம் இயங்கி வந்ததை கன்னங்கரா தனது நூலில் முற்றாக மறைக்க முயல்கிறார் (பக்.34) ஆனால் சுதந்திரமான என்ற சொல் அவர் வைத்துள்ள பொடி! யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுதந்திரமான தமிழ் இராச்சியமாக விளங்யதனாலேயே அங்கு தனியான நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. யாழ்ப்பாண அரசனான ஆரியச்சக்கரவர்த்தியிடம் அநுராதபுரி அரசன் தோற்றுப்போன விடயத்தையும் அவர் தம் நூலில் மறைத்துள்ளார்.

விரும்பியோ விரும்பாமலோ யாழ்ப்பாண இராச்சியம் இயங்கி வந்திருப்பது ரெவ.எஸ்.ஜி. பெரேரா எழுதிய 'A HISTORY OF CEYLON FOR SCHOOLS' எனும் நூலில் சொல்லப்பட்டுள்ளது. அதன் பகுதியை இக்கட்டுரையுடன் காணலாம்.



இந்நூல் கி.பி.1505 முதல் கி.பி.1796 வரையிலான இலங்கைச் சரித்திரத்தைச் சொல்லும் நூலாகும். இரு பாகங்களாக மொத்தம் 568 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் 10 ஆம் பக்கத்தில் பரராசசேகரன் 1478 – 1591, செகராசசேகரன் (சங்கிலி) 1519 – 1561 என்றவாறு யாழ்ப்பாண அரசர்களின் பெயர்களும் ஆட்சிக் காலமும் சொல்லப்பட்டுள்ளதை எவ்வித ஐயத்திற்கிடமின்றி அறிய முடிகிறதல்லவா? இந்நூலில் சிங்கள அரசர் யாழ்ப்பாண அரசருக்கு திறை (கப்பம்) செலுத்தி வந்திருப்பதையும் காண முடியும்.

"... IT GREW TO BE A DISTINCT TAMIL KINGDOM WHICH SOON BECOME SO POWERFUL AS TO DEMAND TRIBUTE FROM THE OTHER KINGS" (P.2)

''..... ஒரு தனியான தமிழ் இராச்சியமாக வளர்ச்சியுற்ற யாழ்ப்பாண இராச்சியம் விரைந்து பிற(சிங்கள) அரசர்களிடம் திறை கோருமளவிற்கு பெரும் பலம் கொண்டு திகழ்ந்தது.'' (பக்.2)

இவ்வாறு யாழ்ப்பாண இராச்சிய அரசர்களுக்கு சிங்கள அரசர் சிலர் திறை செலுத்தி வந்தமை 'செகராசசேகரம்' எனும் பழைய நூலிலும் சொல்லப்பட்டுள்ளது. அச்செய்யுள் வருமாறு:

''பாரிலுள்ள சூத்திரனாம் பாம்பு புற்றிற்

பார்த்திருக்கு மிரையெடுக்கிற் பலவுந் தின்னு

மேருடனே தானாடிற் பத்மராக

மிலங்குமணி முடிபுனையு மிலங்கை வேந்தர்

சீரியபொன் றிறையளக்கச் செங்கோ லோச்சுஞ்

செகராச சேகரமன் சிங்கை மேவு

மாரியர்கோன் வெண்குடையினிழலே செய்யு

மவனிதனைப் பார்த்து நின்றே யமர்ந் தாடும்மே''

மேற்சொன்ன நூற்பாவில் திறை பெற்று அரசோச்சிய செகராசசேகரன் எனும் அரசன் எவ்வாறு புகழப்பெற்றிருக்கிறான் என்பதனை அறிய முடிகிறதல்லவா?

இலங்கையின் எப்பாகத்திலும் எக்காலத்திலும் ஒரு சுதந்திர தமிழ் இராச்சியம் இருந்ததில்லை என்று ஈ.ரி.கன்னங்கரா தனது 'யாழ்ப்பாணமும் சிங்கள பாரம்பரியமும்' (JAFFNA AND THE SINHALA HERITAGE) எனும் ஆங்கில நூலில் அழுத்திக் கூறியிருப்பதனாலேயே இச்சான்றுகளை நாம் முன்வைக்க வேண்டியது அவசியமாயிற்று.

கோட்டை இராச்சிய அரசன் ஏழாம் புவனேகபாகுவின் மருமகனான விதிய பண்டார, யாழ்ப்பாண இராச்சிய அரசன் சங்கிலியிடம் படையுதவி கோரி தனது பரிவாரங்களுடன் யாழ்ப்பாணம் சென்றதையும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

போர்த்துக்கேயர் முதன் முதல் கொல்லம்புரத்திற்கு (கொழும்பு) கி.பி.1506இல் வந்தனர். அவர்கள் வந்த ஆரம்பத்திலேயே கோட்டை இராச்சிய அரசர்கள் அவர்களுக்கு திறை (கப்பம்) செலுத்தத் தொடங்கினர். அக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தை பரராசசேகரன் (1478 – 1519) எனும் அரசனும் அவனுக்குப்பின் அவனின் மகனான

சொல்லேருழவன்
ம.க.அ.அந்தனிசில்

சங்கிலியும் (1519 – 1561) அரசியற்றி வந்தனர். போர்த்துக்கேயருக்கு சங்கிலி அரசன் சிம்ம சொப்பனமாக் விளங்கினான்.

அந்நியரான போர்த்துக்கேயர் அக்கரையில் கொச்சியிலும், கண்ணனூரிலும், கோவாவிலும் இக்கரையில் கோட்டை இராச்சியத்திலும் இடங்கோலியிருந்ததை அறிந்திருந்த சங்கிலி அவர்களை மூர்க்கமாக எதிர்த்து வந்தான்.

யாழ்ப்பாணம் பண்ணைக் கடலில் பாய் விரித்தோடிய போர்த்துக்கேயரின் கப்பல்களை அவன் துரத்தியடித்து வந்தான்.

கோட்டை இராச்சியத்தில் முதலில் போர்த்துக்கேயரை எதிர்த்து வந்த மாயா துன்னைக்கும் சங்கிலி அரசன் படையுதவி புரிந்ததாக அறியப்படுகிறது. மாயா துன்னை கோட்டை இராச்சிய அரசன் ஏழாம் புவனேகபாகுவின் தம்பியாவான்.

சங்கிலி அரசனுக்கு அந்நியரான போர்த்துக்கேயர் மீது கடும் கோபம் இருந்தது.

ஒரு சமயம் பண்ணைக் கடலில் பெருந்திரவியங்களுடன் வந்த போர்த்துக்கேயரின் கப்பலை வழிமறித்து அதிலிருந்த திரவியங்கள், துப்பாக்கிகள், வெடிமருந்து யாவற்றையும் சங்கிலி அரசன் அபகரித்தான்.

தமது பெறுமதிமிக்க திரவியங்கள் பறிபோன நிலையிலும் போர்த்துக்கேயர் உடனடியாக அவனுடன் போருக்குச் செல்லவில்லை! அதற்கான காரணம் என்ன?

'சங்கிலியுடன் போர்புரிய போர்த்துக்கேயர் வலுவின்றி இருந்துவிட்டனர்' என்று புனித பிரான்சிஸ் சவேரியார் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார். (LETTERS OF ST.FRANCIS XAVIER)

சங்கிலி அரசன் போர்த்துக்கேயருடன் கொண்டிருந்த பகைமை தென்னிலங்கை வரை அறியப்பட்டிருந்தது. எவ்வாறேனும் அந்நியரான போர்த்துக்கேயரை இத்தீவிலிருந்து துரத்திவிட வேண்டுமென்பதில் அவன் பிடிவாதமாக இருந்தான்.

பின்னர் சில ஆண்டுகள் கழித்து போர்த்துக்கேயர் சங்கிலியுடன் நடத்திய முதற்போரில் அவர்களை வன்னிக் கா[illegible]வரை துரத்தியடித்தான் சங்கிலி! அத்தகை[illegible] அஞ்சா நெஞ்சம் கொண்ட பெரும் வீரனாகத் திகழ்ந்தான் அவன்.

(போர்த்துக்கேயர் வந்தது முதல் அவர்களைப்பற்றியும், சிங்கள அரசர்கள் பற்றியும், பிற அந்நியர் பற்றியும் தகவல்களைத்தரும் சமூகக்கல்வி, சமாஜ அத்தியாபன ஆதியாம் நூல்கள் யாழ்ப்பாண இராச்சிய அரசர்களைப்பற்றி சரியான வரலாற்றுச் செய்திகளை இருட்டடிப்புச் செய்திருப்பதை நாம் அறியமுடியும்)

சங்கிலி அரசனைப்போல் விதியபண்டாரவும் போர்த்துக்கேயரை வெறுக்கவே செய்தான். ஆனால், போர்த்துக்கேயரை எதிர்த்துப்போரிடுவதற்கு விதிய பண்டாரவிற்கு படையுதவி தேவையாகவிருந்தது. சிங்கள அரசர்கள் போர்த்துக்கேயரை ஆதரித்து நிற்கும் போது விதியபண்டாரவிற்கு இவ்வுதவியைச் செய்வது யார்? போர்த்துக்கேயரை எதிர்ப்பதில் சங்கிலி அரசின் வீரப்பிரதாபங்களை அறிந்திருந்த விதிய பண்டார யாழ்ப்பாண இராச்சியம் செல்லத் தீர்மானித்தான். அங்கு சென்றால் சங்கிலி அரசன் தனக்கு படையுதவி செய்வான் என்ற திடமான நம்பிக்கையும் அவனுக்கிருந்தது.

ஆதலின் கோரளைப்பற்றிலிருந்து வெளியேறிய விதியபண்டார தனது பரிவாரங்களுடன் யாழ்ப்பாணம் சென்று சங்கிலி அரசனைச் சந்தித்து தான் படையுதவி பெறுவதற்கு வந்த விபரத்தை தெரிவித்தான். அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்ற சங்கிலி அரசன் தொடர்பாக ஜோன் எம்.செனவிரத்ன தனது நூலில் கூறியிருப்பதாவது:

'அவர்களைச் சங்கிலி அரசன் சிறப்பாக வரவேற்று விதியபண்டாரவின் கோரிக்கையை அனுதாபத்தோடு செவிமடுத்ததுடன் அக்கோரிக்கையை மகிழ்ச்சியுடன் ஏற்று வெறுக்கத்தக்க ஆக்கிரமிப்பாளர்களான போர்த்துக்கேயரைத் தண்டிக்கவும், நாட்டை விட்டுத் துரத்தவும் யாழ்ப்பாணச் சேனையொன்றினை விதியபண்டாரவுக்கு கொடுத்துதவுவதற்குச் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தான்...'

'UPON ARRIVAL IN JAFFNA, VIDIYA BANDARA AND HIS COMPANIONS WERE CORDIALLY RECEIVED BY THE TAMIL RULER (SANKILY) OF THAT KINGDOM. MORE THAN THAT, HE LIST ENED SYMPATHETICALLY TO VIDIYA'S APPEAL FOR ASSISTANCE AND GLADLY UNDERTOOK WITH ALL POSSIBLE HAST TO FURNISH HIM WITH A JAFFNESE ARMY WHERE WITH TO PUNISH AND EXPEL THE HATED PORTUGUESE INVADER....' ('GREAT SINHALESE MEN OF HISTORY', JOHN.M.SENEVIRATNE, PUBLISHED BY THE ASSOCIATED NEWSPAPERS OF CEYLON LTD, 180, FLEET ST., LONDON, E.C.1.1931 P.96)

(20ஆம் பக்கம் பார்க்க)

**வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**

# ராசி பலன்

**மேடம்:அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,2) உரிய செவ்வாய் 10ல் உச்சமாக இருப்பது மத்திம பலன் இருப்பினும் சொந்த நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். பிரயாண வாய்ப்புண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். (2,7) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்புண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நாலாம் வீடு செவ்வாயால் பார்க்கப்படுவதால் தாய்க்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (9,12) உரிய குரு 6ல் கேது வோடு இருப்பது தோசம் பிதாவுக்கு கூடாது. சயன சுகம் இருக்காது. அதிர்ஸ்டம் இருக்காது. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். தொழில் துறை முன்னேறும் முதலீடுகளால் லாபம் உண்டாகும். செவ்வாயை குரு பார்ப்பது நல்லது தோசம் விலகும்.

**இடபம் :கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருக சீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 12ல் இருப்பது விசேஷம். மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 11ல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் 12 ல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் கூடாது. (7,12) உரிய செவ்வாய் 9ல் இருப்பது கூடாது திருமணவாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குரு ஐந்தில் இருப்பதும் ராசியைப் பார்ப்பதும் விசேஷம். சனி வழிபாடு செய்வது நல்லது. தோசம் விலகும். அதிஸ்டம் கிடைக்கும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 10ல் பலன் செய்யாது. இருப்பினும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. வசிப்பிடத்தில் ஏதாவது பிரச்சினை தோன்றலாம். தாய்க்கும் நல்ல பலன் இல்லை. ராசியில் சனி இருப்பது கூடாது. மன அமைதியை பாதிக்கலாம். இரண்டாம் இடம் செவ்வாயின் பார்வையில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (7,10) உரிய குரு நாலில் கேதுவோடு இருப்பது தோசமாகும். திருமண வாய்ப்பு தடைப்படலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. (8,9) உரிய சனி ராசியில் இருப்பத கூடாது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. பூர்விக சொத்து கைநழுவிப் போகலாம். (5,12) உரிய சுக்கிரன் 11ல் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் கடகம் முதல் கன்னி வரை சஞ்சரிப்பதால் வார ஆரமபத்திலும் பிற்பகுதியிலும் நல்ல பலன் உண்டு. இருப்பினும் செவ்வாயின் கிடைப்பது நல்லது. கடகராசிக்காரருக்கு செவ்வாய்யோக காரர் தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 10ல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 10ல் பலன் செய்யது. வாகன சுகம் இருக்காது. மூத்த சகோதரத்துற்கும் நல்ல பலன் இல்லை. தாய்க்கும் கூடாது. நண்பர்களால் தொல்லை வரலாம். (5,10) உரிய செவ்வாய் 7ல் இருப்பது தோசமானது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்திதராது. (7,8) உரிய சனி12ல்இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 9ல் இருப்பது கூடாது. மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் கூடாது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையாது. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (2,11) உரிய புதன் 8ல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களுக்கும் கூடாது. (3,10) உரிய சுக்கிரன் 9ல் இருப்பது நல்லது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 6ல் இருப்பது விசேஷம். பெற்றோர் நலம். வாகன சுகம் உண்டு. வீடு அமைய பலன் உண்டு. (6,7) உரிய சனி 11ல் இருப்பது நல்லது. பகைவர் நண்பர் ஆகலாம். உடல் ஆரோக்கியம் உண்டு திருமணபலன் உண்டு. ராசியை சனி பார்ப்பது கூடாது.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 7ல் இருப்பது கூடாது. இருப்பினும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. ஆனால் பிரயாண வாய்ப்புண்டு. (2,9) உரிய சுக்கிரன் 8ல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்ல பலன் உண்டு. (4,7) உரிய குரு ராசியில் கேது வோடு இருப்பது கூடாது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. திருமணபலன் தாமதமாகலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (5,6) உரிய சனி 10ல் இருப்பது மத்திமமான பலன் தான் குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். ஆனால் உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவிலகும். 12 க் குரிய சூரியன் 8ல் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 7ல் இருப்பது கூடாது. இருப்பினும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள தாமதமாகலாம். மன அமைதி இருக்காது. (2,7) உரிய செவ்வாய் நாலில் இருப்பது தோசம். கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.(4,5) உரிய சனி 9ல் இருப்பது பொதுவாக கூடாது கெட்ட கிரகம் சுப ஸ்தானத்தில் நன்மை செய்யாது இருப்பினும் பாக்கித் தானத்தில் நன்மை செய்தும் இருக்கின்றன. 10ம்வீடுசெவ்வாயின் பார்வையில் இருப்பதால் தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. (9,12) உரிய புதன் 6ல் இருப்பது நல்லது. பிதாவுக்கு நல்ல பலன் உண்டு சயன் சுகம் உண்டு. 11க் குரிய சூரியன் 7ல் இருப்பது கூடாது. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. நண்பர்களுக்கும் கூடாது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது விசேஷம். மேலும் செந்த நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைச் செய்யும். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவிலகும் (2,5) உரிய குரு 11ல் இருப்பது நல்லது கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர் (3,2) உரிய சனி 8ல் இருப்பது கூடாது வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இளைய சகோதரத்துக்கு கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 6ல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம் சயன சுகம் இருக்காது. பத்துக்குரிய சூரியன் 6ல் இருப்பது விசேஷம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. சனி வழிபாடு செய்யின் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**தனு:மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் கேதுவோடு இருப்பது கூடாது. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்லபலன் இல்லை மேலும் சனிபார்ப்பது கூடாது. (2,3) உரிய சனி 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (7,10) உரிய புதன் 4இல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. 9க்குரிய சூரியன் 5இல் இருப்பது கூடாது. அதிஸ்டம் இருக்காது. பிதாவுக்கு கூடாது. (6,11) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது நல்லது. பகைவிலகும். உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்கள் உதவி செய்வர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு.

**மகரம்:உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லபலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனை தரும். கையில் பணம் இருக்கும். (4,11) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (5,10) உரிய சுக்கிரன் 4இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். குழந்தைகளின் செயல்பாடு திருப்திதரும். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பினும் செவ்வாயின் பார்வை இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (3,12) உரிய குரு 9இல் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் உண்டு.

**இவ்வார 'ராசிபலன்' 18–04–2005 முதல் 24–04–2005**

**பொ. சந்திரன்**

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| புதன் ராகு | சுக் சூரியன் | | சனி |
| | | | |
| செவ் | | | |
| | | | குரு கேது |

| | | |
|---|---|---|
| செவ் | அவிட்டம் | செவ் |
| சுக்கிரன் | அச்சுவினி | கேது |
| புதன் | உத்திரட்டாதி | சனி |
| சூரியன் | அச்சுவினி | கேது |
| குரு | அத்தம் | சந் |
| சனி | புனர்பூசம் | குரு |

சித்திரை 05 முதல் 11 வரை

சந்திரன் கடகம் முதல் கன்னி வரை

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில்இருப்பது கூடாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். சயன சுகம் இருக்காது. (2,11) உரிய குரு 8ல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்களுக்கும் கூடாது. (3,10) உரிய செவ்வாய் 12இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (4,9) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. வாகன சுகம் இருக்காது. பெற்றோருக்கு நல்ல பலன் உண்டு. 7க்குரிய சூரியன் மூன்றில் உச்சமாக இருப்பது மிகவும் நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்து நல்ல பலனைச் செய்யும். தொடங்கும்காரியம்எதுவானாலும்வெற்றிபெறும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். (2,9) உரிய செவ்வாய் 11இல் இருப்பது விசேஷம். கையில் பணம இருக்கும். பிதாவுக்கு நல்ல பலன் உண்டு. (4,7) உரிய புதன் ராசியில் நீசமாக இருப்பது கூடாது வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. திருமண பலன் தாமதமாகலாம். 6க்குரிய சூரியன் இரண்டில் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லையுண்டு. (11,12) உரிய சனி நாலில் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது மூத்த சகோதரருக்கு கூடாது, நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை.

# சட்டவிரோத செயல்களின் ....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்னை ஒரு ஹோமியோபதி டாக்டர் என அறிமுகப்படுத்திக் கொண்டே இவர் தனது தொழிலை ஆரம்பித்துள்ளார்.

இவருடைய தொழில் சற்று சூடுபிடிக்கவே பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத இந்த மலைக் குடியிருப்பில் வசதியான ஒரு இடத்தைப் பிடித்து தொழிலை ஆரம்பித்து விட்டார்.

மலையகத்தின் பல பாகங்களிலும் இவருக்கு தரகர்கள் இருக்கின்றனர் என்கிறது பொலிஸ் வட்டாரம். இதனால் அவருடைய வருமானமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போயுள்ளது.

இவருக்குப் பலமிக்க அரசியல்வாதிகளும், பெரும் புள்ளிகளும், காவல் துறையினரும் பக்கபலமாக இருந்துள்ளனர். இந்த துணிவிலேயே அவர் இந்த தொழிலை வெற்றிகரமாக நடத்தி வந்துள்ளார் என்பது இப்பிரதேசத்தில் பரகசியம்.

கடந்த வாரம் இந்த நபரை பொலிஸார் பிடித்த போது கருக்கலைப்புக்காக அங்கு வந்திருந்த இரண்டு பெண்களையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

அது மட்டுமல்ல அழிக்கப்பட்ட சிசுக்களின் சிதைந்த எச்சங்கள் மற்றும் பல்வேறு தடயப் பொருட்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வளவு ஆதாரங்கள் இருந்தும்கூட கைது செய்யப்பட்ட இந்த நபரைப் பொலிஸார் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவில்லை. பொலிஸ் நிலையத்திலேயே வைத்து விசாரித்துவிட்டு சுதந்திரமாக நடமாட விட்டுள்ளனர்.

இந்தக் கருக்கலைப்புக் 'கனவான்' நிலைமைக்கேற்ப இரண்டாயிரம் ரூபா முதல் எட்டாயிரம் ரூபா வரை கட்டணமாக வசூழித்து பல பெண்களுக்கு அழித்தல் கடவுளாக அவதாரம் காட்டி வந்துள்ளார். இது வரை ஆயிரத்திற்கும் அதிகமான கருகலைப்புகளை அவர் செய்திருகிறார் என தனக்கு நெருக்கமானவர்களிடம் அவரே கூறி உள்ளாராம்.

அப்படி இருந்தும் அவர் எப்படி பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். பொலிஸாருக்கு அழுத்தம் கொடுத்தது யார்?

சாதாரணமாக இருவர் அடிபட்டுக் கொண்டாலே அவர்களைக் கைது செய்து நீதிபதியின் முன் ஆஜர்படுத்திப் பல வாரங்கள் தடுப்புக்காவலில் வைக்கும் பொலிஸார் இவ்வளவு பாரதூரமான சட்டவிரோத செயலில் ஈடுபட்டவரை எப்படி சுதந்திரமாக நடமாடவிட்டுள்ளது? பொலிஸார் அவர் மீது நடவடிக்கை எடுக்காதது மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை எழுப்பி உள்ளது.

பூண்டுலோயா பிரதேசத்தில் அண்மையில் ஒரு சம்பவம் நடந்துள்ளது. திருமணாமாகமலே கர்ப்பம் தரித்த ஒரு இளம் பெண் ஏழுமாத கர்ப்பிணியாக இருந்த போது சுயமாகக் கருக்கலைப்பு செய்து கொண்டார்.

பொலிஸ் அவரைக் கைது செய்து அந்தப் பெண் தன்னுடன் உறவு கொண்டிருந்தவர்கள் என நால்வரின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். அவர்களிடம் தான் பணத்தைப் பெற்றுக் கொண்டே சுகம் கொடுத்தார் என அந்தப் பெண் கூறி உள்ளார்.

அப்படி அந்தப் பெண்ணுடன் தொடர்பு கொண்டவர்கள் என்று கூறப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரையும் நான்கு வாரங்கள் தடுப்புக் காவலில் வைத்திருந்தது பொலிஸ். கம்பளை பொலிஸ் நிலையத்தினால் நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒரு பெண் கருச்சிதைவு செய்து கொண்டார் என்பதை வைத்து நான்கு பேரைக் கைது செய்த பூண்டுலோயா பொலிஸார் வழக்குத் தொடுத்துள்ளனர். பாலியல் தொழில் என்ற பெயரில் இருந்தாலும், சட்டத்திற்குப் புறம்பான உறவு வைத்திருந்தர்வளைக் கைது செய்தது சரிதான். ஆனால், இந்த விடயத்தில் சட்டவிரோத கருக்கலைப்பு சந்தேக நபரையே பொலிஸார் ஏன் விட்டனர். பூண்டுலோயா பொலிஸாருக்கு உள்ள துணிச்சல் ஹட்டன் பொலிஸாருக்கு இல்லையா?

வேலியே பயிரை மேய்கின்றதா? அல்லது பாலுக்கு பூனை காவல் இருக்கின்றதா? பாதிக்கப்படும் இப்பிரதேச மக்களைப் பாதுகாப்பது யார்? இக்கேள்விக்கு எப்போது விடை கிடைக்கும்.






## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15;680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250300 Col. Cms) | | |

## 28 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

# தொடரும் தவிப்பு

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

அறிவுதான் சத்தம் போட்டான். 'சும்மா மனசைப் போட்டுக் குழப்பிக்கிட்டே இருக்காதீங்கம்மா' - என்று அறிவுறுத்தினான்.

மனதை அமைதியாக வைத்துக்கொள்ள முயன்றும் முடியவில்லை. எப்படியோ சமாளித்து, பிறரிடம் இயல்பாகச் சிரித்துப் பேசும் அளவிற்கு மனதைத் தயார் செய்து விட்டார். எனினும் தனிமையான நேரங்களில் பலவித நினைவுகளும் குழப்பங்களும் வருவதை அவரால் தவிர்க்க முடியவில்லை.

அதிலும் குயில்தாசனின் நிலை அவரைப் பெரிதும் வருத்தியது. குயில்தாசன் ஒரு கவிஞராக, ஆசிரியராக, பள்ளியின் தேசிய மாணவர் படை அதிகாரியாக, அதோடு திராவிடர் கழகத்தின் செயல்வீரராக என சுற்றிச் சுழன்றுக் கொண்டிருந்தவர். பெரியார் சமூகக் காப்புப் பணி என்ற பெயரில் திராவிடர் கழகத்தில் பெரிய இளைஞர் படையையே உருவாக்கியவர். அந்தப் படையின் அனைத்துக்கட்டளைகளும் தமிழில் இருக்க வேண்டும்என்பதற்காக படையணிக் கட்டளைகள் அனைத்தையும் தமிழ்ப்படுத்தி அனைவரது பாராட்டையும் பெற்றவர். அவரது இந்தச் செயல்களுக்கெல்லாம் அந்தச் சின்ன வயதிலேயே உறுதுணையாக நின்றவன் அறிவு. அவர்கள் இருவரும் தந்தை மகனைப் போல அல்லாமல் நண்பர்களைப் போலப் பழகியவர்கள்.

இன்னமும் நன்றாக நினைவுள்ளது. புலிப்கள் வீட்டில் தங்கியிருந்த காலம் அது. அப்போது அறிவு பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் வீட்டில் புகை பிடித்தபடியே நாற்காலியில் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தார் குயில்தாசன்.

அப்போது அங்கே வந்த பையன்களில் ஒருவர் 'ஐயா அப்படியே இருங்க ஒரு புகைப் படம் எடுத்துக்கிறேன்' - என்றான்.

அதைக் கேட்டு அங்கு ஓடிவந்த அறிவு தன் கையிலிருந்த காகிதத்தை சுருட்டி புகை பிடிப்பது போல் வாயில் வைத்து பிடித்துக் கொண்டு அப்பாவின் அருகில் அமர்ந்தான்.

'ம்! இப்போது எடுங்கண்ணா' - என்று சொல்ல குயில்தாசன் உட்பட அனைவரும் சிரித்துவிட்டனர்.

இப்படிசிக்குச்சிநின்றபிள்ளையின் நிலை இப்படியாகிவிட்டதே.. அதற்கு நான்தான் காரணமோ என்ற எண்ணமே அவரை முடக்கி விட்டது.

சிறு வயது முதலே பெரியார் கருத்துக்களை ஊட்டி வளர்த்தார் தம் பிள்ளைகளை.

ஈழத்தில் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்த போது அப்போராட்டத்தை முன்னெடுத்து நடத்தி வந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தங்கவும் செயல்படவும் தமிழ்நாடெங்கும் பல குடும்பங்கள் இடமளித்து உதவின. அத்தகைய ஒரு குடும்பம் தான் குயில்தாசனுடையது.

வீட்டில் இரண்டு இளம்பெண்கள் இருந்தபோதும் சற்றும் தயங்காமல் இளைஞர்களான விடுதலைப்புலிகளைத் தம் வீட்டில் தங்க அனுமதித்தது அக்குடும்பம். உற்றார் உறவினரைவிட்டுப் பிரிந்து, தம் நாட்டிற்காக, இனத்திற்காகப் போராடும் அவ்விளைஞர்களிடம், பெற்ற தாய் தந்தையரைப் போன்றே அன்பு பொழிந்தனர் குடும்பத்தினர். அவ்விளைஞர்களின் தியாகத்தைத் தம் பிள்ளைகளுக்கும் உணர்த்தி அவர்களையும் உடன்பிறந்தோர்போல் பாசம் காட்ட வைத்தனர். அந்தச் சூழலில் வளர்ந்த பிள்ளைகள் இயல்பாகவே மிகுந்த இன, மொழி உணர்வோடு திகழ்ந்தனர். அப்படி இன, மொழி உணர்வோடு வளர்ந்ததால்தான் இன்று தன் பிள்ளை தூக்குமர நிழலில் நிற்கிறானோ என்று நினைத்து நினைத்து வேதனைப் பட்டார் குயில்தாசன்.

எத்தனை கவிதைகள் எழுதியிருப்பார். இப்போது எழுத்தில்கூட ஆர்வமின்றி அவர் சோர்ந்து அமர்ந்திருப்பதைக் காணக்காண அற்புதத்தால் தாங்க இயலவில்லை. அவர் செய்தது எதுவும் தவறில்லை என்று எடுத்துக் கூறி அவரைத் தேற்ற முயன்றார். அப்படி இன, மொழி உணர்வோடு வளர்ந்ததால் தான் இத்தனை துன்பங்களுக்குப் பிறகும் இன்று வரை மன உறுதி குன்றாமல் இருக்க தங்கள் மகனால் முடிகிறது என்பதை அவருக்கு புரிய வைக்க முயன்றார்.



அறிவும் கூட எத்தனையோ முறை சொல்லிவிட்டான்.

'நீங்களிய வாப்பா... நான் நல்லாயிட்றேன்' - என்று கூறிவிடுவார். அதிலும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக் குப்பின்மிகுதியாகச் சோர்ந்துவிட்டார். அவரது அந்த நிலை குடும்பத்தாரையும் நண்பர்களையும் பெரிதும் வருத்தியது.

அவர் இந்த அளவுக்குச் சோர்ந்து விட்ட நிலையிலும் அற்புதம் மட்டும் தெளிவோடும் மன உறுதியோடும் இருந்தார் இல்லாவிட்டால் கடினம் தான்.

எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு தனது மனவேதனைகளைப் பெருமளவு மறைத்து தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டு, அடுத்தென்ன, அடுத்தென்ன என்று ஓடிக்கொண்டிருந்தார்.

இதோ அடுத்த சுற்றுப்பயணத்திற்குத் தயார். ஜூன் 21 ஆம் திகதியே சென்னை போய்விட்டார். வழக்கம்போல் சௌரி வீட்டில் இரவு தங்கிவிட்டு மறுநாள் காலையிலேயே கிளம்பி சுற்றுப்பயணம் ஆரம்பிக்கவிருக்கும் பெரியார் சிலைக்குப் போய்விட்டார். சென்னையிலுள்ள தோழர்கள் திரண்டு வந்திருந்தனர். நெடுமாறனுடன் குழுவின் முக்கிய தலைவர்கள் பலரும் வந்துவிட்டிருந்தனர். வாழ்த்திப் பேசி வழியனுப்பி வைக்க நக்கீரன் இதழின் ஆசிரியர் கோபால் வந்திருந்தார். விடுதலையானவர்களில் பாக்கியநாதன், பத்மா, சுபாசுந்தரம், சாந்தி ஆகியோரும் இருந்தனர்.

பெரியார் சிலைக்கு நெடுமாறன் மாலை அணிவித்த பின், கோபால் வாழ்த்திப் பேச சுற்றுப்பயணம் கிளம்பியது.

முன்னால் ஒரு காரில் நெடுமாறன், விடுதலை இராசேந்திரன், சு.ப.வீரபாண்டியன் உள்ளிட்ட தலைவர்கள் பின்னே 2 வான்களில் சென்னை மாவட்டத் தோழர்களும் விடுதலையானவர்களும், அவர்களுடன் அற்புதமும் பயணப்பட்டனர். சென்னை எல்லையைத் தாண்டும் வரை முழக்கங்கள் எழுப்பியபடியே வந்தனர்.

அற்புதத்திற்கு அனைவருடனும் இப்படி ஒரு சுற்றுப்பயணம் செல்வது உற்சாகமாகத்தான் இருந்தது. அதிலும் உடன் இளைஞர்கள்.... 18லிருந்து 30 வயதிற்குட்பட்டவர்கள்... அவர்கள் மிகுதியான உற்சாகத்துடனும் இளைஞர்களுக்கே உரிய குறும்புகளுடனும் வந்தபோது... அற்புதத்தால் மகிழ்ச்சியாக மட்டுமே இருக்கமுடிந்தது. அனைவரும் கிண்டலாகப் பேசியபடியே வந்தனர். இதனால் எல்லாம் தன் கவலைகளை மறந்தவராக அவர்களுடன் கலந்துவிட்டார் அற்புதம்.

இப்படியொரு நேரத்தில் மகன் உடன் இல்லையே என்ற எண்ணம் அவ்வப்போது எட்டிப்பார்க்கத்தான் செய்தது. அதனாலென்ன அறிவு வந்தபிறகு இதைவிடப் பெரிய வரவேற்பும் நிகழ்ச்சிகளும் நடக்கத் தான் போகின்றன. அப்போதும் பார்க்கத் தானே போகிறோம்... என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டார்.

வழியில் காண்பவற்றை, உடன் வருபவர்கள் பேசுவதை, எல்லாம் - இதை அறிவிடம் சொல்லவேண்டும் அதைச் சொல்ல வேண்டும் - என மனதில் குறித்தவாறே வந்தார்.

முதல் கூட்டம் திருவள்ளூரில் அது முடிந்து! வேலூர் சென்று சிறையில் அனைவரையும் பார்ப்பதாக ஏற்பாடு.

திருவள்ளூர் கூட்டம் மிகச் சிறப்பாக நடந்தது. விடுதலை யானவர்கள் ஒவ்வொருவரையும் மேடையேற்றி மக்கள் முன் அறிமுகப்படுத்தியபோது பெரும் கரகோஷம் எழுந்தது.

கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே தோழர் பத்ரி மேடையேறி நெடுமாறனின் காதினில் ஏதோ கூறினார். அற்புதம் அதைக் கவனித்துவிட்டார்.

'என்னவாக இருக்கும்... ஏதும் பிரச்சனையோ?' - கேள்வி எழுந்தது. கேள்விக்கு விடை நெடுமாறனின் பேச்சில் கிடைத்தது.

'சுற்றுப்பயணத்திற்குத் தடை' - கேட்டவுடன் தோழர்கள் கொதித்து விட்டனர். நெடுமாறனும் மிகக் கோபமாகத்தான் பேசினார்.

'தடை - தடை - தடை'. இந்த ஒன்பது ஆண்டுகளாக இவர்கள் நடத்தும் கூட்டங்களானாலும் சரி. மாநாடுகள், பேரணிகள், போராட்டங்கள் எல்லாவற்றிக்கும் தடை விதிப்பது அரசாங்கத்தின் வழக்கமாகிவிட்டது. ஆனால் இந்தமுறை அப்படி தடையை மீறி கைதாவதில் நெடுமாறனுக்கு விருப்பமில்லை. அப்படி கைதானால் அது ஒருநாள் செய்தியோடு முடிந்துவிடும். ஆனால் எதற்காக இந்தப் பயணம் கிளம்பியதோ அந்த நோக்கம் நிறைவேறாது. உண்மைகள் மக்களிடம் போய்ச் சேராது. அதனால் இதை வேறுவிதமாகத்தான் கையாள வேண்டுமென்று முடிவெடுத்தார்.

'திருவள்ளுர் கூட்டத்தை முடித்துக் கொண்டு அனைவரும் சென்னை திரும்பலாமென முடிவெடுத்தார்.

சென்னை திரும்பியவுடன் நெடுமாறன் செய்த முதல் காரியம் வழக்கறிஞர் சந்துருவைத் தொடர்புக் கொண்டு இத்தடைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்ததுதான்.

சுற்றுப் பயணத்தின் தலைப்பே 'மரணதண்டனை ஒழிப்பு மனித நேயப் பயணம்' என்பதுதான். உலக நாடுகள் மரண தண்டனையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டும் இந்த நேரத்தில், ஐ.நா. சபையே மரண தண்டனையை ஒழிக்க உலக நாடுகளுக்குக் கோரிக்கை விடுத்திருக்கும் நேரத்தில், உலகெங்கும் மரண தண்டனைக்கு எதிராக இயக்கங்கள் வலுப்பெற்றுப் போராடி வரும் நேரத்தில், அதே நோக்கத்தில் மரண தண்டனையை எதிர்த்துக் கிளம்பி இருக்கும் ஒரு பயணத்திற்கு எவ்வாறு தடை விதிக்கலாமென வழக்கறிஞர் சந்துரு நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

வழக்குத் தீர்ப்புவர கிட்டத்தட்ட 15 நாட்கள் ஆகிவிட்டன. இறுதியில் தடை நீக்கப்பட்டு மீண்டும் ஜூலை 13 ஆம் நாள் புறப்படுவதென முடிவானது.

இதற்குள் 2 முறை வேலூர் சென்று மகனை சந்தித்துத் திரும்பி விட்டிருந்தார் அற்புதம். மறு ஆய்வு மனு போட்டு அதைப் பற்றி ஒரு தகவலும் இல்லையே என்றுதான் அறிவுக்குக் கவலை.

(தவிப்பு தொடரும்.....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# காலத்தால் முந்திய.....

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விதிய பண்டார கோட்டை இராச்சிய அரசனான தர்மபாலாவின் தந்தை என்பதை யாவரும் அறிவர். ஆனால் விதிய பண்டார போர்த்துக்கேயரின் எதிரி என்பதாலேயே சங்கிலி அரசன் அவனுக்குப் படையுதவி புரியமுன்வந்தான்.

போர்த்துக்கேயரை எதிர்த்துப்போர் புரிவதற்கு விதிய பண்டார யாழ்ப்பாண அரசனிடம் படையுதவி கோருவதற்கு நம்பிக்கை பூண்டிருந்ததையும். அதற்கமைய விதிய பண்டார யாழ்ப்பாணம் சென்ற போது அவனது கோரிக்கைக்கு உளப்பூர்வமாக உதவி புரிய விரும்பிய யாழ்ப்பாண அரசன் அதற்காக படையைத் திரட்டியதையும் ரெவ.எஸ்.ஜி.பெரேராவும் தனது நூலில் கூறியுள்ளார். அது வருமாறு:

"HE(VIDIYA BANDARA) HOPED TO OBTAIN HELP FROM THE KING OF JAFFNA WHO WAS INDEED WILLING TO ASSIST HIM AND EVEN MUSTERED HIS TROOPS FOR THE PURPOSE" (P.52)

### வெடிச்சத்தமும் விளைவும்

சங்கிலி அரசன் தனது படையணியை விதிய பண்டாரவிடம் ஒப்படைக்கும் முன்னர் இரு தரப்பினரும் சத்தியம் செய்து கொள்ள வேண்டியிருந்தது. ஆதலின் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் இரு தரப்பினரும் சத்தியம் செய்வதற்காக நாளும் நேரமும் ஒதுக்கப்பட்டது.

குறித்த நாளில், நேரத்தில் சங்கிலியும் பரிவாரங்களும், விதிய பண்டாரவும் பரிவாரங்களும் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவ. சென்றடைந்தனர். அப்போது சிறிய து தில் வெடிச்சத்தமொன்று கேட்டது. அ வெடிமருந்தில் தற்செயலாகத் தீ பட்டதால உண்டானதே சத்தமாகும்.

ஆனால் அவ்வெடிச் சத்தத்தில் சந்தேகம் கொண்டவிதிய பண்டார யாரும் எதிர்பாராத விதத்தில் திடீரெனத் தன் வாளை உருவிச் சுழற்றத் தொடங்கினான். அவனது பரிவாரங்களும் தாறுமாறாக வாளைச் சுழற்றவே சங்கிலி அரசனின் முன்னிலையிலேயே சில தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இதன் விளைவாக இரு தரப்பினருக்கும் திடீரென மூண்ட வாட்போரில் விதியபண்டாரவும் அவனின் பரிவாரங்கள் அனைவரும் கோவில் முன்றலில் கொல்லப்பட்டனர்.

இதனை "தற்செயலாக ஏற்பட்ட வெடிச் சத்தத்தினால் உண்டான சண்டையின் காரணமாக விதிய பண்டார உயிரை இழந்தான்." என்று ரெவ.எஸ்.ஜி.பெரேரா தனது நூலில் கூறுகிறார். அது வருமாறு:

"BUT AN ACCIDENTAL FIRE LED TO A FIGHT IN THE COURSE OF WHICH VIDIYA LOST HIS LIFE" ('A HISTORY OF CEYLON FOR SCHOOLS', 1932, P.53)

ஆதலின் யாழ்ப்பாண இராச்சியம் காலத்தால் முந்திய இராச்சியம் என்பதையும் அது முக்கியத்துவமான பல வரலாற்று அம்சங்களைக் கொண்டு சுதந்திரமாக விளங்கியதென்பதையும் யார்தான் மறைக்கமுடியும்?

(முற்றும்)

## கரு: பாணபத்திரன் நாட்டுக்கோர் நல்லதம்பி உரு: சாமி





'சச்சின்' -பிபாஷா-

# விஜய்யைப் பார்த்து வியந்து போன அழகுப் பிசாசு

'திருமலை' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து விஜய் நடிக்கும் படம் 'சச்சின்'. இது ஒரு காதல் கதையாக அமைக்கப்பட்டுள்ளதாம்.

'சச்சின்' படத்தில் அழகுப் புயல் பிபாஷா பாசுவுடன் பழகக் கூச்சப்பட்டுக் கொண்டு ஒதுங்கியிருந்தாராம் விஜய். அதே விஜய், இப்போது பிபாஷாவுக்கு நெருங்கிய தோழராகிவிட்டார். எப்படி?

ஊட்டியில் இப்படத்தின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. வழக்கம் போல் யாரிடமும் பேசாமல் ஒதுங்கி உட்கார்ந்திருந்தார் விஜய். அவர் வந்திருப்பதைக் கேள்விப்பட்டுக் கூட்டம் கூட்டமாக அந்த இடத்தை ரசிகர்கள் மொய்க்க ஆரம்பித்தார்களாம். ரசிகர்கள் "இளைய தளபதி வாழ்க" என்று கத்திக் கூச்சல் போட, உட்கார்ந்த இடத்திலேயே கையையசைத்து தன் அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாராம் விஜய். இந்தச் சின்ன ஊரில் இத்தனை ரசிகர்களா என்று வியந்த பிபாஷா பிறகுதான் விஜய் பற்றி விசாரிக்கவே ஆரம்பித்தாராம். அவருக்கு தமிழ் நாட்டில் இருக்கிற செல்வாக்கை கேட்டு அறிந்து கொண்ட அவர் வலிய வந்து விஜயை நண்பராக்கிக் கொண்டாராம்.

இத்தனை பெரும் பட்டாளத்தை வைத்துக் கொண்டு இவ்வளவு அடக்கமாக ஒரு நடிகரா? என்று நேரடியாகவே தன் வியப்பை தெரிவித்தாராம் விஜயிடம். பிறகு மெல்ல மெல்ல இருவரும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டார்களாம். சங்கீதா இந்த நட்பிற்கு என்ன முடிவு எடுப்பாரோ ( ரியவில்லை.

# 'அஆ' ஆகிய பிளஃப்



'அஆ' (பிளஃப்) -எஸ்.ஜே.சூர்யா, நிலா-

தமிழ்கடலில் மூழ்கி 'டைட்டில்' முத்தெடுத்திருக்கிறார் இயக்குநர், நடிகர், தயாரிப்பாளர் என்று எல்லாமுமான எஸ்.ஜே.சூர்யா. 'பெஸ்ட் பிரெண்ட்'டை எப்படி செல்லமாக 'பிளஃவ்' என்று அழைக்க முடிந்ததோ, அப்படியொரு தமிழ்ப் பெயரைத்தான் சூர்யா விரும்பினார். மேலும் தனது முன்னைய படங்களைப் போலவே இரண்டெழுத்தில் தலைப்பு இருக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார்.

அப்படி எஸ்.ஜே.சூர்யா தேர்ந்தெடுத்த பெயர் 'அஆ', சத்தியமாக இது லிவி நிவாரணி விளம்பர வாசகம் அல்ல. எஸ்.ஜே. சூர்யா, நிலா நடிக்கும் படத்தின் புதிய தமிழ் பெயர்.

தமிழ் உயிரெழுத்துக்களில் முதல் இரண்டு எழுத்துக்களே தலைப்பானதில் எஸ்.ஜே சூர்யாவுக்கு உயிர்கொள்ளாத மகிழ்ச்சி. 'அஆ' என்றால் ராகம் போட்டு பாடலாம் என்கிறார் குஷியாக. (ஏ.ஆர். ரஹ்மான், வாலி கவனிக்க)

ஆங்கிலத்தில் பெயர் இருக்கு. ஆபாசமாகப் பொருள் இருக்கு என்று படப்பிடிப்பை தடைசெய்த மறத்தமிழர்களுக்கு ஒரு கேள்வி. எஸ்.ஜே.சூர்யா கலப்படமில்லாமல் அழகு தமிழில் பெயர் வைத்திருக்கிறார். ஆங்கிலத்துக்கு ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தமிழ்ப் பெயருக்கு பாராட்டுக்கூட்டம் நடத்துவீர்களா?

# 'மும்பை எக்ஸ்பிரஸ்' மாறாது - கமல்



'மும்பை எக்ஸ்பிரஸ்' கமல், மனிஷா-

'மும்பை எக்ஸ்பிரஸ்' தெலுங்கிலும் வெளி வரப்போகிறது. இதையொட்டி ஹைதராபாத் சென்ற கமலிடம் அனைவரும் கேட்ட கேள்வி' 'படத்தின் பெயரை மாற்றப்போகிறீர்களாமே?'' என்பதுதான்.

பதறிவிட்டார் கமல். முதன்முதலில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் அனைத்து சாத்தியங்களையும் கொண்டு உருவான படம் மும்பை எக்ஸ்பிரஸ். இரு மொழி தயாரிப்பு என்பதால் கோடிக்கணக்கில் செலவு. இரவு பகலாகக் கஷ்டப்பட்டுக் கடைக்கு கொண்டு வந்தால் தடியுடன் தண்டல்காரர்கள். யாருக்குத்தான் கோபம் வராது?

ஆனால், பொறுமையாக, அழுத்தமாக கமல் பதிலளித்தார். "சில அரசியல் கட்சிகளுக்கு அழுத்தமான கொள்ளை இல்லை என்று தெரிகிறது. காந்திஜி, கதர் ஆடைகளை உபயோகிக்க சொன்னாரே தவிர மற்ற ஆடைகளைப் பழிக்கவில்லை. 'சண்டியர்' பெயரை மாற்றியதை போல் கண்டிப்பாக 'மும்பை எக்ஸ்பிரஸ்' பெயரை மாற்றமாட்டேன்.

படத்தின் தலைப்பை விமர்சனம் செய்யும் தலைவர்கள் நாட்டில் உள்ள மக்கள் பிரச்சினைகள், தனி மனித உரிமைகள் பற்றிக் கவனத்தில் கொண்டு அதற்காகப் பாடுபட வேண்டும்.

திரைப்பட அரங்குகளையும், பிரார்த்தனைக் கூடங்களையும் மூடிவிட்டால் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. உண்மையில் மக்களுக்கு சுகாதாரம், வேலை, பாதுகாப்பு போன்ற அவசரத் தேவைகள் உள்ளன. அவற்றின் மீது இந்தத் தலைவர்கள் கவனம் செலுத்தட்டும்.'' - என்று கூறியிருக்கிறார் கமல்.

அழகாக, படிக்காதவர்களுக்கும் புரியும்படி விளக்கியிருக்கிறார் கமல். தியேட்டர் வாசலில் பெயரை மாற்று என வீண் கோஷம் போடும் படித்தபெருமக்களுக்கு இது புரியுமா?

அல்லது மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறுமா என்று படம் வெளியானதும் தெரியும்.

# பிரசாந்திற்கு திருமணம்



-பிரசாந்த், அங்கிதா-

நீண்ட நாள்களாகவே பிரசாந்த் திருமணம் பற்றி பல செய்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன. அதில் லேட்டஸ்ட் செய்தி, நடிகை உமாவை பிரசாந்த் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்பதுதான். இருவரும் இணைந்து 'அடைக்கலம்' படத்தில் நடித்து வருகிறார்கள். அதில் ஏற்பட்ட பழக்கம் திருமணத்தில் முடியப்போகிறது என நாலாபுறமும் இருந்து தகவல் கிளம்ப, நாம் தியாகராஜனைத் தொடர்பு கொண்டோம்.

பிரசாந்துக்கு விரைவில் கல்யாணம் நடக்கவிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன - என்றார்.

ஆனால், உமாதான் பெண் என்பது தவறான செய்தி. தேவையில்லாமல் யாரோ இப்படி புரளி கிளப்பிவிடுகிறார்கள் எனவும் மறக்காமல் சொன்னார்.

# அஜித்தின் கைமாறிய படம்



-சோனியா அகர்வால்-

ஒரு கல்லூரியின் கதை! இது படத்தின் பெயர். படத்தின் பெயருக்கும் கதைக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது. ஆனால் தலைப்புத்தான் கதையே என்கிறார்கள்.

கல்லூரியில் படிக்கும் ஒருவன் தன் காதலைச் சொல்ல முடியாமல் பைத்தியமாகிறான். அது தெரியாமல் சில வருடங்கள் கழித்து அவனைச் சந்திக்கிற நண்பர்கள் அதிர்ச்சியடைகிறார்கள். அவனுக்காக மீண்டும் கல்லூரியை பழைய மாதிரியே வடிவமைக்கிறார்கள். ஓய்வுபெற்ற அதிபரில் இருந்து கடைநிலை ஊழியர் வரை திருப்பி அழைக்கப்படுகிறார்கள்.

ஹீரோவின் பழைய காதலியும் வருகிறாள். முதலில் இருந்து மீண்டும் இவருக்கும் காதல். அவன் பழைய நிலைக்குத் திரும்பிவரும் போது என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் முடிவு.

இந்தக் கதை முதலில் அஜித்திற்குச் சொல்லப்பட்டது. அதில், அவரே நடிப்பதாகவும் இருந்தது. கஷ்டமான காலம் வரும் போது கண்ணை மறைக்குமே ஒரு சமாச்சாரம். அதுவந்து அஜித்தின் கண்ணை மறைக்க இயக்குனரை காத்திருப்புப் பட்டியலிலேயே லிஸ்டிலேயே வைத்திருந்தார் அஜித்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த இயக்குநர் தெலுங்கில் நடித்துக் கொண்டிருந்த இளம் நடிகர் ஒருவரை வைத்து படத்தை ஆரம்பித்துவிட்டார்.

இப் படத்தின் கதையை நாயகியான சோனியா அகர்வாலிடம் சொன்னபோது இரண்டு கச்சீப்புக்கள் நனைய நனைய கதையை கேட்டாராம். அடுத்த நிமிடமே கால்ஷீட் ரெடி என்று சொல்லிவிட்டாராம்.

சோனியா அகர்வாலிடம் கதை சொல்லவேண்டும் என்றால் முதலில் செல்வராகவனிடமே சொல்லவேண்டும். ஆனால், "எனது கதையை நேரடியாக சோனியா அகர்வாலே கேட்டார்" என்று மெய்சிலிர்கிறார் இயக்குநர்.

# கவிதைப் புனல்

## என்னவள்

உறவானவள் – எந்தன்
உயிரானவள் – நான்
வரைகின்ற கவிதைக்கு
பொருளானவள்.
நிலவானவள், பூக்கும்
மலரானவள், என்
மனதைவிட்டகலாத
நினைவானவள்.
வான் மீதிலே உலவும்
பருந்தானவள் என்
பார்வைக்கு அவள் இங்கு
விருந்தானவள்.
கலையானவள் என்
விழியானவள் என்
வாயார வார்த்தைக்கு
மொழியானவள்.

தெ. சதீஷ்பாபு
கைதடி.

## சித்திரைப் புத்தாண்டே வருக

சித்திரைப்புத்தாண்டே வருக.
சிறப்பான வாழ்வு நமக்குத்தருக.
சீரழிந்துள்ள எம்மக்கள் வாழ்வை
சீர்படுத்தி அளிப்பதற்கு வருக.

ஆழிப்பேரலை தந்த அழிவுகளும்
அதிலிருந்து விடுபட முடியா அவலங்களும்
அகதி வாழ்வில் படும் அந்தரங்களும்
பெற்றாரை இழந்தோரும் உற்றாரைத் தொலைத்தோரும்
பெயர் ஊர் தெரியாமல் அழிந்த கிராமங்களும்
அவலத்தின் உச்சியிலும்
அரசியல் இலாபம் தேடும் அக்கிரமங்களும்
இனியும் வேண்டாம். வேரோடு சாய்த்துவிடு
மலர்கின்ற புத்தாண்டுதனில்
மக்கள் மனக்கவலைகள் நீங்கி
அச்சம் அகன்று அடிமை விலங்குடைத்து
அனைவரும் ஒன்றுபட்ட அகிலத்தைக் கட்டியெழுப்ப
வருகின்ற புத்தாண்டே வழிசமைத்துத் தந்துவிடு.
போரின் கொடுமைகளும் அழிவுகளின் அவலங்களும்
போதும் இனியும் வேண்டாம்.
புலர்கின்ற ஆண்டு புதுயுகமாய் மாற
புத்தாண்டே நீயும் புயலாக வருக.

பரா.சந்திரகுமார்.

## உனக்காக உனக்காக

முடிசூடா ராணியாக
நீ வாழ உனக்காய்
நான் கட்டுவேன்
ஓர் இனிய மாளிகை
மலர் விரிப்பு
விரித்திடுவேன்
நீ நடக்கும்
பாதையெல்லாம்
அள்ளி அள்ளிக்
கொடுத்திட்ட
உன் கரங்கள்
அன்புடன் எனை
வாரி முத்தமழை
பொழிந்திடக்
கஷ்டமெல்லாம்
கரைந்திடுதே
நொடிப்பொழுதில்
சத்தியமாய் நான்
சாகமாட்டேன்
அடுத்த பிறவியிலும்
என் தாயாய் நீ
இல்லையென்றால்.

ச.பிரதீபா
மீசாலை.

## பறக்கும் தட்டு

கேட்காதே ஒரு செய்தி
சேட்டம் பத்திய செய்தியாக!
பறக்காதோ அத்தட்டுப் பதிவாக?
இறங்காதோ இத்தட்டு வடகிழக்காக?
இரண்டடி மனிதர்களே இவ்விடத்தில்
இரவிரவாய் நீர் இறங்கிப்
போகையிலே...
தமிழ்மொழியைப் பேசிக்கொண்டு
அமிழ்தினும் இனிய இம்மொழியே
எங்கள் முப்பாட்டன் கண்டமாம்
குமரியிலே
தங்களுக்குள் பேசினார்கள் என்று
நீங்கள்
தக்க உரை செய்து சந்தியிலே
தமிழ் முழக்கம் செய்யீரோ?

அமெரிக்கர் என்றாலும் இந்தியரே
என்றாலும் பெரும் கொடுமை பல
செய்தோய்ந்த பேரினத்தார் என்றாலும்
பொதுமக்கள் வாழ்விடத்தில்
குண்டெறிந்தால்.....
அவர்களின் சார்பாகப் பறக்குமாம்
எங்கள் பறக்கும் தட்டெனமார்தட்டி
உம் வீட்டில் குண்டுபல
போட்டு அழித்தொழிப்போம்
என்றின்று சொல்லீரோ?

ஒரு சிறங்கைத் தமிழினத்தை
அழிப்பதற்கு எத்தனையோ
வித்தைகளை
இவ்விடத்தில் செய்கின்றார்.
பேரினத்தின் விழிதொட்டு!
பறக்கும் தட்டே அதில் வந்த
பச்சைத் தமிழனே எம் வீட்டில்
குண்டுகளை எவர் ஏவி நின்றிடினும்
அவ்விடத்தில் இறங்காயோ
குண்டோடு.

திக்கவயல் தர்மு

## மனமே எல்லை

ஓடமின்றிக் கரையுங் கிட்டுமா?
ஒருநாள் உலகம் விழித்திடுமா?
பணத்தில் மகிழும் மாந்தரெல்லாம்
மனத்தால் மாறி மனிதம்
கொள்வரா?
அன்பு பாசம் பணத்திலில்லை....
அவனி மீதில் மனமே யெல்லை
அடுத்த மனிதர்... எம் துயரிலில்லை
அனைவர் மகிழ்வும் அவரவர்
செயலே!

சி.மதியழகன்,
திக்கம்

## எழுது கோல்

நான் துப்பாக்கி ஏந்திய இன்றைய
துர்ப்பாக்கிய வீரன்.
துப்பார் உள்ளத்தை துச்சமெனச்
சுடுகின்றேன்.
ஆகையால்! என்னை நோக்கி
ஆயிரம் துப்பாக்கி முனைகள்
நித்தம் நித்தம் நீள்கின்றன.

எனது துப்பாக்கி ஒருபோதும்
தோட்டாக்களைத் துப்பியதில்லை –
அது
கயவர்களின் கபடத் தோல் உரித்து
சமுதாயச் சந்தையிலே சாட்சியோடு
காட்சியிடும் கருவி -- அது
என் எழுதுகோல் நான் தரித்த
ஆற்றல் மிகு ஆயுதம்.

எனது துப்பாக்கி சன்னங்களை
உமிழ்வதில்லை
ஜனங்களின் முன் உண்மைகளை
உமிழ்கின்றது
அறியாமை இருள் விலக்கி,
அடிமை விலங்குடைக்கும்.
ஆயுதம் அது என் எழுதுகோல்
துப்பார்க்கு அது துப்பாக்கி

துப்பார் கையில் துப்பாக்கி
துணிந்தவன்
என் கையில் எழுதுகோல்
துச்சமாக மதித்து உன்
இச்சைதனைத்
திணித்தால் அச்சமின்றி
எழுதுவேன் அத்தனையும்?

என் கையில் எழுதுகோல் இருக்கும்
வரை
எட்டுத்திக்கிலும் உன் கொட்டமதை
மறைதட்டிடுவேன் முட்டாளே!
முட்டாளே பேனா முனையில்
அறிவை அரமாக்கி எழுதுகின்றேன்
உன் துப்பாக்கி முனையில் வீழ்வது
ஒருவன்தான்
என் பேனா முனையால் விழிப்போர்
ஏராளம்.
எழுதுகோல் என் ஆயுதம்;
எழுதுவேன்.
இன்னும் ஆயிரம் எழுச்சியே என்
இலட்சியம்.

கவித்துளி பிரதீபன்
வவுனியா.

## தெருக்குறள்

பலமாகத் தட்டி கூப்பாடு
போட்டால்த்தான்
கடவுளும் கதவைத் திறப்பார்.
சோதிடத்தை நம்பிக் கெட்டார் பலர்
மனோதிடத்தால் உயர்ந்தார் சிலர்.
வெற்றிபெறும் வரைதான் மாற்றார்
தூற்றுவார்
வெற்றிபின்பின்னே வாயடைத்துப் போவார்.
சிற்றின்பம் துறந்தார்க்கெல்லாம் ஈண்டு
மற்றின்பம் எல்லாம் கைகூடும்.
கண்ணை உறுத்துமாம் உடலின் ஊனம்
மண்ணே வெறுக்குமாம் உள்ளத்தூனம்.

சூசை எட்வேட்
திருகோணமலை.

## கண்ணீர்

அன்று கருத்தால் உனக்காகக் கவி
வடித்தேன்
இன்று கண்களில் உனக்காக
வடிக்கிறேன்.

## டயறி

வெற்றியையும் ஏற்கும்
தோல்வியையும் ஏற்கும்
சரித்திர நாயகன்

## பிரிவு

மனதாலும் நிகழலாம்
மானத்தாலும் நிகழலாம்

## சீதனம்

பெண்ணை சீரழிக்கும் ஆணுக்கு
பெண் வீட்டார் கொடுக்கும்
மூறப்பணம்

கு.மதன் (மது)
கணுக்கேணி மேற்கு

## புதுயுகம்

இருட்டிய இமைகளால்
இதயத்தை வருடினாய்
இமயத்தை மறந்து
இதயத்தை தந்தேன்
இம்சை என்றெண்ணி.....
இலங்கை அனுப்பினாய்.
இனியுமேன் மௌனம்?
இருட்டிய சிறக்கதவை
இரும்பினால் அடித்திடு
இனியொரு புதுயுகம்
இளமையாய் பிறந்திடும்.

தயாநிதி
உருத்திரபுரம்.

## காத்திருக்கிறேன்!

என்னவளே!
உன்;
உதடுகளுடன்
உன் உதடு பதித்துத்
தாகம் தீர்க்கலாம்.
உனது கன்னங்களுக்கு
என் மீசையால்
தீனி போடலாம்.
என் விரல்களால்
தீண்டிக் கட்டியணைத்து
களைமடலாம்.
ஆத்மாக்கே
ஆயிரம் முத்தங்களை
இட்டு ஆனந்தம் பெறலாம்.
உன்னிலேயே – ஒரு
கவிதை வரையலாம்.
இத்தனைக்கும்
நான் தயார்;
உனது அனுமதிக்கா மட்டுமே
காத்திருக்கிறேன்...?

பாலு தீபச் செல்வன்
யாழ்.பல்கலைக்கழகம்.

## காதலினால்

சாகரத்தில்
சாவின்றிப் போனால்
சந்தோஷம் தான் என்றும்
ஆனால்
சாகாவரம் பெற்ற காதலினால்

## இருட்டறை

உயிருடன் வாழும்
கருவறையும்
உயிரின்றி வாழும்
கல்லறையும்
உயிர் ஜீவன்களில்
இருட்டறையும்
இதற்கு ஒப்பானதுதான்

திருமலை நதாந்,
ஜின்னா நகர்.

## கண்ணாடி மனம்

கண்டவுடன்
தாவும் கடிவாளம்
போட்டாலும் – ஓடும்
கட்டாந்தரையில்
படுத்து – பட்டு மெத்தையில்
கனவுகாணும் கால் நொண்டி
ஆனாலும் – காரில் போக
சண்டை செய்யும் தோழமையோடு
ஏழ்மை பேசும்
துணைக்கு ஏங்கும்
துணை கிடைத்தால்
ஒதுங்கும் எல்லாமே இருந்தும்
இல்லாத ஒன்றுக்கு எப்போதும்
ஏங்கும் -- மனம்?

கே. காசினி
பளை.

## தாங்கும் இதயமல்ல பெண்ணே

உனது ஆடைகளை மாற்றிக்
கொள்.
உனது ஆபரணங்களை மாற்றிக்
கொள்.
உனது பாதணிகளை மாற்றிக்
கொள்.
ஆனால் உனது காதலைமட்டும்
மாற்றிடாதே.
அதை தாங்கும் இதயம் இது
அல்ல.

த.கண்ணன்.

## புத்தாண்டே உனக்காய் சில

புலரும் புதுக்காலை பொழுதில்
புரிந்து கொள்ள முடியா
புரிந்துணர்வின் மத்தியில்?!
புதிதாய் நீ பிறப்பதொன்றும்
புதியாத புதிரல்ல எந்தனுக்கு
சமாதானத்தை
பிரசவிக்க விடாது!
கருவினில் அதன் கழுத்தை
கயிற்றால் கட்டி
நெரித்துக் கொல்லும்!
கயவர்கள் மத்தியில் – நீ
பிறப்பது தான் வேதனையைத்
தருகிறது!!
இனங்களுக்கு இடையில்
உறவுகளை உடைத்து!
இனவாதத்தை தூண்டிவிட்டு!
பிரிவினைக் கோடு கீறி!
போதும் வளர்க்கும் சமாதான
உத்தம கோமாளிகள் மத்தியில்!
நீ நிச்சயமாய் ஏமாளியாய்
வராதே!!
இன்னொன்று கேள்!
போர் மேகங்கள் கலைந்தாலும் –
இங்கு
போர் மேகங்கள்
கலையவில்லை!
அதனால்;
புன்னகைத்து பூத்தூவி
வரவேற்க
எம்மால் முடியவில்லை
மன்னித்து விடு!!
இந்நாளில் நீ செல்லப் போகும்
செய்திக்கு முன்;
நான் சொல்லும் புண்பட்டு
புரையோடிப் போன
செய்திக்காய்
குறைப்பட்டுக் கொள்ளாதே!
எம் நாடு அப்படி உள்ளது!
இத்தனைக்கும் மத்தியிலும்
இனிதாய் நீ வருவாயானால்;
இருகரம் கூப்பி
வரவேற்கின்றோம்!
வந்துவிடு எம்மிடையே
ஒற்றுமையை வளர்ப்பதற்காய்!!!

க.இராசமலர்,
கிராஞ்சியூர்.

# பெண்ணுரிமை, சம அந்தஸ்து எல்லாம் பேச்சில் மட்டும்தானா?

பெண்ணுரிமையும் சம அந்தஸ்தும் பேச்சில் மட்டுமா?

சர்வதேச மகளிர் தினம், அன்னையர் தினம் என்றெல்லாம் கொண்டாடுகின்றார்கள். இந்த விழாக்கள் எல்லாம் சர்வதேச மட்டத்தில் கொண்டாடப்படுகின்றன.

கூட்டத்தோடு கூட்டமாகக் கோவிந்தா போட்டுக் கொண்டு மலையகத் தொழிற்சங்கங்களும் இந்த மகளிர் தினத்தை கொண்டாடுகின்றன.

மலையகத்திற்கு மட்டுமல்ல, இலங்கை முழுவதற்கும் தேசிய வருமானத்தை கட்டிக் கொடுப்பதில் மலையகப் பெண் தொழிலாளர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். அவர்கள் அதில் முதலிடத்தையும் வகிக்கின்றனர் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை.

நாட்டின் தேசிய வருமானத்திற்கு தமது பங்களிப்பை அவர்கள் வழங்குவது போல் தொழிற்சங்கங்களின் வருமானத்திற்கு 75 சதவீதமான சந்தாப் பணத்தை வழங்குபவர்களும் பெண் தொழிலாளர்கள்தான். ஆனால் இந்த மலையகப் பெண்கள் கௌரவிக்கப்படுவதில்லை. அவர்களுக்குரிய இடம் வழங்கப்படுவதில்லை.

ஏன் இவர்கள் மாதா மாதம் வாய்க்கரிசி போட்டு வளர்க்கின்றார்களே, இந்த தொழிற்சங்கங்களிலும் கூட அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை.

இதைக் கேட்டவுடன் தொழிற்சங்க வாதிகள் துள்ளிக் குதித்து விடுவார்கள். ஏன் இடம் கொடுக்கவில்லை. மாவட்ட, மாநில, தோட்டக்கமிட்டி என மாதர் சங்க தலைவிகளை நியமித்துள்ளோம். கொழும்பில் மகளிர் அணித் தலைவிகளை நியமித்துள்ளோம் என்று வீறாப்பு பேசுவார்கள்.

இவர்கள் கூறுவதும் சரி என்று வைத்துக் கொள்வோம். இவர்கள் சாதித்துக் கிழித்தது என்ன? நிர்வாக ரீதியாக பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்கு எத்தனை வீதம். அது சூனியம் தான். உண்மையாகவே இந்த மாதர் அணித் தலைவிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்பு என்ன தெரியுமா?

மலையகத் தலைவர்கள் வரும் கூட்டங்களுக்கு ஆள்திரட்டிப் கொண்டுவர வேண்டும். ஆளுக்கு ஒரு மாலை கட்டிக் கொண்டு வந்து தலைவர்களின் முகம் தெரியாமல் பூக்களால் ஆராத்தி எடுக்க வேண்டும். இது தான் மலையக தொழிற்சங்க மாதர் அணித் தலைவிகளும், பெண் தொண்டர்களும் செய்ய வேண்டிய கட்டயாக்கடமை. இதைத் தவிர வேறு எதுவுமே கிடையாது.

ஒரு சில தோட்டங்களில் தோட்டக்கமிட்டித் தலைவர்களுக்கு ஜால்ரா போடும் உபதலைவர் பதவிகள் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக சில தொழிற்சங்கங்கள் முணுமுணுக்கின்றமையும் கேட்கத்தான் செய்கிறது.

தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக இவர்களால் தோட்ட நிர்வாக்குழுவுடன் நேரடியாகப் பேச முடியுமா? அல்லது அதற்கான பயிற்சிகள்தான் வழங்கப்பட்டுள்ளதா? எதுவும் இல்லை.

இன்னும் ஒரு தொழிற்சங்கத் தலைவர், எங்களுடைய தொழிற்சங்க அலுவலகங்களில் மலையக யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கி உள்ளோம் அது தெரியவில்லையா என்று கேட்கின்றார்.

தொழில் வழங்கி உள்ளீர்கள். அதில் எத்தனை பேரை உருப்படியாக விட்டு வைத்துள்ளீர்கள். நீங்கள் கொடுக்கும் சம்பளம் அந்தப் பிள்ளைகளின் செலவுக்குப் போதுமா? அவர்கள் தங்களுக்கு ஒரு சாறியை வாங்கக் கூட உங்களுடைய சம்பளம் போதவில்லை.

நகரில் நாலு பெண்களைப் போன்று நாகரீகமாக உடுத்த வேண்டும். சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். என்று அவர்களுக்கு ஆசைகள் இருக்காதா? இதனால் அந்த இளம் பெண்கள் பசியும்பட்டினியுமாக மட்டுமல்ல நித்திய கடனாளிகளாகவும் இருக்கின்றார்கள். அப்பெண்கள் கண்ணீர் வடிப்பது மேல்மட்டத்தில் இருக்கும் தலைவர்களுக்கு எங்கே தெரியப் போகின்றது.

பெண்களுக்குச் சம உரிமை வழங்கி உள்ளோம். சம வாய்ப்புகளை வழங்கி உள்ளோம் என்று பம்மாத்து காட்டுகின்றன தொழிற்சங்கங்கள்.

மலையக அரசியல் கட்சிகளின் அணியில் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், மாகாணசபை உறுப்பினர்களாகவும் இருப்பவர்களை விட நன்கு படித்த, மூன்று மொழிகளையும் சரளமாகப் பேசக் கூடிய இளம் பெண்கள் பலர் உங்கள் தொழிற்சங்க அலுவலகங்களில் காலம் காலமாகக் கடமையாற்றுகின்றனர். நீண்ட அனுபவமும் அவர்களுக்கு உண்டு.

இவர்களுள் சிலரை ஏன் மாகாண சபைகளுக்கும் நாடாளுமன்றத்திற்கும் தெரிவு செய்யக் கூடாது?

இவர்களால் போட்டியிட முடியாது என்பது கட்சிகளின் வாதம் என்றால் அரசுக்கும், ஆட்சிக்கும் முட்டுக்கொடுக்க கட்சிக்குள் கிடைக்கும் போனஸ் அல்லது தேசியப்பட்டியல் ஆசனம் என்று உதிரியாகக் கிடைக்கும் ஆசனங்களில் ஒன்றையாவது இந்தப் பெண்களுக்கு வழங்கி கௌரவிக்கலாம் அல்லவா?

ஏன் இல்லை மத்திய மாகாணத்தில் பெண்களை போட்டியிட்ட வைத்து வெற்றி பெறச் செய்துள்ளோமே என்கின்றீர்களா? யாருடைய காதில் பூசுத்தப் பார்க்கிறீர்கள். ஐயா அவர்கள் எல்லாம் காலம் காலமாக மக்களைச் சுரண்டி வாழ்ந்த முதலாளிகளின் பம்பரை யைச் சேர்ந்தவர்கள். தொழிற்சங்கப் பெருச்சாளிகளின் வாரிசுகள்

நாம் இதைக் கேட்கவில்லை. உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தில் இருந்துவந்தவர்களுக்கும் உங்களுடைய சுகபோகத்திற்கு காலம் காலமாக தொழற்சங்க சந்தா வழங்குபவர்களின் வாரிசுகளுக்கும் இடம் கொடுத்திருக்கின்றீர்களா என்பதே எமது கேள்வி.

**– தியாகராஜா சந்திரகலா –**

உங்களுக்கு சந்தா செலுத்தவும் ஓட்டுப் போடவும் மட்டும் என்று– கறிக்கு சுவையூட்டும் கறிவேப்பிலை போன்று– மலையகப் பெண்களைத் தூக்கி எறிந்து விடாதீர்கள். அவர்களையும் கௌரவப்படுத்துங்கள். முதலில் உங்களுடைய தொழிற்சங்கங்களில் அவர்களுக்குக் கௌரவம் அளியுங்கள். சமூகத்தில் தானாகவே கௌரவம் கிடைக்கும். அப்படிச் செய்வதன் மூலமே சமூகமாற்றமும் ஏற்படும் என்பது உறுதி.

**மலையகக் கண்ணோட்டம்**
இரா. புத்திரசிகாமணி

# மலையகமே அழிந்தாலும் மந்திரிப்பதவி வேண்டும்

தணிகாசலம் அண்ணன் ஹட்டனில் நடைபெற்ற தனது உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக வந்திருந்தார். தணிகாசலம் அண்ணன் எங்கு சென்றாலும் அங்கு அவருக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் ஏதாவது ஒரு விசேஷம் நடைபெறுவது வழமை. இன்றும் அப்படியான ஒரு சம்பவத்தை அவர் காணக்கூடியதாக அமைந்து விட்டது.

பெருந்தம் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகள் பல்வேறு விதமான கோஷங்களை எழும்பிக் கொண்டே ஊர்வலமாக வந்தனர். எல்லோரும் ஒரே வயதுடையவர்களாகவே காணப்பட்டனர்.

தணி அண்ணன் ஊர்வலத்தை சற்று உள்நோக்கி ஆராய்ந்தார். ஊர்வலத்தின் மத்தியில் மலையகத்தைக் சேர்ந்த பல புத்தி ஜீவிகளும், நலன் விரும்பிகளும் கூடக் காணப்பட்டனர்.

ஊர்வலத்தில் வந்த ஆசிரியர் ஒருவர் தணிகாசலம் அண்ணனைக் கண்டு கொண்டார். மெதுவாக ஊர்வலத்தில் இருந்து விலகி தணி அண்ணனிடம் வந்தார்.

"வணக்கம் அண்ணன். நீங்கள் கட்டாயம் வருவீர்கள் என்று தெரியும்" என்று கூறிக்கொண்டே தணி அண்ணனின் கைகளைப் பிடித்துக் கொண்டார் அந்த ஆசிரியர்.

"வணக்கம் மாஸ்டர் எப்படி நல்ல சுகமாக இருக்கின்றீர்களா? நான் இங்கு சொந்தக்காரர் ஒருவருடைய கலியாண வீட்டுக்கு வந்தேன்" என்றார் தணி அண்ணன்.

"தயவுசெய்து அண்ணன் மன்னிக்க வேண்டும். ஏதோ தவறு நடந்துவிட்டது. உங்களுக்கு அழைப்பு கிடைக்கவில்லை என்றால் எனக்குப் பெரிய கவலையாக இருக்கின்றது."

"என்ன மாஸ்டர் இதைப் போய் பெரிதுபடுத்திக் கொண்டு...., இப்பொழுது தான் நான் வந்துவிட்டேனே. விசயத்தைச் சொல்லுங்கள்" என்று சமாளித்தார் தணி அண்ணன்.

"குட்டக் குட்டக் குனிபவனும் மடையன். குனியக் குனிய குட்டுபவனும் மடையன். இதனைத் தொடரவிட முடியாது. அதனால் தான் இளைஞர்கள் திரண்டுவிட்டனர். அதை உற்சாகப்படுத்த வேண்டியது நமது கடமைதானே."

"உண்மைதான் மாஸ்டர் இப்பொழுது நிலைமை எப்படி இருக்கு?"

"அண்ணனுக்குத் தெரியாததா என்ன? எல்லாம் நமது பிள்ளைகளுக்கான நியமனம்தான். அம்மா ஆட்சி அமைத்தவுடன் சி.பி.ரத்னாயக்க மந்திரியா வந்தவுடன் மலையகத்தில் படித்த இளைஞர் யுவதிகளின் விபரங்களைத் திரட்டி அவர்களுக்கு நியமனங்களை வழங்க ஏற்பாடு செய்தார் இல்லையா?"

"ஆமாம் மாஸ்டர்! அதையும் தான் இந்த ......... போனவனுங்க, நாங்க அரசுக்கு முட்டுக் கொடுக்கிறோம். நாங்கள் வந்து சேர்ந்தபின்தான் நியமனங்களை வழங்க வேண்டும் என்று தடுத்து நாசமாக்கிப் போட்டாங்களே."

"உண்மை தாங்க அண்ணே இவங்க வந்த பின்பாவது நியமனம் வாங்கிக் கொடுத்தாங்களா? அதுவும் இல்லை.




முந்தி இருந்த மந்திரியையும், செயலாளரையும் குறை கூறுவதிலேயே காலத்தைக் கடத்திப்புட்டாங்களே."

"அது மட்டும் இல்லையே மாஸ்டர், நம்ம சங்கத்து ஆளுங்க மந்திரியா வந்தாங்க, பிரதி மந்திரியா வந்தாங்க. வந்த நாள் முதல் ஜனாதிபதியிடம் பேசினோம் 14 அம்சக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள். பொலிஸ் வேலை வாங்கிக் கொடுப்போம். ஆசிரியர்களாக நியமனம் வழங்குவோம் என்றாங்கள்." என்றார் தணி அண்ணன்.

"இன்னும் ஒரு விசயத்தையும் கவனிக்கனும் அண்ணே. வந்ததில இருந்து, 'அமைச்சரவை அங்கீகரித்து விட்டது. ஜனாதிபதியிடம் பேசி உள்ளோம், என்ற தேய்ந்து போன ரெக்கோடர்களைத் தான் திருப்பி திருப்பி கோட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இதுவரை ஏதுவும் நடத்ததாக தெரியவில்லை." என்றார் மாஸ்டர் சற்றுக் கோபமாக

"அதுவும் சரிதான் தம்பி ரெண்டு மூணு நாளைக்கு முன் பேப்பரில வந்த செய்தியைப் பார்த்தீங்களா?

"ஜனாதிபதி அனுமதி வழங்கியும் ஒரு சிக்கல் ஏற்பட்டுள்ளதாம். அதனால் வெற்றிடங்கள் தொடர்பான விளம்பரங்கள் வர்த்தமானியில் வரும்போது மலையக இளைஞர்களும் கட்டாயம் அப்ளிகேசன் போட வேணும் என்று நம்ப மந்திரி வெட்கம் கெட்டத் தனமாக அறிக்கை விடுத்துள்ளாரே - இது தணி அண்ணன்."

"எதையோ பிடுங்கி வெட்டிக்கிழித்து விடுவோம் என்று சொல்லிக் கொண்டு பேய் ஓட்டிக் கொண்டவர்கள் இப்போது வர்த்தமானியைப் பாருங்கள் என்று கூறுவது கேவலமாக இருக்கின்றது." என்றும் சற்றும் கோபம் குறையாத முகத்துடன் சொன்னார் மாஸ்டர்.

"பதற்றப்படாதேங்க மாஸ்டர். இந்த தலைவர்மார் இன்று நேற்றா எம்மை ஏமாற்றுகின்றார்கள். அது அவர்களுடைய பரம்பரை குணம்தானே. நம்மைக் காட்டிக் கொடுத்து, நம்மை வைத்து அவர்கள் சுகபோகம் அனுபவித்தே காலம் கடத்தி விட்டனர். இதை மற்றவர்கள் சொல்லித் தான் தெரிய வேண்டுமா என்ன?"- மாஸ்டரை அமைதிப்படுத்தினார் தணி அண்ணன்.

"அண்ணே இன்னும் ஒரு சங்கதி கேள்விப்பட்டீங்களா?"

"ஆமாம் மாஸ்டர், நம்ப தலைவர் மிகவும் இரகசியமான முறையில் ஜனாதிபதியைச் சந்தித்து தனக்கும் ஒரு அமைச்சுப் பதவி வேண்டும் என்று கேட்டாராம். அந்த அம்மாவும் காமராஜன் பாணியில் ஆகட்டும் பார்க்கலாம் என்றாராம்." கிண்டலாகப் பதிலளித்தார் தணி அண்ணன்.

"அண்ணே எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்று அம்மாவும் ஜே.வி.பி. சகாக்களும் அடிச்சிகிட்டு மோதிக்கிரப்போ நம்ப ஐயா மந்திரிபதவிக்கு அடி போட்டுகிட்டு இருக்காரு எப்படி நம் தலைவர்களின் அரசியல் சாணக்கியம்." நமுட்டுச் சிரிப்புடன் மாஸ்டர் விட்ட இந்தக் கிண்டலை ரசித்த தணி அண்ணன்.

"அது மட்டுமா, ஒரு மந்திரி பதவி கிடைத்தவுடன் ஒரு நீர்வீழ்ச்சியை மூடலாம் என்றார். இப்போ இன்னும் ஒரு மந்திரி பதவி கிடைத்துவிட்டால் மலையகத்தையே மூடிவிடலாம் என்பார் போல இல்ல இருக்கு." - என்றார்.

**டேஸ்ட்கடை தணிகாசலம்**

# அன்னையின் ஒப்பற்ற தியாகம்

உலக வரலாற்றில் அது ஒரு முதல் நிகழ்வு. ஓர் ஒப்பற்ற அன்னையின் தியாகம். தனது மண்ணின் விடுதலைக்காக, அன்நிய ஆக்கிரமிப்பு சக்திகளுக்கெதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து மரணித்த முதல் பெண்மணி அன்னை பூபதி.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் தமிழர் தாயகம் எங்கும் வியாபித்திருந்த காலத்தில், அவர்களின் கொலை வெறியாட்டங்கள் நாளாந்தம் அரங்கேறி தமிழர் தேசமே இன்னல்பட்டுக் கொண்டிருந்தவேளை, தமிழீழ மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளை வெளிக்காட்டுவதற்காக தென் தமிழீழத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உண்ணாநோன்பிருந்து தியாகி ஆனார் அன்னை பூபதி.

17 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன அன்னை தியாகியாகி. எனினும் அன்று தமிழீழ மக்களின் ஆன்மாவைத் தட்டியெழுப்பிவிட்டிருந்த அவரின் மரணம் சாதாரண நிகழ்வு அன்று. அது ஒரு வரலாறு.

1988 பங்குனி 19 ஆம் திகதி மட்டக்களப்பு மாமாங்கம் பிள்ளையார் கோயிலில் தனது உண்ணாநோன்பை ஆரம்பித்து சித்திரை 19ஆம் திகதி மக்களுக்காகத் தன்னை அர்பணித்தார் அன்னை.

அவரின் வாழ்க்கை வரலாறும் மிகவும் கடினமானதாகவும் இழப்புக்கள் நிறைந்ததாகவும் இருந்தது.

மட்டக்களப்பு கிரானில் அன்னமுத்து பெரிய பிள்ளை தம்பதிகளுக்கு 1932 ஆம் ஆண்டு நவம்பர் 03 ஆம் திகதி புத்திரியாகப் பிறந்தார். பெற்ற பொழுதில், லட்சக்கணக்கான மக்களின் நெஞ்சங்களில் பூஜிக்கப்படும் ஒருவராகத் தங்கள் மகள் இருப்பார் எனப் பெற்றோர் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

தனது பன்னிரண்டாவது வயதில் திருமணபந்தத்தில் நுழைந்தார். சிறிது காலத்திலேயே அவரின் வாழ்க்கையில் புயல வீசியது. மீண்டும் அவர் கணபதிப்பிள்ளை என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். கால ஓட்டத்தில் தமிழர் தாயகத்தில் சிங்களப் பேரினவாதத்தின் கோரதாண்டவம் அரங்கேறத் தொடங்கியது. இராணுவக் கெடுபிடிகள், தாக்குதல்கள், கைதுகள் என அதன் பயங்கரவாதக் கைகள் நீண்டன.

இந்த வெறியாட்டங்கள் தென்தமிழீழத்திலேயே பெரியளவில் கட்டவிழ்த்து விடப்பட்டன. இவற்றுக்கு அன்னையின் குடும்பமும் தப்பவில்லை. அன்னை பூபதியின் 28 வயதுடைய மகன் ஒருவர் இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். இராணுவ நெருக்குவாரங்களால் பூபதியின் குடும்பம் மட்டக்களப்பு நாவற்கேணி பகுதிக்கு குடிபெயர நேர்ந்தது. இரண்டாவது திருமணத்தின் போது பிறந்த மூத்த மகனை அதிரடிப்படையினரின் கொலைப்பசிக்கு மீண்டும் காவு கொடுத்தார் பூபதி. மேலுமொரு மகன் இராணுவச் சுற்றிவளைப்பின் போது படையினரால் கைதாகி பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தொடர்ந்து சோகம். இடிக்கு மேல் இடி ஒரு சாதாரண குடும்பப் பெண்ணான அவரால் எப்படி இத்தனை கொடூரங்களையும் தாங்க முடிந்தது? வேதனைதான் வாழ்க்கை என்று ஆன நிலையில் இந்திய இராணுவம் வந்தது எல்லோரையும் போல், இனித் தீர்வு கிடைத்து விடும் என்றுதான் பூபதி அம்மாவும் நினைத்தார். விதி அவரைப் பார்த்துச் சிரித்தது.

இந்திய இராணுவம் வந்ததும் உடனடியாக ஒரு போர் ஓய்வு. ஆரம்பம் மகிழ்ச்சியானதுதான். ஆனால் போகப் போகத்தான் பிராந்திய வல்லாதிக்கப் பறவையின் சுயரூபம் தெரிய ஆரம்பித்தது.

இந்திய சமாதானப் புறா தன் இறக்கைகளை விரித்தபோதுதான் அதன் சிறகுகளின் கீழே மறைக்கப்பட்டிருந்த பீரங்கிகளின வாய்கள் வெளித்தெரிந்தன. நம்பியிருந்த மக்களை ஏமாற்றி விட்டு நயவஞ்சகம் புரிய ஆரம்பித்தது இந்திய அமைதிப்படை. சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாயிற்று தமிழர் வாழ்வு. இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களை எதிர்த்துப் போராட அன்னையர் முன்னணி தயாரானது.

இந்தியப்படைகளின் செயற்பாடுகளை நிறுத்தக் கோரி முதலில் இரு தமிழ்ப் பெண்கள் சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். திருமதி அன்னம்மாடேவிட், திருமதி நடேசம்மா வடிவேல் ஆகியோரே போராட்டத்தை ஆரம்பித்தனர். எனினும் இந்திய இராணுவத்தின் வஞ்சகச் சூழ்ச்சியால் அவர்களின் போராட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது.

அன்னைபூபதி உறுதியான ஒரு போராட்டத்துக்கு தயாரானார். சாகும் வரை உண்ணாநோன்பிருக்க முடிவுசெய்தார். உலகிற்கு அஹிம்சையைக் கற்றுக்கொடுத்த காந்தி தேசத்துக்கு எதிராக அஹிம்சை ரீதியாகப் போராடப் புறப்பட்டார் . இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தார். முதலாவது இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளுடன் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும். இரண்டாவது இந்திய அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும்.

-கலன்-

மாமாங்கம் பிள்ளையார் கோயிலில் 1988 பங்குனி 19 இல் தனது அஹிம்சைப் போராட்டத்தை அவர் தொடங்கினார். நாட்கள் செல்லச் செல்ல இந்தியப்படைகளினதும், இந்திய அரசினதும் போலி முகமூடிகள் கிழித் தெறியப்படலாயின. அதன் சுயரூபம் வெளியுலகிற்கும் தெரியத் தொடங்க அன்னை பூபதியின் போராட்டத்தை தடுத்து நிறுத்த இந்திய இராணுவம் முழுப்பிரயத்தனம் செய்தது. பூபதியின் இலட்சிய வேள்விக்கு முன்னால் எதுவும் பலிக்கவில்லை. எ 1988 சித்திரை 19 ஆம் திகதி அன்னைதன்னுயிரைத் தியாகம் செய்தார்.

அன்னைபூபதி எமது மக்களுக்காக, எமது மண்ணுக்காக எமது மக்களின் விடுதலைக்காக, எமது மண்ணினின் விடுதலைக்காக தனது உயிரை அர்பணித்தார். தனது உடலை வருந்தியே மரணத்தைத் தழுவினார்.

அவரின தியாகம் எதிரிகளை சுட்டெரித்து விரட்டியடித்தது என்ற உண்மையை ஆக்கிரமிப்பு படைகள் காலவோட்டத்தில் உணர்ந்து கொண்டன.










இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஏப்ரல். 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது.